விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 13 வெள்ளிக்கிழமை (30.09.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 285

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## நயினாதீவுக்குச் சென்று திரும்பிய யாழ்.இந்து மாணவன் விபத்தில் பலி

### குறிகாட்டுவானில் சம்பவம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினால் நயினாதீவு அம்மனுக்கு நடத்தப்படும் நவராத்திரி பூசையில் கலந்து கொள்ளச் சென்ற மாணவன் ஒருவர் விபத்தில் சிக்கி உயிரிழந்தார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் புங்குடுதீவு குறிகாட்டுவான் இறங்குதுறைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்துச் சம்பவத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தரம் 09இல் கல்வி பயிலும் திருநெல்வேலி முடமாவடியைச் சேர்ந்த நல்லைநாதன் தனுஷன் (வயது 14) என்ற மாணவரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சமூகத்தினர் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தில் நவராத்திரி தின இரண்டாம் நாள் பூசை மேற்கொள்வது வழக்கம். (19ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேசப் போருக்கு இன்று பதில் கிடைக்கும்

## அமைச்சர் நிமால் தெரிவிப்பு

(கொழும்பு)

போர்க் குற்றச்சாட்டுகளை மையப்படுத்தி சர்வதேச சமூகத்துடன் இடம்பெற்றுவரும் போராட்டத்திற்கு ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இன்று பதில் கிடைக்கும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.இலங்கையின் நற்பெயருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் புலம்பெயர்ந்த தமிழர்களும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனத்தினரும் மேற்கத்தைய நாட்டவரும் செயற்படுவதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை விமானம் பாரிஸில் தடுத்து வைப்பு

(பாரிஸ்)

ஸ்ரீலங்கா எயார்லைன்ஸ் (யுஎல்-564) விமானமானது தொழில்நுட்பக் கோளாறு காரணமாகக் கடந்த ஒரு வாரகாலத்திற்கு முன்பிருந்தே பாரிஸிலுள்ள டிகோல் விமான நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதென ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விமானத்தில் பயணம் மேற்கொள்ளவிருந்த பயணிகளுக்கு வேறு விமானங்களில் பயணம் செய்யும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விமான நிறுவனம் கூறியுள்ளது.

இந்நிலையில் கடந்த செப்டம்பர் 23ஆம் திகதி லண்டன் – கொழும்பு விமானம் பாரிஸிற்குப் பறந்து அங்கிருந்து இலங்கை வரவிருந்த பயணிகளையும் ஏற்றிக்கொண்டு கொழும்புக்கு வந்ததென அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

விமானத்தின் திருத்தவேலைகளில் இலங்கைப் பொறியியலாளர்களும் எயார் பிரான்ஸ் நிறுவனமும் ஈடுபட்டுள்ளன. (ச-5)

## மின்சாரம் தாக்கி ஊழியர் பலி

(சாவகச்சேரி)

மின்சாரம் தாக்கி மின்சாரசபை ஊழியர் ஒருவர் உயிரிழந்தார். இச்சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் பளையில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் மட்டுவிலைச் சேர்ந்த நவரட்ணம் அனோஜன் (வயது 22) என அடையாளம் காணப்பட்டார்.

இச்சம்பவம் மின்சார சபையின் கவனயீனத்தினாலேயே (20ஆம் பக்கம் பார்க்க)

## பழைய பூங்காவை இடிக்க இடைக்காலத் தடைவிதிப்பு

(யாழ்ப்பாணம்)

பழைய பூங்காவை இடிப்பதற்குத் தொல்பொருள் திணைக்களம் தடை விதித்துள்ளது. நாட்டின் மரபுரிமைச் சின்னமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள 130 வருடங்கள் வரலாற்றைக் கொண்ட பழைய பூங்காவின் சுற்றுமதில் இடித்தழிக்கப்பட்டது.

பாதுகாப்புக் கருதிச் சுற்றுமதிலை உடைப்பதை நிறுத்துமாறு யாழ்.அரச அதிபர் இமெல்டா சுகுமார் கேட்டுக்கொண்டபோதும் அதனைப் புறக்கணித்து யாழ்.மாநகர சபை ஊழியர்களால் முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசாவின் உத்தரவின் பேரில் சுற்றுமதில் நேற்று மாலை வரை இடிக்கப்பட்டது.

இந்தப் பணியை மேற்கொள்ளுமாறு வடமாகாண பொதுநிர்வாக செயலர் ச.இராசநாயகம் யாழ்.மாநகர சபைக்கு அனுப்பி வைத்த கடிதத்துக்கு (19ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழரை கனடா அரசு நாடு கடத்தியது

(ரொரன்டோ)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு வரி சேகரிப்பின் மூலம் நிதி சேர்த்தார் என்ற குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட இலங்கைப் பிரஜை ஒருவரைப் போர்க்குற்றவாளி எனக் கூறியுள்ள கனேடியப் பிராந்திய நீதிமன்றம் அவரைக் கனடாவிலிருந்து நாடு கடத்துமாறும் (02ஆம் பக்கம் பார்க்க)

## புனர்வாழ்வு பெற்ற போராளிகள் ஆயிரத்து 700 பேர் இன்று விடுதலை

புனர்வாழ்வளிக்கப்பட்ட சுமார் ஆயிரத்து 700 போராளிகள் இன்று விடுதலை செய்யப்படவுள்ளதாகப் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு அறிவித்துள்ளது.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் சிரேஷ்ட ஆலோசகர் எம்.எஸ்.சதீஸ், இந்நிகழ்வு இன்று காலை 11 மணியளவில் இடம்பெறவுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலைமையில் அலரி மாளிகையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது 11 ஆயிரத்து 700 விடுதலைப் புலிகளின் போராளிகள் சரணடைந்ததாகவும் இவர்களில் 8 ஆயிரத்து 240 பேர் இதுவரை விடுதலை செய்யப்பட்டுள்ளதாகவும் சதீஸ் மேலும் கூறியுள்ளார். (ச-5)

## நாடு கடத்தப்பட்ட ஐம்பது பேரும் புலனாய்வுப் பிரிவினரால் பொறுப்பேற்பு

(இலண்டன்)

பிரித்தானியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட 50 இலங்கையர்களும் நேற்றுக் காலை 10.26 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். 100 பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பாதுகாப்புடன் மேற்படி 50 பேரும் இலங்கையை வந்தடைந்துள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த மேற்படி நபர்களைத் தேசிய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பொறுப்பேற்றுள்ளனர். இவ்வாறு இலங்கை வந்தவர்களில் 42 ஆண்களும் 08 பெண்களும் உள்ளடங்குவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இவர்கள் (19ஆம் பக்கம் பார்க்க)

பயனீர் அக்ரோ ரெக்ஸ்
PIONEER AGRO TEX
சல்வார் ரகங்கள், சாரி ரகங்கள், வேஷ்டி ரகங்கள்,
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து
மொத்த வியாபாரம் செய்பவர்கள்.
சைனா வீதிக்கு அருகில்
பிரைம் பிளாசா
261/19, பிரதான வீதி,
கொழும்பு-11
M:- 077 1077215
Ph:- 011 2394906
pmsandco@yahoo.com
Near China Street,
PRIME PLAZA
261/19, Main St.,
Colombo-11

## சட்டத்தரணிகள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்ற வளாகத்திற்குள் கைதி ஒருவர் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் மேற்கொண்ட பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது.

இது தொடர்பாக சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள குறிப்பு வருமாறு, கடந்த 19 ஆம் திகதி பிற்பகல் யாழ்ப்பாண நீதிமன்றங்களின் வளாகத்திற்குள் நபர் ஒருவரை கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சில பொலிஸ் (20ஆம் பக்கம் பார்க்க)

**வர்த்தகப் பெருமக்களே...**

**வியாபாரத்தைப் பதிவு செய்தல்**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

VTL மெனேஜ்மென்ட்
கொழும்பு-03
0729994777
0117902938


# ஞானச்சுடர் வெளியீடு

(மருதங்கேணி)

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் புரட்டாதி மாத இதழ் இன்று காலை 10.30 மணியளவில் வெளியிடப்படவுள்ளது.

இதன் வெளியீட்டு உரையை சிவ.ஆறுமுகசாமி, மதிப்பீட்டு உரையை துரை. கணேசமூர்த்தி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (எ-12,35)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/வட்டு இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் தினமும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி திறந்த வெளியரங்கில் கல்லூரி அதிபர் சி.சிவகணேசசுந்தரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத் திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.தமிழ்மாறன், சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவரும் யாழ்.போதனா வைத்தியசாலையின் மருத்துவருமான பா.திருமாறன், மாகாணக் கல்வித் திணைக்களத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.மணிமார்பன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையை சித்தன்கேணி சிவன் தேவஸ்தானக் குருக்கள் சிவஸ்ரீ சபா.வாசுதேவனும் நிறுவுநர் நினைவுப் பேருரையைத் தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரனும் நிகழ்த்தவுள்ளனர். (எ-9,17)

# இடம்பெயர்ந்த மக்களுக்கென 10 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகள் இந்தியா வழங்குகிறது

வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு 10 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகள் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ளதாகக் கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகராலயம் தெரிவித்தது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளுக்கிணங்கவே 67 மில்லியன் ரூபாய் பெறுமதியான இந்த 10 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன.

இலங்கை அரசாங்கத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின்போது இயல்பு வாழ்க்கைக்கு மீளத் திரும்புவதற்கு அவசியமானதும் வயது, பால் மற்றும் கலாசார வேறுபாடுகளின்றி முழு சமூகத்தினாலும் பயன்படுத்தப்படுவதுமான சாதனமாக துவிச்சக்கர வண்டிகள் அடையாளம் காணப்பட்டதாக இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

இத் துவிச்சக்கர வண்டிகளைத் தயாரித்து விநியோகிப்பதற்கான ஒப்பந்தங்களை இந்தியாவின் முன்னணி நிறுவனமொன்றுக்கு இந்திய உயர்ஸ்தானிகராலயம் வழங் கியிருந்தது. நவம்பர் மாத முற்பகுதியில் உரிய பயனாளிகளுக்கு இவை வழங்கப்படவுள்ளன.

இதேவேளை குறித்த துவிச்சக்கர வண்டிகளைப் பொருத்தும் நிரந்தர நிலையமொன்றை வவுனியா நகரில் அமைப்பதற்கும் மேற்படி துவிச்சக்கரவண்டி விநியோக நிறுவனம் இணங்கியுள்ளது. இதனால் உள்ளூர் மக்கள் பலருக்குத் தொழில் வாய்ப்புக் கிடைக்கும் என இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.(ச-5)





கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றம், நீதவான் நீதிமன்ற கட்டிட தொகுதி மற்றும் வவுனியா மாவட்ட நீதிமன்றம் ஆகியன நேற்று வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. நீதிஅமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்க ஆகியோர் இக்கட்டிடத் தொகுதியை உத்தியோகபூர்வமாக திறந்துவைத்தனர்.

# சவேந்திர சில்வாவைப் பாதுகாக்கும் பொறுப்பு பான் கீ மூனிடம் ஒப்படைப்பு

## மேல் மாகாண சபை அமைச்சர் உதய கம்மன்பில

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை பாதுகாக்கும் பொறுப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூனிடம் கையளித்துள்ளதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

அத்துடன் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை எந்தவொரு நீதிமன்றத்தாலும் விசாரணைகளுக்கு அழைக்க முடியாது எனவும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து மகாவலி கேந்திர நிலையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாண சபை அமைச்சர் உதய கம்மன்பில, ஐ.நாவின் இராஜதந்திர ரீதியிலான சிறப்புரிமைகளுக்கு சர்வதேச நாடுகள் மதிப்பளிக்கவேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஐ.நாவில் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதியாக உள்ள மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு அமெரிக்காவின் நீதிமன்றம் ஒன்று அழைப்பாணையும் விடுத்துள்ளது.

இது வேடிக்கையான விடயமாகும். ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தர பிரதிநிதிகளுக்கான இராஜதந்தர அந்தஸ்துகளின் அடிப்படையில் நீதிமன்றத்திற்கு சவேந்திர சில்வாவை அழைக்க முடியாது.

இவ்வாறு அவரை நீதிமன்றத்திற்கு அழைக்க வேண்டுமாயின் முதலில் இலங்கை அரசாங்கத்துக்கு அறிவித்து அவரது இராஜதந்திர அந்தஸ்தை இல்லாதொழிக்க வேண்டும் அல்லது ஐக்கிய நாடுகள் சபை அவரை வெளியேற்ற வேண்டும். இது இரண்டுமே நடைபெறாத விடயமாகும்.

எவ்வாறாயினும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தொடருக்காக சென்றபோது இப்பிரச்சினை தொடர்பில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பான் கீ மூனுக்கு தெளிவு படுத்தியிருந்தார்.

எனவே மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவை பாதுகாக்கும்பொறுப்பு ஐக்கிய நாடுகள் சபைக்கே உள்ளது எனவும் ஜாதிக ஹெல உறுமயவின் மேல் மாகாண சபை அமைச்சர் உதய கம்பன்பில தெரிவித்துள்ளார்.(ச-5)


# மரண அறிவித்தல்

## கண்ணதாசன் கிருஸ்ணரூபன் (கிருஸ்ணா)



மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்ட கண்ணதாசன் கிருஸ்ணரூபன் 29.09.2011 நேற்று வியாழக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற தருமலிங்கம்-அன்னலெட்சுமி, அல்லைப்பிட்டி இராசலிங்கம்-பரமேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேரனும், கண்ணதாசன்-மேனகா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், வாகீசனின் அன்புச் சகோதரனும், ரூபிகா (லண்டன்), ரேணுகா ஆகியோரின் பெறாமகனும், பிறேமகாந்தனின் (சுவிஸ்) மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் அவரது இல்லத்தில் நடைபெற்று, 30.09.2011 இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பூதவுடல் தகனக் கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

6ஆம் வட்டாரம், மண்டைதீவு. தகவல்: குடும்பத்தினர் (இ)


# நிறுவுனர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யா/தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலயத்தின் நிறுவுநர் தினமும் பரிசு நாளும் எனும் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் இ.கணேசானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகத் தொல்புரம் விக்னேஸ்வராக் கல்லூரியின் ஓய்வுபெற்ற அதிபர் மு.ஜெயகுமார் மற்றும் யா/வட்டு மத்திய கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி நந்தினி ஜெயக்குமார் ஆகியோரும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் கல்வி வலயத்தின் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் கு.சிவகுமாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச-9)

# நவராத்திரி விழா

சிறுவர் பூங்கா முன்பள்ளியும் குழந்தைகள் காப்பகமும் இணைந்து நடத்தும் நவராத்திரிப் பெருவிழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் சிறுவர் பூங்கா முன்பள்ளியில் தலைவர் பா.தனபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்குப் பிரதம விருந்தினராக முன்பள்ளி பிள்ளை அபிவிருத்தித்துறையின் கல்விப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா, சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி ஞா.கணேசநாதன் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ச-9)

# இலங்கை...

உத்தரவிட்டுள்ளது.

பூவரசன் துரைராஜா என்றழைக்கப்படும் 36 வயதுடைய இலங்கையர் கனடாவிற்குச் செல்லும் முன்னர் இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் இணைந்து செயற்பட்டவர் என கனடாவிலுள்ள பிராந்திய நீதிமன்றம் ஒன்று அறிவித்துள்ளது.

பாடசாலையில் கல்வி கற்று முடிந்ததும் தனது சகோதரனுடன் யாழ்ப்பாணத்திலுள்ள தொழிற்சாலையொன்றில் தான் பணிபுரிந்து வந்ததாகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உறுப்பினர்கள் தொழிற்சாலைக்கு வரிப்பணம் பெற வந்து செல்வார்கள் என்றும் தன்னை அவர்கள் பக்கம் சேர்க்க முயற்சித்தபோது தான் அதற்கு மறுப்புத் தெரிவித்ததாகவும் பூவரசன் துரைராஜா கனேடிய அதிகாரிகளிடம் கூறியுள்ளார். (ச-5)


**தவறிவிட்டது**

UX-9119 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் ஆவணங்கள் இணுவிலுக்கும் திருநெல்வேலிக்குமிடையில் கடந்த 28.09.2011 அன்று தவறிவிட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- தேவி சலூன்
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
T.P.:- 077 3106974
K. பிரசாந் (6455)

**வீடு வாடகைக்கு**

பருத்தித்துறை வீதி, சிறுப்பிட்டி மத்தி, நீர்வேலியில் (பெற்றோல் செற் அருகாமை) வாகனத் தரிப்பிடங்கள் மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடு நிறுவனங்களுக்கு மட்டும் வாடகைக்கு உண்டு.

தொடர்புக்கு:- 077 9149221
075 6715762
(6440)

**வீடு விற்பனைக்கு**

சுதுமலை வடக்கு, மானிப்பாயில் 2 1/2 பரப்புக் காணியில் பெரிய கல் வீடு உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:-
T.P.:- 0754985939
0773502821
(6443)

# இன்று ஒரு தகவல்

## இந்தப் போர்வை யாருக்காக...?

ஓர் ஊரிலே ஒரு பெரிய மன்னர் இருந்தார். அவர் ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அடிக்கடி கோயிலுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபடுவார். வழக்கம்போல ஒருநாள் கோவிலுக்குச் சென்று கடவுளை தரிசித்து விட்டு திரும்பி வரும்போது கோயில் மரத்தடியிலே ஒரு சந்நியாசி உட்கார்ந்திருந்திருப்பதைக் கண்டார்.

அவர் கண்களை மூடிக்கொண்டு தியானத்தில் இருந்தார்.

மன்னர் அவரை கவனித்துவிட்டு, அருகில் சென்று ஆசீர்வாதம் பெற ஆசைப்பட்டார். பின்னர் சந்நியாசியின் அருகில் போய் நின்றார். அப்போது அவர் கண்ணைத் திறந்து பார்த்தார்.

உடனே அவர் காலில் வீழ்ந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார்.

அதன்பின்னர் மன்னர் தன்னிடமிருந்த விலையுயர்ந்த சால்வை ஒன்றையெடுத்து அந்தச் சந்நியாசிக்குப் போர்த்திவிட்டு, "நான் சென்று வருகிறேன் சுவாமி" என்று கூறிவிட்டு விடை பெற்றார்.

மறுநாள் காலையில் மன்னர் அரண்மனை மேல் மாடத்தில் நின்று கொண்டிருந்தார்.

அப்போது தெருவோரமாக ஒரு பிச்சைக்காரன் நடந்து செல்வதை அவதானித்தார். அவனைப் பார்த்ததும் மன்னருக்கு அதிர்ச்சி... ஏன் தெரியுமா?

நேற்றையதினம் அந்தச் சந்நியாசிக்கு ஒரு விலையுர்ந்த சால்வையைப் போர்த்தினார் அல்லவா? அதே சால்வையை இப்போது அந்தப் பிச்சைக்காரன் போர்த்திக் கொண்டு போகிறான்.

மன்னர் உடனே காவலர்களை அழைத்து அந்தப் பிச்சைக்காரனை அழைத்து வரும்படி கூறினார்.

காவலர்கள் அழைத்து வந்து மன்னர் முன் நிறுத்தினார்கள்.

அப்போது மன்னர், "ஏதுடா... இந்தப் போர்வை... உனக்கு?" என்று விசாரித்தார்.

"கோயில் வாசலில் வைத்து ஒரு சந்நியாசி இதை எனக்குக் கொடுத்தார்" என்று சொன்னான்.

"உடனே போய் அந்த சந்நியாசியை இங்கே கொண்டு வாருங்கள்" என்று உத்தரவிட்டார்.

சந்நியாசி வந்து சேர்ந்தான். என்ன நடந்தது என்று விசாரித்தார் மன்னர்.

மன்னா! நீங்கள் இந்தப் போர்வைவ்யை எனக்குப் போர்த்தி விட்டு சென்ற போது சிறிது நேரம் கழித்து இந்தப் பிச்சைக்காரன் ஒரு கிழிந்த துண்டைக் கட்டி அவ்வழியாக வந்தான். உடம்பு குளிராலே நடுங்கிக் கொண்டிருந்தது. பார்க்கப் பரிதாபமாக இருந்தது. அதுதான் உடனே இதை எடுத்து அவனுக்குப் போர்த்தி விட்டேன் என்றார்.

இருந்தாலும் இது எனக்குச் செய்த அவமரியாதை... இது மிகவும் விலையுயர்ந்த சால்வை... மன்னர்களுக்கு என்று நெய்யப்பட்டது. அதை உங்களுக்குக் கொடுத்தேன். அதை நீங்கள் ஒரு பிச்சைக்காரனிடம் கொடுத்துவிட்டீர்கள்.

மன்னருக்குக் கோபம் குறையவில்லை. சந்நியாசி சிரித்தான். அந்தச் சிரிப்பு மன்னனின் கோபத்தை மேலும் அதிகப்படுத்தியது. அதன் விளைவாக அந்தச் சந்நியாசி சிறையில் அடைக்கப்பட்டான்.

அன்றிரவு மன்னர் தூக்கத்தில் ஒரு கனவு கண்டார். அந்தக் கனவில் மன்னர் மறுபடியும் அந்தக் கோயிலுக்குப் போவதாகவும் ஆண்டவன் சந்நிதியில் போய் நிற்பதாகவும் அவ் வேளையில் கடவுள் குளிரால் நடுங்கிக் கொண்டிருப்பது போலவும் கண்டார்.

"ஆண்டவா! என்ன நடந்தது உனக்கு?"

"குளிர் தாங்க முடியவில்லையே... பார்த்தால் தெரியவில்லையா...?"

உடனே மன்னர் தன்னிடமிருந்த அந்த விலையுயர்ந்த சால்வையை எடுத்துக்கொண்டு ஆண்டவனை நெருங்கினார்.

ஆண்டவர் கத்தினார். "என்ன அது? உன் சால்வையா? வேண்டாம் எனக்கு" என்றார்.

"கடவுளே! இதை ஏன் வேண்டாம் என்று சொல்கிறீர்கள்? நான் என்ன பாவம் செய்தேன்!

"நேற்று ஒரு சால்வையை எனக்குக் கொடுத்தனுப்பினாய்! அதைக் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தவனுக்கு நீ ஒரு பரிசு கொடுத்திருக்கிறாய்! என்ன பரிசு தெரியுமா? சிறைத்தண்டனை!" என்றார்.

அவ் வேளையில் மன்னரை யாரோ தலையில் தட்டுவதுபோல் இருந்தது. திடீரென்று விழித்துக்கொண்டார். அவருக்கு இப்போது எல்லாம் புரிந்தது. எழுந்து ஓடிப்போய் சிறையின் கதவுகளைத் திறந்துவிட்டார். சந்நியாசியின் கால்களில் விழுந்தார். சுவாமி! "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்!" சந்நியாசி முகத்தில் மறுபடியம் சிரிப்பு!

மன்னா! கஷ்டப்படுபவர்களுக்குச் செய்கிற உதவிதான் கடவுளுக்குச் செய்கிற தொண்டு! அதைப் புரிந்துகொள்... என்று கூறிவிட்டு தெருவில் இறங்கி நடக்க ஆரம்பித்தார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவு மீளெல்லைப்படுத்தும் திட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பிரதேச எல்லைகளை மீளெல்லைப்படுத்தல் தொடர்பான கூட்டம் நேற்று துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன் தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மேற்குறித்த பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட 20 கிராம சேவையாளர் பிரிவுகளை 14 கிராம சேவையாளர் பிரிவுகளாக்குவதற்கு கலந்துரையாடல் இடம்பெற்றபோது மக்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்தனர்.

அத்தோடு 14 கிராம சேவையாளர் பிரிவுகளாக்குவது தொடர்பில் புவியியற் காரணிகள் மற்றும் போக்குவரத்து சனத்தொகை போன்றவற்றில் தாம் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

எனவே, இதற்கான தீர்மானம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் எடுக்கப்படவுள்ளது.

இத்தீர்மானம் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர்கள், அபிவிருத்தி தொடர்பான உத்தியோகத்தர்கள் கொழும்பிலிருந்து வருகை தரவுள்ள மீளெல்லைச் செயலணி குழுவினரால் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-3)

# இராசி பலன்

30.09.2011
(புரட்டாதி 13, வெள்ளிக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
திருதியை முற்பகல் 10.27 மணிவரை
சுவாதி பிற்பகல் 1.25 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
சதுர்த்தி விரதம்.

**மேடம்** பொன்னான நாள், கடன் பிரச்சினையை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், உடல் நலம் சீராகும், வெளியூர்த் தொடர்புகளால் நன்மையுண்டு, சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும்.

**இடபம்** பிள்ளைகளின் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் கிடைக்கும், குடும்பத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**மிதுனம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படும் நாள், பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கடகம்** மங்கல ஓசை மனையில் கேட்பதற்கான அறிகுறி தோன்றும், புதிய நபர்களின் அறிமுகம் கிட்டும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், வெறுப்பாக இருந்தவர்களே மனம் மாறுவர்.

**சிங்கம்** சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், தொழில் சம்பந்தமாக முக்கிய நபர்களைச் சந்தித்து முடிவெடுப்பீர்கள், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**கன்னி** பணியாளர் தொல்லை அகலும், தொழில் வளர்ச்சிக்கு மங்கையர் வழி ஒத்துழைப்பு கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.

**துலாம்** மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்றுக் கொள்வது நல்லது.

**விருச்சிகம்** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், பணத்தேவைகள் பூர்த்தியாகும், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**தனுசு** இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு, தித்திக்கும் செய்திகள் வந்து சேரும் நாள், பொருட் சேர்க்கையுண்டு.

**மகரம்** எண்ணிய காரியம் எளிதில் நிறைவேறும், ஆடம்பரப் பொருட்கள் மீது அதிக ஆர்வம் காட்டுவீர்கள், கலைத்துறை சம்பந்தப்பட்டவர்களால் நன்மையுண்டு.

**கும்பம்** நேற்றைய பணியொன்று இன்று தொடரலாம், மாற்று மருத்துவத்தால் உடல் நலம் சீராகும், தந்தை வழி உறவினர்களால் ஏற்பட்ட மனக்கசப்பு மாறும், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

**மீனம்** வரவும்- செலவும் சமமாகும், எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்வது நல்லது, அலைச்சல்கள் அதிகரிக்கும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், குடும்பத்தில் சிறு வாக்குவாதங்கள் ஏற்படலாம்.

வளவன்

# கரித்தாஸ்- கியூடெக் நிறுவனத்தினால் உளநலதினம் அனுஷ்டிப்பு

கரிதாஸ் கியூடெக் நிறுவனம் நடத்தும் உலக உளநல தினத்தை முன்னிட்டு செவிமடுத்தல் மூலம் ஆரோக்கியமான உறவை வளர்ப்போம் எனும் தொனிப் பொருளில் ஓவியம், கவிதை ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

இதில் ஓவியப்போட்டியானது, பாடசாலை மட்டத்தில் தரம் 10 முதல் உயர்தரம் வரை திறந்த போட்டிகளாக அளவு A3 (29.7 cm x 42cm) நடைபெறும். எந்த வகையான வர்ணங்களும் பாவித்து வரையலாம். கவிதைப் போட்டியானது, புதுக்கவிதை அல்லது மரபுக் கவிதையில் அமைவதோடு கவிதை வரிகள் 12 முதல் 18 வரை அமைதல் வேண்டும். இதற்கமைய ஆக்கங்கள் அனைத்தும் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் உள நல இணைப் பாளர், கரித்தாஸ் யாழ்ப்பாணம்- கியூடெக், இல.14 தியோகு பாதை, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (4-2-12)

# புண்ணியகிராம நிகழ்ச்சித்திட்டம்

தீவக பிரதேசத்திற்கான இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் புண்ணியகிராம நிகழ்ச்சித்திட்டம்-2011 இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஸ்ரீநயினாதீவு மலையின் ஐயனார் ஆலயத்தில் இந்துசமய கலாசார உத்தியோகத்தர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீநயினாதீவு அம்பாள் ஆலய தலைவர் ஆ.தியாகராஜா, சிறப்பு விருந்தினர்களாக ஸ்ரீநயினாதீவு மலையின் ஐயனார் ஆலயத் தலைவர் மு.மகாலிங்கம், மலையின் ஐயனார் ஆலய முகாமையாளர் வி.ஆர்.கே.இரத்தின சபாபதி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இதில் விரிவுரை ஒன்றினை மனித விழுமியங்களை மேம்படச் செய்தல் எனும் விடயம் பற்றி யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் பிரமச்சாரி யாக்ரத் சைதன்யா சுவாமிகள், விரிவுரை 2 இனை ஆரோக்கிய வாழ்விற்கு ஆன்மீகம் எனும் விடயம் பற்றி பொ.சந்திரவேல், விரிவுரை 3 இனை பெற்றோர், பிள்ளைகள் ஒருவரையொருவர் மனோதத்துவ ரீதியில் புரிந்து கொள்ளல் எனும் விடயம் பற்றி ந.நவராஜ் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.(4-12)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 100 | 90 | 80 |
| தக்காளி | 35 | 70 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 40 | 30 |
| கோவா | 30 | 60 | 35 |
| கரட் | 50 | 90 | 40 |
| பூசணி | 25 | 30 | 25 |
| புடோல் | 30 | 20 | 30 |
| வாழைக்காய் | 35 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 90 | 90 | 90 |
| பெரிய வெங்காயம் | 60 | 50 | 70 |
| பாகற்காய் | 80 | 110 | 80 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 60 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 | -- |
| பயற்றங்காய் | 50 | 50 | 70 |
| லீக்ஸ் | 50 | 80 | 50 |
| பீற்றூட் | 20 | 20 | 15 |
| கறிமிளகாய் | 50 | 40 | 45 |
| முருங்கைக்காய் | 50 | 90 | 40 |
| போஞ்சி | 90 | 110 | -- |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | -- |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 15 |
| தேசிக்காய் | 220 | 240 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 |

# ஆளும் கட்சி உறுப்பினர் கோமகன் விடுதலை குறித்து பிரேரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் ஆளும் கட்சி உறுப்பினர் மு.கோமகனின் விடுதலையை வலியுறுத்தி மாதாந்தக்கூட்டத்தில் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

யாழ்.மாநகரசபையின் இவ்வருடத்திற்கான 9 ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டம் முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற்படி பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்டது.

இப்பிரேரணையை எதிர்க்கட்சி உறுப்பினரான றெமிடியஸ் முன்வைத்ததோடு சபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

அந்தப் பிரேரணையில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன.

அதாவது யாழ்.மாநகர சபையின் உறுப்பினரான மு.கோமகன் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக கைது செய்யப்பட்டு விசாரணைகள் எதுவும் இன்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இவர் சுதந்திரமாக சபை நடவடிக்கைகளில் பங்கு பற்றுவதற்கு அவரை விடுதலை செய்ய வேண்டும். அத்தோடு கைது செய்யப்பட்டதற்கு வலுவான சான்றுகள் இருந்தால் குற்றப்பத்திரத்தை உடனடியாக நீதிமன்றில் தாக்கல் செய்ய வேண்டும்.

யாழ்.மேல் நீதிமன்றில் அந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் றெமிடியஸ் தனது பிரேரணையில் குறிப்பிட்டார்.

இதேவேளை உறுப்பினர் கோமகன் கைது தொடர்பாக சபையில் விளக்கமளித்தார். அதில் கடந்த 2010 ஆம் ஆண்டு 8 ஆம் மாதம் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு கொழும்பு குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினரால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கொழும்பு 2 ஆம் மாடிக்கு கொண்டு செல்லப்பட்டேன்.

பின்பு விடுதலைப்புலிகளுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 7 மாதங்ள் கொழும்பு பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்டேன். அதற்கு பின்பு புதிய மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டு இன்று (நேற்று) யாழ்.மாநகர சபைக்கு கொண்டு வரப்பட்டுள்ளேன்.

முன்னாள் விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் சமூகத்தில் இணைக்கும் நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. அதேபோன்று அரசியல் கைதிகளையும் விடுதலை செய்ய கட்சி வேறுபாடு இன்றி உண்மையான மனதோடு அனைவரும் அரசாங்கத்தை வலியுறுத்த வேண்டும்.

இதுதவிர என்மீது எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் நீதிமன்றில் இதுவரை தாக்கல் செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் கோமகனை ஒரு மாதத்திற்குள் விடுதலை செய்வதற்கான நடவடிக்கையை தாம் எடுப்பதாக முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

அத்தோடு சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ஜனாதிபதிக்கும் சட்டமா அதிபர்களுக்கும் நீதி அமைச்சர், பாதுகாப்பு செயலர் ஆகியோருக்கு மகஜராக அனுப்பி வைப்பதாகவும் சபையில் ஏகமனதாக முடிவு எடுக்கப்பட்டது. (4-6)

# சர்வதேச சிறுவர் தினவிழா

(யாழ்ப்பாணம்)

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் வடமாகாண கிராமிய சிறுவர்கள் பங்கு பெறும் சர்வதேச சிறுவர்தினம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் யா/காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய மாணவி செல்வி கிந்துசா பாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், சிறப்பு விருந்தினர்களாக சிறுவர் பாதுகாப்பு பிராந்திய இணைப்பாளர் எஸ்.சிவசங்கர், மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சி.சிவகரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் பல கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (4-12)

# வீதியை விரைவாக புனரமைக்க பொதுமக்கள் கோரிக்கை

(துனங்கிளப்பு)

மறவன்புலோ மணற்காடு வீதி, கீரை வாய்க்கால் வீதி, மறவன்புலோ வடக்கு வீதி ஆகிய வீதிகளின் திருத்த வேலைகள் மந்த கதியில் நடைபெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இவ்வீதிகளுக்கான திருத்த வேலைகள் கடந்த 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

ஆயினும் இவ்வேலைகள் முடிவடையவில்லை. ஆங்காங்கே கிரவல், கற்கள், மணல் என்பன பறித்தும் பரப்பப்பட்டும் வேலைகள் மந்த கதியிலேயே இடம்பெற்று வருகின்றன.

தற்பொழுது மழைக்காலம் ஆரம்பிக்கப்படவுள்ளதால் இவ்வீதிகளை துரித கதியில் திருத்தித் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (4-12-37)

# சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் சமூகக்கல்வி பாடத்திற்கான சேவைக் கால பாடத்திற்கான ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு இலங்கை ஆசிரிய சேவை வகுப்பு I அல்லது 2-I இனைச் சேர்ந்தவர்கள் பின்வரும் தகைமைகளையும் கொண்டிருக்க வேண்டும்.

அவையாவன, குறிப்பிட்ட பாடத்தினை அல்லது அப்பாடம் சார்ந்த ஏற்புடைய பாடத்துறை ஒரு பாடமாகக் கொண்டு பட்டம் பெற்றிருப்பதோடு விண்ணப்பிக்கும் பாடங்களில் விண்ணப்பதாரி 7 வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருப்பவராகவும் இருத்தல் வேண்டும். கல்விமாணிப்பட்டதாரிகளுக்கு பட்டப்பின் கல்வி டிப்ளோமா சான்றிதழ் தகைமையிலிருந்து விலக்களிக்கப்படும் அல்லது விண்ணப்பிக்கும் பாடத்துறையில் அரசினர் ஆசிரிய கலாசாலையில் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தில் ஆசிரியப் பயிற்சி பெற்றிருப்பதோடு விண்ணப்ப முடிவு திகதியன்று குறித்த பாடத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியராக 10 வருடங்களுக்குத் குறையாது தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை கற்பித்தல் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்தோடு பயிற்றப்பட்ட ஆசிரியராக இருந்த பட்டம் பெற்றவர்களுக்குப் பயிற்சித் துறையும் பட்டமும் அக்குறிப்பிட்ட பாடத்தைச் சார்ந்ததாக இருக்குமிடத்து பட்டப்பின் டிப்ளோமா சான்றிதழ் தகைமையிலிருந்து விலக்களிக்கப்படும்.

எனவே விண்ணப்பிக்க விரும்புவர்கள் மாதிரி விண்ணப்பப்படிவங்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று முப்பிரதிகளில் பூர்த்தி செய்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதிக்கு முன்பாக உரிய முறைப்படி வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

பின்னராக அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவ்விண்ணப்பம் கோரல் தொடர்பான மேலதிக விபரங்களை யாழ்.வலயக் கல்வி அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிட முடியும். (4-12)




# மகளிர் குழுக்களின் இருநாள் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மகளிர் குழுக்களின் இணைந்த செயற்பாட்டை வலுவூட்ட ஸ்திரீமேலா மகளிர் குழு விரைவில் யாழ்ப்பாணத்தில் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளது. இக்கண்காட்சி இன்று காலை 9 மணி தொடக்கம் நாளை வரை கலட்டி இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இக்கண்காட்சியினை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இக்கண்காட்சியின் நோக்கம் ஐ.நா. பாதுகாப்பு சபையின் ஆயிரத்து 325 மரபொழுகின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதோடு மகளிர் தமது செயற்பாடுகள்மூலம் தாம் எட்டியுள்ள இலக்குகள், சவால்கள் என்பவற்றுக்கு முகம் கொடுக்கும் பிரச்சினைகளை வெளிக்காட்டுவதாகும்.

இக்கண்காட்சியில் எமது பிரதேசத்தில் மகளிர் செயற்படுத்தும் உற்பத்திச் செயற்பாடுகள், உற்பத்தி செய்யும் பொருட்கள், மகளிருக்கான சேவை வழங்கும் நிறுவனங்கள் ஆலோசனை சபைகள் யாவரும் தத்தமது பொருட்கள், சேவை தொடர்பான விபரங்களை இங்கு காட்சிப்படுத்த முடியும் என மகளிர் அபிவிருத்தி நிலையம் அறிவித்துள்ளது. (4-12)

# பொதுப்பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 27 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி, 10.45 மணி, மதியம் 12.15 மணி, 2.15 மணி, 4 மணி ஆகிய அமர்வுகளில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதென யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (4-12)





வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தினால் மரக்கன்றுகள் வழங்கும் வைபவம் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் லயன் உதயசூரியன் மங்கலவிளங்கேற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் நிற்பதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட ஆளுநர் பிரியந்த பெர்னாண்டோ லயன்ஸ் கழகத் தலைவருக்கு மரக்கன்று வழங்கி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-விஜயகாந்த்)

# உலக சகோதரத்துவ விழா

(யாழ்ப்பாணம்)

மீசாலை, வேம்பிராய் இலங்கை சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானக் கோட்டம் நடாத்தும் உலக சகோதரத்துவ விழா நாளை சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமை வரை நடைபெறவுள்ளது.

இதில் மேற்படி 5 நாட்களும் தருமச்சாலை சத்தியஞான கோட்டம் (அகல் மண்டபம்), தியான மண்டபம், பிரதான கொடிக்கம்பம் ஆகிய இடங்களில் வழிபாடுகளும் பிரார்த்தனைகளும் இடம்பெறும்.

இதில் முக்கிய நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கணனி பயிற்சி நிலையம், முன்பள்ளி, இளைஞர் விளையாட்டுக்கழகம், சிறுவர் விளையாட்டுக்கழகம் என்பன அங்குரார்ப்பணம் செய்து வைத்தலும் உபகரணம் வழங்குதலும் இடம்பெறும்.

இதில் மறுநாள் திங்கட்கிழமை சத்திஞான கோட்டத்தில் போட்டிப் பரீட்சை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும். பங்குபற்ற விரும்புவோர் முதற்கூட்டியே சமரச சுத்த சன்மார்க்க சங்க நிர்வாகத்தினரிடம் தொடர்பு கொண்டு பெயர் விபரங்களை வழங்கலாம்.

அத்துடன் அறநெறி மாணவர்களுக்கு சீருடை வழங்குதல் நடைபெறும். அறநெறி வகுப்பு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக சாவகச்சேரி மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராசா, ஓய்வுபெற்ற இந்திய துணை மாவட்ட ஆட்சியாளர் ஐ.இராமானுஜம் , இந்தியா அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர் நமசிவாயம் சிதம்பரம், இந்திய பிரபல கர்நாடக இசை வித்துவானும் பிரபல பாடகருமான திருபுவனம் ஜீ. ஆத்மநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கோட்டக் கல்வி அதிகாரி கு.சிவானந்தம், வடமாகாண பிரதம செயலாளரின் உதவிச் செயலாளர் திருமதி பத்மினி சிவலிங்கம், கொடிகாமம் பொலிஸ் அதிகாரி வை.எம். ஜெகத் பண்டாரா, இராணுவ சிவில் இணைப்பு அதிகாரி நிலாலறஞ்சாகொட, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் கந்தையா அருந்தவபாலன், சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இறப்பி ஏல் தேவசகாயம்பிள்ளை, சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் சி.துரைராசா, மீசாலை வடக்கு ஜே/321 கிராம உத்தியோகத்தர் எஸ். உலகநாதன், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ஏ.கைலாயபிள்ளை, வலம்புரி முகாமைத்துவ இயக்குநர் வெற்றி வேலாயுதம் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

(4-12)



சீனாவின் 62 ஆவது தேசிய தினத்தையொட்டி இலங்கை- சீனா நட்புறவு அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வொன்று நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத், சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் கொழும்பிலுள்ள சீன தூதுவராலயத்தின் அரசியல் பொறுப்பாளர் ஹான் தாலூ உள்ளிட்ட பலர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம்.

# யாழ்,பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு புதிய கட்டடம்

(கொழும்பு)


ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் யோசனைக்கு ஏற்ப யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் பியகமை ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு புதிதாகக் கட்டடங்கள் அமைக்கப் படவுள்ளன.

பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பித்திருந்தார். இதற்கு 549 மில்லியன் ரூபா செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

நிர்மாணப்பணிகளின் 60 வீதத்தை இவ்வருடம் பூர்த்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

(4-2)

# அருள் மாதா செபக்கூடத்தின் 25 ஆம் ஆண்டு நிறைவு விழா



(யாழ்ப்பாணம்)

இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அருள் மாதா செபக் கூடத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவு யூபிலி திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையும் அதனைத் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.45 மணிக்கு நற்கருணை விழாவும் மறுநாள் சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு திருவிழா திருப்பலியும் நடைபெறும்.

(4-2)

# நவராத்திரி



முத்தேவிகளின் முன்னிலை
யில் - முப்பேறும் பெற்றிடவே
நோற்றிடுவர் நோன்பினையே
நோக்கமதை நல்கிடவே
தேவிக்கு மூன்று நாட்களாக முத்தே
விகளுக்கும் ஒன்பது ராத்திரியாகவும்
நவகீதம் பாடி நோக்குவோம் நவ
ராத்திரியை வீரம், செல்வம், கல்வி
என்று முறையே முத்தேவிகளுக்கும்
மும்மூன்று நாட்களாய்
மண்ணினோர் மனம் மகிழ் மங்கல
விளக்கேற்றி மகிழ்விப்பாய் தேவிகளை
ஒன்பது இராத்திரியும் ஒன்றாக
கூடி ஓதிடுவோம் நல்ல
சகல கலா வல்லி மாலைக் கொத்து

*கே. காயத்திரி*

# சிறைச்சாலைகளை வசதி கொண்ட இடங்களில் மீளமைக்க திட்டம்

(கொழும்பு)

பிரதான நகரங்களுக்கு மத்தியிலுள்ள சிறைச்சாலைகளை இடவசதி கொண்ட மாற்றிடங்களில் மீளமைப்பதற்கும் அவ்வாறு வெற்றிடமாகும் சிறைச்சாலைகளை அபிவிருத்தி மற்றும் முதலீடுகளுக்கு ஒதுக்குவதற்கும் அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

அதன்படி பொரளை சிறைச்சாலைத் தொகுதி அங்கிருந்து வேறு இடத்துக்கு மாற்றிமைக்கப்படவுள்ளதுடன் அங்குள்ள சிறைக் கைதிகள் மஹர, வட்டரக்க மற்றும் களுத்துறை சிறைச்சாலைகளுக்கு மாற்றப்படவுள்ளனர்.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர சமர்பித்திருந்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு ஏற்ப இத்திட்டம் அமுலுக்கு வருகின்றது.

இத்திட்டத்துக்கு ஏற்ப தங்காலை சிறைச்சாலை, ரன்ன எரமினியாயவில் 65 ஏக்கர் நிலப்பரப்பில் மீளமைக்கப்படவுள்ளது.

மாத்தறை மற்றும் காலி சிறைச்சாலைகளை வேறு இடங்களுக்கு மாற்றியமைக்க கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டுள்ளது. அதற்குத் தகுதிவாய்ந்த இடங்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(4-2)

# சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வலய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கற்கைநிலையம் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் கற்கை நிலைய தலைவர் வி.செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

(4-12)

# புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள்

**யா/புலோலி கிழக்கு**
**அ.த.க.பாடசாலை**

றெ.கிருஜன்- 170, ஸ்ரீ.பவுத்திரன்-166, து. அபிசாந்-163

**யா/ பொலிகண்டி**
**இ.த.க.பாடசாலை**

இ.செனற்ரனிஸ்கா- 161, ச.சயந்தினி-156.

**பருத்தித்துறை தும்பளை**
**சிவப்பிரகாச மகா வித்தியாலயம்**

ர.சுகந்தன்-185,கோ.கிருஷாந்-180, ச. ஆரணியன்-173, யோ. புகழினி-171,ப.நதுஷிகா-168, சி.கஜிந்தன்-164, பீ. ஜோதினி-162,ரா.துலக்சிகா- 162, வே. கஜனிதன்-154, சி.சியம்- 152


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யா/புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை**

**2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை**



**றெ.கிருஜன்**
**170 புள்ளிகள்**



**ஸ்ரீ.பவித்திரன்**
**166 புள்ளிகள்**



**து.அபிசாந்**
**163 புள்ளிகள்**

(கூ-4589)

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்து பாடசாலைக்குப் பெருமை தேடித் தந்த மாணவச் செல்வங்களைப் பாராட்டுகிறோம். அவர்களை வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர், பெற்றோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழையமாணவர் சங்கம்,*
*யா/புலோலி கிழக்கு அ.த.க பாடசாலை, பருத்தித்துறை.*

# கூடுதலாகக் கிடைக்கும் ஜிமெயில் வசதிகள்



கூகுள் குழுமத்திலிருந்து வந்ததனால் மட்டுமே, ஜிமெயில் அதிக வசதிகளைக் கொண்டிருப்பதில்லை. ஜிமெயில் இயக்கத்திற்கு தனியாகச் செயற்படும் புரோகிராமர்கள் பலரும் பல வசதிகளைத் தரும் புரோகிராம்களைத் தந்துள்ளனர். இவற்றை எந்தக் கட்டணமுமின்றி நாம் பெற முடியும். மெயில் செட்டிங்ஸ் பிரிவில் லேப்ஸ் தளத்தில் இவற்றை இயக்க செட் செய்திட முடியும். இதன் மூலம் நம் ஜிமெயில் பயன்பாட்டினை நம் விருப்பப்படி அமைக்கமுடியும். அத்தகைய சில வசதிகளை இங்கு காணலாம்.

### ➢ ஆயத்த பதில்கள் (Canned Responses):

இதனைப் படிக்கையில், ஏதோ நாம் விடுமுறையில் ஊருக்குச் செல்கையில் அல்லது மின்னஞ்சல் பார்க்க இயலாத நாட்களில் நமக்கு வரும் அஞ்சல்களுக்கான பதில்களைத் தானாக அனுப்பும் வசதி போல் தெரியும். இது அதுமட்டுமல்ல வழக்கமாக நாம் அனுப்ப வேண்டிய பதில்களை அல்லது வாடிக்கையாளர்களுக்கான செய்திகளை ஆயத்தமாகத் தேவைப்படும் போது அனுப்ப தயாரித்து வைக்கலாம்.

### ➢ நிகழ்வுகள் நாட்காட்டி (Google Calendar Widget):


இது ஒரு டெம்ப்ளேட் இணைப்பது போல நமக்கு நாமே எழுதி வைக்கும் நினைவூட்டல் கட்டம். இதில் நாம் மேற்கொள்ள வேண்டிய நிகழ்வுகளை எழுதி அமைக்கலாம். இதனை கூகுள் கலண்டர் வசதி என்றும் அழைக்கலாம். இது ஜிமெயில் தளத்தின் இடதுபக்கத்தில் ஒரு கட்டமாக அமைக்கப்படும்.


### ➢ கூகுள் முன் நினைவூட்டி (Google Docs Widget):

உங்கள் நண்பர்கள் அல்லது தலைமை நிர்வாகியிடமிருந்து உங்கள் கவனத்திற்கு கூகுள் டொக்ஸ் அனுப்பப்பட்டால், உங்கள் ஜிமெயில் தளத்தில், அதன்முன் தோற்றக் காட்சி ஒன்று காட்டப்படும். இதனால் நீங்கள் நேரங்கடந்து இதனைக் காணும் சூழ்நிலை தவிர்க்கப்படும்.

### ➢ அஞ்சலில் இடம் காட்டும் மேப் (Google Maps preview):

உங்கள் ஈமெயில் முகவரி ஏட்டில் உள்ள முகவரிகளுக்கான ஊர்கள் சார்ந்த சிறிய வரைபடம் ஒன்று காட்டப்படும்.




### ➢ படங்களை இணைக்க (Inserting Images):

இந்த வசதி அஞ்சல் செய்தியிலேயே போட்டோ மற்றும் படங்களை இடைச்செருகலாக அமைப்பது. இதன்மூலம் அந்தப் படங்களுக்கான குறிப்புக்களையும் நாம் இணைக்கலாம். மற்றபடி நாம் படங்களை இணைப்பாகத்தான் அமைக்க முடியும்.

### ➢ படித்ததாகக் குறித்துக்கொள் (Marks Read message):

நமக்கு வரும் அஞ்சல் செய்திகள் அனைத்தையும் படித்துக் கொண்டிருக்கமுடியாது. சிலவற்றைத் திறந்து படிக்கும் எண்ணமும் நமக்கு இருக்காது. திறக்காத அஞ்சல்கள், படிக்காதவையாகத் தோற்றமளிக்கும். எனவே இவற்றைப் படிக்காமலேயே படித்ததாகக் குறித்துக் கொள்ளும் வசதியை இது தருகிறது.

### ➢ அஞ்சல் முன்தோற்றம் (Message Sneak Peek):

இந்த வசதி மின்னஞ்சல் செய்தியினைத் திறக் காமலேயே அதில் உள்ளதைக் காட்டும் வசதி இது. இதிலிருந்து என்ன செய்தி உள்ளது என்பதனை நாம் அதனைத்திறக்காமலேயே உணரமுடியும்.

### ➢ மவுஸ் வழி உலா (Mouse Gestures):

மவுஸைப் பிடித்தவாறே அதனை அசைத்து மின்னஞ்சல் பட்டியலில் செல்லும் வசதி இது. ரைட் கிளிக் செய்தவாறே இடது பக்கம் மவுஸை நகர்த்தினால் முந்தைய மின்னஞ்சலுக்குச் செல்வீர்கள். வலதுபக்கம் நகர்த்தினால் அடுத்த அஞ்சலுக்குச் செல்லலாம். மேலே நகர்த்தினால் இன்பொக்ஸ் செல்லலாம். இப்படியே பல நகர்த்தல்களை மேற்கொள்ளலாம்.

### ➢ அனுப்பியவரின் நேரங்காட்டி (Sender's Time Zone):


மின்னஞ்சல்மூலம் நாம் பன்னாட்டளவில் உள்ள நண்பர்களுடன் தொடர்பு கொள்ள முடிகிறது. அஞ்சலைப் பார்த்தவுடன் அவருடன் பேசலாம் என்று தோன்றுகிறதா? அந்த நேரத்தில் அவர் நாட்டில், அவர் ஊரில் என்ன நேரம்? தூங்கும் நேரமா? என்ற கேள்விகளுக்கு இந்த வசதி பதிலளிக்கிறது.

### ➢ அனுப்பியதை நிறுத்து (Undo Send):

அஞ்சல் ஒன்றை அனுப்பியவுடன் அடடா, அனுப்பியிருக்கக்கூடாதே என்று எண்ணுகிறீர்களா? சில நொடிகள் எனில் அது அனுப்பப்படுவதை நிறுத்த இந்த வசதியைப் பயன்படுத்தலாம்.

# இலவச அண்ட்டி வைரஸ் ஏ.வி.ஜி.2012

தனிப்பட்ட நபர்கள் தங்கள் கணனிகளில் பயன்படுத்த இன்றும் மிகச் சிறந்த அண்ட்டி வைரஸ் புரோகிராம்களில் ஒன்றாக ஏ.வி.ஜி. அண்ட்டி வைரஸ் உள்ளது. இதன் புதிய தொகுப்பான ஏ.வி.ஜி.2012 அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது. கட்டணம் செலுத்தி வாங்கும் தொகுப்பிலுள்ள பெரும்பாலான வசதிகள் இலவச புரோகிராமில் இருப்பது இதன் சிறப்பாகும்.




அண்ட்டி வைரஸ், ஸ்பை வெயர், ரூட்கிட்ஸ் மற்றும் ஸ்பேம் மெயில்களைத் தடுக்க என இந்த புரோகிராமில் தனித்தனி தொகுப்புக்கள் அடங்கியுள்ளன. இதில் லிங்க்ஸ்கானர் (Link Scanner) என்று ஒரு கூடுதல் வசதி ஒன்று தரப்பட்டுள்ளது. இது தேடல் முடிவுகளையும், இணையத் தளங்களுக்கான லிங்க்குகளையும் சோதனை செய்கிறது. இது இந்த புரோகிராமில் மட்டும் காணப்படும் தனிச்சிறப்பு வசதியாகும்.

2008 ஆம் ஆண்டு ஏ.வி.ஜி. அண்ட்டி வைரஸ் புரோகிராமின் செயலாக்கம் மிகவும் மெதுவாக இருந்ததாகப் பலர் குற்றஞ்சாட்டி னார்கள். ஆனால் 2009 மற்றும் அடுத்து வந்த மேம்படுத்தப்பட்ட பதிப்புக்களில் பல குறைகள் களையப்பட்டதுடன் நவீன தொழில்நுட்பத்தில் இயங்கும் பல வசதிகள் தரப்பட்டன. செயற்பாட்டினைப் பொறுத்தவரை இன்று அவிரா மற்றும் அவாஸ்ட் அண்ட்டி வைரஸ் புரோகிராம்களுக்கு இணையாக இது கருதப்படுகிறது.

புதிய 2012 பதிப்பில், புரோகிராம் பைலின் அளவு 50% குறைக்கப்பட்டுள்ளது.


இதனால் இணையத்திலிருந்து தரவிறக்கம் செய்வது வேகமாக நடைபெறுகிறது. இன்ஸ்டோல் செய்வதும் வேகமாக மேற்கொள்ளப்படுகிறது. ஹார்ட்டிஸ்க்கில் இந்தப் புரோகிராம் எடுத்துக் கொள்ளும் இடமும் குறைக்கப்பட்டுள்ளது. புரோசசர் இயங்கும் அளவு மற்றும் நினைவகத்தின் இடமும் 20% குறைவாக உள்ளது.

இணையத்தில் உலாவுகையில் மட்டுமன்றி ஒன்லைன்சேட் செய்திடும் போதும் வைரஸ், மால்வெயர், வோர்ம்ஸ், ஹார்ட்வேர் மற்றும் ஸ்பேம் ஆகியவற்றை எதிர்க்கிறது. எந்தநேரமும் இதற்கான உதவிகள் கிடைக்கின்றன. விண்டோஸ் எக்ஸ்பி உட்பட அனைத்து விண்டோஸ் ஒப்பரேட்டிங் சிஸ்டங்களிலும் இயங்குகிறது.

இதனை டவுண்லோட் செய்திட நீங்கள் செல்லவேண்டிய இணையத்தள முகவரி: http://avg.en.softonic.com/download




# புதிய தேடுதளம் ஹீலியாட்




கூகுள் மட்டுமே கோலோச்சிக் கொண்டிருக்கும் தேடல் தளச் சந்தையில் புதிய கூடுதல் வசதிகளுடன், மாறுபட்ட வகையில் முடிவுகளைத்தரும் தேடல் தளமாக அறிமுகமாகியுள்ளது ஹீலியாட். தேடல் முடிவுகளைத் தருவதில் புதிய வழிகளை இது மேற்கொள்கிறது. நம் தேடல்களுக்கான முடிவுகளை அப்படியே பட்டியலிடாமல் அவற்றை வகைப்படுத்தி ஒவ்வொரு வகைக்கும் ஒரு வண்ணத்திலான வட்டத்தைக் கொடுத்து தகவல்களைக் காட்டுகிறது. இதனால் நாம் என்ன நோக்கத்திற்காக ஒரு சொல் கொண்டு தேடினாலும் அந்த நோக்கம் இங்கு ஏதேனும் ஒரு வகையாகக் காட்டப்படும். நமக்குத் தேவைப்படும் வண்ண வட்டத்தில் கிளிச் செய்தால் நம் தேவைகளுக்கான தளங்கள் மட்டும் பட்டியலிடப்படுகிறது. வலம்புரி என தேடுதல் கட்டத்தில் தந்தால் வலம்புரி செய்தித்தாள் தரும் செய்திகளை வகைப்படுத்தித் தருகிறது

சுருக்கமாகச் சொல்வதென்றால், உங்கள் தேடல்களை வகைப்படுத்திக் காணுங்கள் என்று நமக்கு ஹீலியாட் உதவுவதை உணரலாம். எடுத்துக்காட்டாக, Apple என்று தேடியபோது "Stock Quote", "Products;", "News", "iPhone", "iTunes", "iPad"... எனப் பலவகைகளில் தகவல்களைப் பட்டியல் இடுகிறது. இவற்றில் நமக்கு எது வேண்டுமோ, அதனை மட்டும் கிளிக் செய்து காணலாம். தளங்கள் அனைத்தையும் பெற்று, சில நொடிகளில் அவற்றை வகைப்படுத்தித் தருவதே இந்தத் தேடல் சாதனத்தின் சிறப்பம்சம். இந்தத் தேடல் தளத்தின் முகவரி:http://www.helioid.com

## உங்களுக்குத் தெரியுமா?

➢ ஒரு மொபைல் வாங்கி இயக்கத் தொடங்கியவுடன் *#06# என்ற எண்ணை அழுத்தி அதன் தனி அடையாள எண்ணைத் (International Mobile Equipment Identity) தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மொபைல் போனுக்கான வொரண்டி இதனைச் சார்ந்ததாகும். மேலும் உங்கள் மொபைல் தொலைந்து போனால் இந்த எண்ணைக் கொண்டு தேடிக் கண்டுபிடிக்கலாம்.

➢ உங்கள் நெட்வேர்க்கினைத்தாண்டி விட்டீர்களா? மொபைல் போனை ஓப் செய்வது நல்லது. இல்லையேல் பற்றரி பவர் வீணாகும்.

# சுற்றுப்புறச் சூழலை பேணாத குற்றத்திற்காக 30 பேர் கைது

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு பரவும் வகையில் தமது சுற்றுச் சூழலை உரிய முறையில் பேணாத குற்றத்திற்காகவும் குப்பை கூழங்களை பொது இடங்களில் வீசியமைக்காகவும் கடந்த ஒரு வார காலத்தில் 30 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 27 பேர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படட போது தலா ஆயிரம் ரூபா தண்ட பணம் விதிக்கப்பட்டுள்ளது.

கொக்காவில் பிரதேசத்தில் மேலும் சுற்றுப்புற சுத்தமின்மைக்காக இருவர் மீதும் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவர்கள் எதிர் வரும் ஒக்டோபர் மாதம் 3 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மட்டக்களப்பு நகரின் பிரதான வீதிகளில் நீர் வடிந்தோடுவதற்கு தடையாக அமையும் வகையில் வர்த்தக நிலையங்களின் முன் பகுதிகளை வைத்திருப்பவர்களை சுத்தம் செய்யும்படி சூழல் பாதுகாப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி ஜயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.

குறித்த இடங்களுக்கு நேரடியாக சென்ற அவர் வர்த்தகர்களுக்கு அறிவுரைகளையும் வழங்கினார். வடிகான்கள் சுத்தம் இன்றி நீர் வடிந்தோட முடியாத நிலையில் இருப்பதனால் டெங்கு நுளம்பு பரவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(4-2)

# இராமேஸ்வர மீனவர்களுக்கு மீன்பிடிப்பதற்குத் தடைவிதிப்பு

(கொழும்பு)

இராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் நள்ளிரவில் மீன்பிடிக்க விடாமல் விரட்டியடித்தனர். இராமேஸ்வரத்தில் இருந்து 500 விசைப் படகுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்று முன்தினம் அதிகாலை கடலுக்கு மீன்பிடிக்க சென்றனர்.


கச்சதீவு அருகே நேற்று முன்தினம் நள்ளிரவில் மீனவர்கள் வலைகள் விரித்து காத்துக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு 5 சிறிய ரோந்து கப்பல்களில் இலங்கை கடற்படையினர் கண்ணைக் கூசச் செய்யும் விளக்குகளை அடித்து கொண்டு மின்னல் வேகத்தில் வந்தனர். அவர்கள் ஒலிபெருக்கிகள் மூலம் இங்கிருந்து செல்லுமாறு எச்சரித்தனர்.

தமிழக மீனவர்கள் அவசர அவசரமாக வலைகளை எடுத்து கொண்டிருந்தனர். அப்போது இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்கள் படகுகளில் தாவி குதித்து அவர்கள் வைத்திருந்த வலைகளை சேதப்படுத்தி கடலுக்குள் வீசி எறிந்தனர். மேலும் இனி இங்கு வரக் கூடாது என மீனவர்களை விரட்டியடித்தனர். இதையடுத்து தமிழக மீனவர்கள் உயிர் பிழைத்தால் போதும் என்று பாதியிலேயே மீன்பிடிக்காமலேயே கரை திரும்பினர்.

இதுபோன்று அடிக்கடி இலங்கை கடற்படையினர் தமிழக மீனவர்களை மீன் பிடிக்க விடாமல் விரட்டி விடுகின்றனர். இதனால் குடும்பம் நடத்த முடியவில்லை. எனவே இலங்கை கடற்படையினரின் அத்துமீறலை தடுக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மீனவர்கள் கண்ணீர் மல்க கூறினர். (4-2)

# பேருந்து-உழவு இயந்திரம் மோதியதில் விபத்து

(யாழ்ப்பாணம்)



பயணிகளுடன் சென்ற தனியார் பேருந்து உழவு இயந்திரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் 2.15 மணியளவில் யாழ்.மாநகர சபைக்கு முன்பாக இடம்பெற்றது.

யாழ்.மாநகரசபைக்கு சொந்த மான உழவு இயந்திரத்துடன் வேகமாக வந்த தனியார் பேருந்து மோதியதிலேயே இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றது.

இதில் எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவாய் ப்பில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)

# நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் விளக்கமளிப்பதற்கு இலங்கை தயாராகிறது

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் உலக நாடுகளுக்கு விளக்கமளிப்பதற்கு அரசாங்கம் தயாராகி வருவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆணைக்குழு நம்பகத்தன்மை மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை குறித்து உலக நாடுகளுக்கு புரிய வைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் குறித்து சில நாடுகள் வெளியிட்டு வரும் கருத்துக்களுக்கு பதிலளிக்கத் திட்டமிட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

விசாரணை அறிக்கையை உலக நாடுகளுக்கு தெளிவுபடுத்த சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகளின் ஜெனீவா கிழைக்கான இலங்கைப் பிரதிநிதி தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் தனிப்பட்ட விருப்பு வெறுப்பின் அடிப்படையில் தாருஸ்மான் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

(4-2)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசமலர் இராசலிங்கம்



தம்மளையை பிறப்பிடமாகவும், சங்குவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமலர் இராசலிங்கம் 28.09.2011 அன்று காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம்- இளையதம்பி தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற கந்தையா -நாகம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சாந்தலிங்கத்தின் சகோதரியும், இராசலிங்கம் (கிளி)யின் அன்பு மனைவியும், மாதரசி (சுவிஸ்), மணிவண்ணன் (கனடா), வசீகரன் (பிரதேசசெயலகம்,, தெல்லிப்பளை), விந்தகன் (முன்னாள் யாழ்.மாவட்ட விவசாய கூட்டுறவு சங்கம்) ஆகியோரின் அன்பு அம்மாவும், இராசரத்தினம் (சுவிஸ்), சுஜாத்தா (கனடா), துஷியதர்சினி, உதயரஜனி ஆகியோரின் அன்பு மாமியும், யதுஸ், அயன் (சுவிஸ்), ரீதிப் (கனடா), விதுசன், கோபிசன், லதுமிகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று வெள்ளிக்கிழமை (30.09.2011) முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.**

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.**

(6444)

**செக்காலை லேன்,**
**மானிப்பாய் வடக்கு,**
**மானிப்பாய்.**

**தகவல் :-**
**குடும்பத்தினர்.**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

## மாணவர்களுக்கான தங்குமிட வசதி

புதிய கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு வெளிமாவட்டங்களைச் சேர்ந்த புதுமுக மாணவர்கள் பெருமளவில் வருகைதரவுள்ளார்கள். மேற்படி மாணவர்கள் தமது உயர்கல்வியை தடையின்றி தொடர்வதற்கு அவர்களுக்கான தங்குமிடவசதி நல்லமுறையில் அமைவது இன்றியமையாததாகும்.

ஆகவே எமது பிரதேசத்தின் வளர்ச்சியிலும் மாணவர்களின் எதிர்காலத்திலும் அக்கறை கொண்டுள்ள பொதுமக்கள் எமது பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் மாணவர்களின் தேவைக்காக

1. தமது வீடுகளை பல்கலைக்கழகத்திற்கு வாடகைக்கு வழங்க விரும்புவோர்.
2. தமது வீடுகளில் அறைகளை பல்கலைக்கழக மாணவர்களுக்கு வாடகைக்கு வழங்க விரும்புவோர்.

(மேற்படி தங்குமிட வசதியை மாணவர்களுக்கு வழங்கும் வீட்டுரிமையாளர்கள் அல்லது அங்கு தங்கும் மாணவர்கள் வாடகை அடிப்படையில் பல்கலைக்கழகத்திலிருந்து கட்டில்களை பெற்றுக் கொள்ளலாம் என்பதனை கவனத்திற் கொள்ளவும்.)

உதவிப்பதிவாளர்- நலச்சேவைகள் அவர்களுடன் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ 021-222-6716 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளும்படி அன்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

ஏற்கனவே மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கிய வீட்டுரிமையாளர்கள் அவ்வசதியை தொடர்ந்து வழங்கும் படியும் அன்பாக கேட்டுக்கொள்கின்றேன்.

**பதிவாளர்.**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**
**29.09.2011**

(சி-4593)

# தமிழ்மக்களுக்கு நீதி கிடைக்கக்கூடிய அரசியல் சட்ட ரீதியிலான வாய்ப்பு இலங்கையில் இல்லை

## உருத்திரகுமாரன் தெரிவிப்பு

தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்ககூடிய அரசியல் மற்றும் சட்ட ரீதியிலான வாய்ப்பு இலங்கையில் இல்லை என்று நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் விஸ்வநாதன் உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவராக இருந்த ரமேஷின் மனைவி நியூயோர்க் சிவில் நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நடந்து முடிந்த யுத்தத்தின் போது விடுதலைப்புலிகளின் தளபதிகளில் ஒருவராக இருந்த ரமேஷ் யுத்தத்தின் இறுதிக்கட்டங்களில் இராணுவத்தினரிடம் சரணடைந்து பின்னர் படையினரால் கொல்லப்பட்டதாகக்கூறி அவரது மனைவி வத்சலா தேவி அமெரிக்காவின் நியூயோர்க் நகர சிவில் நீதிமன்றம் ஒன்றில் இழப்பீடு தரக்கோரி இரண்டு வழக்குகளை தொடுத்திருக்கின்றார்.

இதில் ஒரு வழக்கில் இலங்கையின் இராணுவ உயர் அதிகாரி மேஜர் ஜெனரல் சவேந்திரசில்வாவையும் மற்றொரு வழக்கில் இலங்கை முப்படைகளின் தளபதி என்ற வகையில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் பிரதிவாதிகளாக அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் என்ன நடந்தது என்பது குறித்த தகவல்கள் வெளியில் வரவேண்டும்.மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இந்த வழக்கை தாக்கல் செய்ததாக அவர் கூறியுள்ளார். வத்சலாதேவி சார்பில் இந்த வழக்கைத் தாக்கல் செய்த விஸ்வநாதன் உருத்திரகுமாரன் மக்களுக்கான நீதி கிடைக்கக்கூடிய அரசியல் மற்றும் சட்ட ரீதியிலான வாய்ப்பு இலங்கையில் இல்லாத காரணத்தினாலேயே இந்த வழக்கை நாம் அமெரிக்காவில் தாக்கல் செய்ததாகவும் அவர் கூறுகின்றார்.

இந்த வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் அழைப்பாணையைப் பிறப்பித்துள்ளதாகவும் ஆனாலும் இதுவரை அந்த அழைப்பாணையை பிரதிவாதிகளிடம் கையளிக்க முடியவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# இரு ஹெலிகள் கொள்வனவு

ஹெலிகொப்டர்களை கொண்டு வருவதற்கான அனுமதியை சில நிறுவனங்கள் கோரியுள்ளதாக சிவில் விமான சேவைகள் அமைச்சு தெரிவிக்கின்றது.

கடந்த சில தினங்களுக்குள் இரண்டு புதிய ஹெலிகொப்டர்கள் நாட்டிற்கு கொண்டு வரப்படவுள்ளதாக அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இந்த ஹெலிகொப்டர்கள் உள்ளூர் சிவில் விமான சேவை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் கொண்டு வரப்பட்டுள்ளன.

அத்துடன் ஹெலிகொப்டர் சேவையை வழங்கும் நான்கு நிறுவனங்கள் தற்போது நாட்டில் இயங்குவதாக விமான சேவைகள் அதிகார சபை தெரிவிக்கின்றது. (4-2)

# சிறுவர் பிரச்சினைகளை ஆராய்வதற்காக பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்பு குழுக்கள்

சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்ப்பதற்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை 9 ஆயிரத்து 700 அரசாங்கப் பாடசாலைகளிலும் சிறுவர் பாதுகாப்பு குழுக்களை அமைக்கவுள்ளது.

முதலாவது சிறுவர் பாதுகாப்பு குழு கோட்டே ஆனந்த பாலிகா வித்தியாலயத்தில் அமையவுள்ளது.

சிறுவர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்ப்பதற்கு ஒரு ஏற்பாடு தேவை. அது பாடசாலையாக இருப்பதே மிகவும் சிறந்தது என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பிரதித்தலைவர் நந்த இந்திரவன்ஸ கூறினார்.

சிறுவர்கள் நாளாந்தம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகள் உள்ளன. போதைப் பொருள், பாலியல் துஷ்பிரயோகம், தொந்தரவுக்குள்ளாதல், வீட்டிலுள்ள பிரச்சினைகள், சிறுவர்களிடையே உண்டாகும் பிரச்சினைகள், பல வகையிலும் காணப்படும் பிரச்சினைகளை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை மூலம் ஆராயந்து தீர்க்க முடியும் என அவர் கூறினார்.

இந்த குழு மாணவர்கள்,ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோரை கொண்டிருக்கும். இவ்வாறான குழுக்களை தனியார் பாடசாலைகளிலும் அமைக்க முயல்வோம் என நந்த இந்திரவன்ஸ கூறினார். (2)

# ஜே.வி.பி. உறுப்பினர்கள் விலகிய போதிலும் கட்சி பலமடைகிறது

## லால்காந்த தெரிவிப்பு

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னிணியில் இருந்து (ஜே.வி.பி.) சில உறுப்பினர்கள் விலகிய போதிலும் அக்கட்சி மேலும் மேலும் பலமடைவதாக ஜே.வி.பி.யின் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவரான லால் காந்த கூறியுள்ளார்.

சில பிரச்சினைகளால் அண்மையில் தலைப்புச் செய்திகளில் ஜே.வி.பி. இடம்பெற்றதை லால் காந்த ஒப்புக் கொண்டார். ஆனால் கூறப்படுவதைப் போல் கட்சிக்கு ஆபத்து எதுவுமில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச, நந்தன குணதிலக்க போன்ற பிரசித்தி பெற்ற அங்கத்தவர்கள் கட்சியிலிருந்து வெளியேறிய போது ஜே.வி.பியின் எதிர்காலம் குறித்து மக்கள் கேள்வி எழுப்பினர். கட்சியிலிருந்து விலகிய பலர் தமது சொந்த அரசியல் குழுக்களை உருவாக்கினர். அவற்றில் பல அழிந்து விட்டன என அவர் கூறினார்.

கட்சியின் மோதல்கள் குறித்த பல வதந்திகள் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்படுவதாகவும் லால்காந்த கூறினார்.

ஜே.வி.பி.யும் ஏனைய எதிர்க்கட்சிகளும் நொறுங்கினால் அரசாங்கம் மகிழ்ச்சியடையும். ஆனால் அதற்கு நாம் அனுமதிக்கப் போவதில்லை. கட்சியைவிட்டு எவர் வெளியேறினாலும் நாம் நம்பும் விடயங்களுக்காக தொடர்ந்து போராடுவோம் என அவர் தெரிவித்தார். (2)

# வருடாந்தம் விசர்நாய்க்கடிக்கு 500 மில்லியன் ரூபா செலவு

## சுகாதார அமைச்சு தகவல்

எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு விசர் நாய்க்கடியினால் ஏற்படும் நீர் வெறுப்பு நோயற்ற நாடாக இலங்கையை ஆக்குவதே எமது இலக்கு என அறிவித்துள்ள சுகாதார அமைச்சு இலங்கையில் வருடாந்தம் 2 ஆயிரம் பேர் விசர் நாய்க்கடிக்கு இலக்காகின்றனர் என்றும் அறிவித்துள்ளது.

விசர் நாய்க்கடிக்கு இலக்காகியவர்களுக்கு சிகிச்சையளிக்கவென அரசு வருடாந்தம 500 மில்லியன் ரூபாவை செலவு செய்கின்றது என்று அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பில் சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டள்ளதாவது,

உலக விசர்நாய் கடி எதிர்ப்புத் தினம் நேற்று முன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு நாடுமுழுவதும் நோய் ஒழிப்பு தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தும் பல செயற்றிட்டங்களை அமைச்சு முன்னெடுத்துள்ளது.

சுகாதார அமைச்சிடம் தற்போதுள்ள தரவுகளின் படி இலங்கையில் 30 இலட்சம் நாய்கள் உள்ளன. வருடாந்தம் 2 ஆயிரம் பேர் விசர் நாய்க்கடிக்கு ஆளாகின்றனர். அதில் 32 பேர் வருடாந்தம் மரணிக்கின்றனர்.

கொள்கையளவில் நாய்களைக் கொல்வதில்லை என அரசு தீர்மானித்துள்ள போதும் நாய்களுக்கு கருத்தடை செய்யும் நடவடிக்கைகளை அமைச்சு மேற்கொண்டு வருகின்றது. சத்திரசிகிச்சை மூலமும் கருத்தடை செய்யப்படுகின்றது.கடந்த 8 மாதங்களில் விசர் நாய்க்கடியினால் நீர்வெறுப்பு நோய் ஏற்பட்டு 32 பேர் உயிரிழந்துள்ளனர். 36552 நாய்களுக்கு சத்திரசிகிச்சை மூலம் கருத்தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் 22 ஆயிரத்து 527 நாய்களுக்கு தடுப்பூசி மூலம் கருத்தடை செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் வீடுகளில் வளர்க்கும் நாய்கள், மற்றும் கட்டாக்காலி நாய்களுக்கு நீர் வெறுப்பு நோய் பீடிக்கப்படாமல் இருப்பதற்கென 4 இலட்சத்து 60 ஆயிரத்து 144 தடுப்பூசிகள் போட்டப்பட்டுள்ளன.கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை விசர் நாய்க்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென ஒரு இலட்சத்து 52 ஆயிரத்து 524 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. மேலும் பொதுவாக நாய்கள் -பூனைகள் உள்ளிட்ட மிருகங்களால் கடிக்குள்ளானவர்களுக்கென முதலுதவியாக வழங்கப்படும் தடுப்பூசிகள் 38 ஆயிரத்து 477 பேருக்கு வழங்கப்பட்டுள்ளன.விசர் நாய்க்கடியினால் ஏற்படும் நீர் வெறுப்பு நோய் முழுமையாக கட்டுப்படுத்தக்கூடிய ஒரு நோய் மட்டுமல்ல முற்றாக ஒழித்துவிடக்கூடியது.

அநேகமானோர் ஏதாவது முதலுத வியை செய்த பின்னர் மௌமான இருந்து விடுவர். விசர் நாய்க்கடியினால் ஏற்படும் நீர் வெறுப்பு நோய் ஏற்பட்டால் குணமாவது கடினமாகிவிடும். (2-4)

# மனிதஉரிமை தினத்தை முன்னிட்டு பதாகைப்போட்டி

(யாழ்ப்பாணம்)

இவ்வாண்டிற்கான சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டுஇலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு பிராந்திய ரீதியில் மத நல்லிணக்கம் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவதன் மூலம் *மனித உரிமைகள் பேணப்படும் சமுதாயம்* எனும் தொனிப்பொருளில் பதாகை போட்டி ஒன்றினை நடாத்தவுள்ளதாக யாழ்.மனித உரிமைகள் பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

**இப்பதாகைப் போட்டிக்கான நிபந்தனைகள்**

இது ஒரு திறந்த போட்டியாகும்.மேலே கூறப்பட்ட தொனிப்பொருளில் பதாகை தயாரிக்கப்படுவதுடன் பதாகையின் அளவு 6'X3' ஆக காணப்படுவதோடு துணியினால் தயார் செய்யப்படுதல் வேண்டும்.

பதாகையானது புதிய உருவாக்கத்தினையும் சிந்தனையையும் கொண்டதாக அமைவதோடு காட்சிப்படுத்த வசதியாக 4 மூலைகளிலும் துளையிடப்பட்டதாக பதாகைகள் அமைதல் வேண்டும்.

பதாகைகள் தமிழ் அல்லது சிங்களம் ஆகிய மொழிகளில் உருவாக்கப்பட வேண்டும்.

இப்போட்டியில் ஒவ்வொரு பிராந்திய ரீதியிலும் ஐந்து பதாகைகள் தெரிவு செய்யப்பட்டு தெரிவு செய்யப்படும் ஐந்து போட்டியாளர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.


அத்துடன் தெரிவு செய்யப்பட்ட ஐந்து பதாகைகளும் தேசிய ரீதியிலான போட்டிக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படும்.

இப்போட்டியில் பங்குகொள்ளும் அரச சார்பற்ற நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் தங்களது ஆக்கங்களை நிறுவன தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

இதில் தேசிய ரீதியில் நடாத்தப்படுத் போட்டியில் மூன்று பதாகைகள் தெரிவு செய்யப்பட்டு தெரிவு செய்யப்படும் போட்டியாளர்களுக்கு பரிசுத் தொகைகளாக முதல் பரிசு 25 ஆயிரம் ரூபா, இரண்டாம் பரிசு 15 ஆயிரம் ரூபா, மூன்றாம் பரிசு 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை சேர்ந்த போட்டியாளர்கள் தங்களுடைய ஆக்கங்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பிராந்திய அலுவலகம், இல.01, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ, நேரடியாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

இப்போட்டி தொடர்பான மேலதிக விபரங்களுக்கு 021-2222021 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (4-12)



மானிப்பாய் பரிஷ் லியோ கழகத்தால் மரக்கன்றுகள் விநியோகிக்கும் நிகழ்வு பண்டத்தரிப்பு பட்டின சபையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் போது லியோ கழக உபதலைவரும் வலி.தென் மேற்கு பிரதேச சபை தவிசாளருமான லியோ அ.ஜெபநேசனால் பயனாளி ஒருவருக்கு மரக்கன்று வழங்கப்படுவதையும் படத்தில் காணலாம்.


# விவசாயி நமது வளர்ப்புத் தாய்



ஆன்மீகம் 50

அது மட்டுமல்லாமல், நமது நாட்டில், பெரிய பொரளாதாரப் புரட்சிக்கான வாய்ப்பு வந்திருக்கிறது. இந்த வாய்ப்பைப் பற்றி பேசும் போது எனக்கு வெட்கமாக இருக்கிறது. இந்த வாய்ப்பை நாம் உருவாக்கியிருந்தால் பெருமையாக இருந்திருக்கும். நிச்சயமாக நாம்

## உலகத்தின் சூழ்நிலையால் பொருளாதாரப் புரட்சிக்கான வாய்ப்பு இன்று உருவாகியுள்ளது



இதை உருவாக்கவில்லை. உலகத்தின் சூழ்நிலையால் நம்மை நோக்கி இந்த வாய்ப்பு வந்து விட்டது. நம்மையும் அறியாமல், நம் குழந்தைகளை பள்ளி, கல்லூரிக்கு அனுப்பினோம். எதற்காக இதைச் செய்கிறார்கள் என்று தெரியாமலே இது நடந்ததோடு எல்லோர்க்கும் நல்ல வேலையும் கிடைத்து விட்டது. இது நாம் மனப்பூர்வமாக உருவாக்கியது இல்லை. ஏதோ தற்செயலாக நம்மை நோக்கி வந்து விட்டது. 200 ஆண்டுகளுக்கு முன்பு உலகில் இருக்கிற மற்ற நாடுகளை விட அதிக செல்வமுள்ள நாடாக இந்தியா இருந்தது. ஐரோப்பாவில் இருந்தவர்களெல்லாம், கப்பலேறி மிகவும் சிரமப்பட்டு வந்தார்கள் என்றால், அப்போது இந்தியாவின் பொருளாதாரம் உச்சத்தில் இருந்தது தான் காரணம். மற்ற நாடுகளை விட தற்போது அமெரிக்காவில் பொருளாதாரம் உயர்ந்த நிலையில் இருப்பதால், இப்போது நீங்கள் அமெரிக்கா போக ஆசைப் படுகிறீர்கள்.

இந்த 200 ஆண்டுகளில், ஒரு 6,8 தலைமுறைகளில் நமது பொருளாதாரம் மொத்தமாகப் பின்தங்கி விட்டது. தற்போது அந்த வாய்ப்பு மீண்டும் திரும்பி வந்திருக்கிறது. சென்ற 5, 6 தலைமுறைகளில் இல்லாத வாய்ப்பு, இப்போது மீண்டும் திரும்பியிருக்கிறது. 5 இலிருந்து 10 வருடங்கள் தேவையான செயல்களை திறமையோடு செய்தால் 100 கோடி மக்களில் 30 , 40 கோடி மனிதர்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய மாற்றத்தினை ஒருதலைமுறையில் கொண்டு வர முடியும். இந்த அற்புதமான வாய்ப்பு எல்லாத் தலைமுறைக்கும் கிடைக்காது. சென்ற தலைமுறையில் இதைப்பற்றி கனவு இருந்தாலும் அதை உருவாக்குகிற வாய்ப்பு இல்லை. இப்பொழுது நம்கைகளில் இந்த வாய்ப்பு இருக்கிறது. தேவையான தொழில் நுட்பங்கள், கருவிகள் இருக்கின்றன. ஆனால் அதை உருவாக்க வேண்டுமானால் நமக்கு என்ன தேவை என்பதை அறிவது மிகமிக முக்கியமானது. நாம் நிச்சயமாக விவசாய முறைகளை மாற்றியாக வேண்டும். மாற்றம் என்றால் மேற்கத்தேய முறைகளை கொண்டு வர வேண்டும். என்று அர்த்தமல்ல. இந்திய விவசாய முறை மாற்றி அமைக்கப்பட்டே ஆக வேண்டும். குறைவான ஊழியர்களை வைத்துக் கொண்டு விவசாயம் செய்யக்கூடிய வழி முறைகளை பின்பற்ற வேண்டும்.

ஆச்சிரமத்திற்குப் பக்கத்திலிருக்கிற தோட்டத்தின் உரிமையாளரிடம். கடந்த 9 வருடங்களாக சொல்லிக்கொண்டே வந்திருக்கிறேன். அவர் அதைப் பொருட்படுத்தவேயில்லை. நாம் அந்தத் தோட்டத்தை வாங்கிய பின் ஆட்களுக்குக் கற்றுக் கொடுக்கச் சென்றேன். பழைய உரிமையாளர் ஒரு 25 வருடங்களாக விவசாயம் செய்திருக்கிறார். அங்கே நான் வேறுவிதமாக விவசாயம் செய்கிறேன். இப்போது அவர் நாம் இப்படிச் செய்யாமல் விட்டு விட்டோமே என்று சொல்கிறார்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# தமிழ் அச்சு வரிவடிவத்திற்கான OCR முயற்சி

03



### புதிய OCR அமைப்பு

தற்போது நடைமுறையிலுள்ள சிக்கலுக்கு ஒரு தீர்வுகாணும் முகாமாக பழைய தமிழ் எழுத்துருவங்களையும் பொதுவான கிரந்த எழுத்துக்களையும் கொண்ட அச்சுப் பிரதிகளுக்கான ஒரு OCR முறையானது உருவாக்கப்பட்டது. எழுத்துக்களும் எழுத்துருவங்களும் கீழே நிரல் படுத்தப்பட்டுள்ளது.

### எழுத்துமுறை கட்டமைப்பு

Scan பண்ணப்பட்ட பிரதிகள் System இல் உள்வாங்கப்பட்ட பின்னர். Word வடிவமாக வெளிவரும். இவை மாற்றங்கள் செய்யக் கூடியதாக இருக்கும். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது இந்நிகழ்வானது நான்கு பிரதான பிரிவுக்கு உட்படுத் தப்படுகிறது.

1. உருவ முன்தாயாரிப்பு நிலை
2. பிரித்து நடைமுறைப்படுத்தல்
3. உருவங்களைப்பிரித்தெடுத்தல்
4. உருபுகளை அடையாளப் படுத்தல்

### உருவ முன்தயாரிப்பு நிலை

Word நிலைக்கு மாற்றுவதற்கு Scan பண்ணப்படும் உருவங்கள் /ஆவணங்கள் முதலில் ஒரு தெளிவான நிலைக்கு மாற்றப்பட வேண்டும். இந்த முறையானது. பழைய தமிழ் எழுத்துக்களையும் உருவங்களையும் அடிப்படையாகக் கொண்ட தனால் பழைய பத்தகங்களிலிருந்தும் ஆவணங்களிலிருந்தும் குறைவான எண்ணிக்கையான எழுத்துக்களை கொண்டவையாக இருக்க வேண்டும். மேலும் புத்தகங்களினதும் ஆவணங்களினதும் பழமை காரணமாக நிறமாற்றங்கள் மற்றும் புள்ளிகள் கோடுகள் குறிப்புக்கள் போன்றவற்றிலிருந்து வேறு பிரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். அத்துடன் கறுப்பு வெள்ளைப் பிரதியாக்கப்பட வேண்டும்.

### பிரித்து நடைமுறைப்படுத்தல்

இம்முறையின் இந்தக் கட்டத்தின் போது வடிவமானது பல வடிவங்களாக உடைக்கப்பட்டு ஒவ்வொரு

> "கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

வடிவத்திலும் ஒரு எழுத்துமட்டும் பெறப்படுகிறது. வடிவமானது முதலில் கோப்புகளாகப் பிரிக்கப்பட்டு பின்னர் ஒவ்வொரு கோடும் உருவமாக்கப்படுகிறது. இதனால் இறுதியில் பல பிரிவுகளாக உடைக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு உருவமாக்கப்படுகின்றது. ஒரே உருவமாகக் கணிக்கப்படுகிறது.

### உருவங்களைப்பிரித்தெடுத்தல்

இம்முறையின் இக்கட்டத்தின் போது ஒவ்வொரு தனிப்பட்ட உருவ அமைப்புக்களும் அடையாளப்படுத் தப்பட்டு பதில் ஆகின்றன. இதன் போது இறுதியாக அடையாளப் படுத்தப்பட்டு Word format இற்கு மாற்றப்படுகிறது.

### உருபுகளை அடையாளப்படுத்தல்

இம்முறையின் அளவாக்கத்தின் போது ஒவ்வொரு எழுத்துருவ அமைப்பினதும் மாதிரிகள் சேர்கப் பட்டு வைக்கப்படுகின்றன. பின்னர் இவை ஒப்பீட்டு முறையில் தொகுக் கப்பட்டு மிகவும் நெருங்கிய ஒத்த உருவம் பெறப்பட்டு சேமித்து வைக்கப்படுகிறது. அரம்பத்தில் இதற்குப் பயன்படுத்தப்பட்ட தொழில் நுட்பம் பின்னர் எதிர்பார்த்த பலனைக் கொடுக்காததால் பின்னர் வேறு தொழில் நுட்பம் பயன்படுத்தப் பட்டது. காலம்போதாமையால் மிகவும் துல்லியமான அமைப் பொன்றை கொடுக்கமுடியாமல் உள்ளது.

### சிக்கல்களும் சவால்களும்

இத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் பல சிக்கல்களையும் சவால்களயும் சந்திக்க வேண்டி வந்தது. அவற்றுட் சில:

System ஐப் பயன்படுத்தும்போது பழைய எழுத்துக்களையும் கிரந்த எழுத்துக்களையும் உள்வாங்குவது சிரமமானது. ஏனெனில் அவை முன்னர் இருக்கவில்லை.

சில எழுத்துக்களையும் எண்ணுருவங்களையும் ஒப்பீடு செய்ததில் ஏற்பட்ட சிக்கல்.

அத்துடன் எழுத்தக்களின் வடிவங்களை சரியாகக் கணிப்பிடல். இவற்றில் ஒரு கோடு கூடினாலோ குறைந்தாலோ சரியான அடையாளம் இல்லாமல் போய்விடுதல்.

பழைய ஆவணங்கள் அவற்றின் வயது காரணமாக எழுத்துக்கள் மங்கலாகி நிறம் மாறியிருத்தல்.

இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கும்போது இந்த System ஆனது சரியான தகவல்களைக் கொண்டதாகக் காணப்பட்டாலும் இதன் துல்லியத் தன்மையானது ஆவணத்தின் தன்மையிலும் தெளிவிலும் எழுத்துக்களின் ஒத்த தன்மையிலுமே தங்கியுள்ளது. இறுதியாக இந்த அனைத்து முயற்சிகளும் சரியான துல்லியமான முடிவுகளைத்

சபீனா தயானி தயானந்தன்

தராவிடினும் தொடர் ஆராய்ச்சிகள் மூலம் இந்தத் துறையில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு தரமான OCR System ஐ உருவாக்குவதில் உதவலாம். ஆகவே எதிர்காலத்தில் OCR System ஆனது கையெழுத்துப் பிரதிகளையும் இன்னும் பழைய காலத்திய எழுத்துக்ளையும் எண்களையும் உள்வாங்கக்கூடியதாக அமையும்.

(முற்றும்)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

# எரிமலை, பூகம்பம் ஏற்படுவது எதனால், எப்படி?

பூமியின் மையத்துவரை ஒரு துளையைத் தோண்டிச் சென்றால் நாம் எதைக் காண்போம்? உட்கருவின் நடுவில் இயற்கை அணு உலையாய் இயங்கி வரும் 5 மைல் விட்டமுள்ள யுரேனியக் கோளம் ஒன்றிருப்பதை ஊகித்து உடன்பட வைக்க ஆதாரம் உள்ளது. அதை நாம் புவி அணு உலை (Geo-Reactor) என்று குறிப்பிடலாம்.

**பூகோளத்தின் மையத்தில் இயங்கும் வேகப் பெருக்கி அணு உலை**

உலக குடிமக்களுக்கு பெருந்தீங்கு விளைவிப்பது பூமியின் உட்கரு வெப்பமீறலே தவிர மெதுவாக மாறிவரும் சூழ்வெளிப் பருவ நிலை மாற்றங்கள் அல்ல! கலிலியோ பூமி நகர்கின்றது என்று கண்டுபிடித்தார்.

கொப்பநிக்கஸ் பூமி பரிதியை சுற்றி வருகின்றது என்று கண்டுபிடித்தார். டெஸ் மார்க்கின் வெளியீட்டில் கவரப்பட்ட *டாம் சாக்கோ (Tom Chalko, inspired by Desmarquet's Report)* நமது பூமி கோளின் திண்ணிய உட்கரு *(Earth's Solid Inner Core)* உண்மையில் ஓர் அணு உலை என்று 2000 ஆம் ஆண்டில் கண்டுபிடித்தார்.

அணு உலையின் வெப்ப ஆற்றலே வெளிக்கருவில் உள்ள உலோகங்களைக் கொதிக்கும் குழம்பாக மாற்றி வைத்துள்ளது. அந்த அணுக்கரு உலை மையத் திரிவாக (Eccentric) அமைந்திருக்கின்றது.

தானாக இயங்கியும் இடையிடையே தானாக நிறுத்தம் அடைந்தும் வரும் மைய அணு உலையே பூமியின் மேற்தளத்தில் அடுத்தடுத்து நில நடுக்கங்களை உண்டாக்கியும் எரிமலைகளை எழுப்பியும் வருகிறது. பூமியின் துருவப் பனிப்பாறை முகப்புகள் உருகிப் போவதற்கு முக்கிய காரணம். $0^{\circ}C$ மேல் சூடேறும் காற்றென நாம் கருதக்கூடாது.

துருவங்களின் பனிப்பாறைகளைச் சூடாக்கி உருகுவது பூமியின் உட்கருவிலிருந்து வெளியாகும் வெப்பமே (Overheating of the Earth's Core). தவிர பூகோளச் சூடேற்றமில்லை என்பது இப்போது விஞ்ஞானிகள் கருதும் புதிய கருத்து. எரிமலைகள் மீண்டும் பீறிட்டெழுவதும் நில நடுக்கம் திடீரென தாக்கித் தகர்ப்பதும் சூடேறிய பூமியின் மைய அணுப்பிளவு உலை குளிர்ந்து போகத் தேவைப்படுவதால் தவிர உட்கரு படிமச் சுருக்கம் அடைவதால் *(Crystallization)* அல்ல. இயங்கும் எந்த அணுப்பிளவு உலையும் வெப்ப மீறல் ஆபத்தில் *(Danger of Overheating)* சிக்கிக் கொண்டு சிதைவு அடையக்கூடாது.

ஆர்ட்டிக், அண்டாட்டிக் துருவப் பனிக்குன்றுகளில் பெருமளவு பகுதிகள் ஏற்கனவே உருகி நீராகிக் கடல் உயரத்தை மிகையாக்கி விட்டன! 2000-2003 ஆம் ஆண்டுகளுக்கிடையில் மட்டும் அண்டார்ட்டிக் பனிக்குன்றுகளின் உருகுதல் 8 மடங்கு அதிகரித்துள்ளது. சரிந்த பனிக்குன்றுகள் நழுவிக் கடலில் மூழ்கும் போது சுனாமியைத் தூண்டுவதோடு கடற்கரைப் பகுதிகளைக் கடல் வெள்ளம் மூழ்கி விடுகிறது.


எரிமலைகள் கண்விழித்து ஆர்டிக் கடலடியிலும் அண்டார்டிக் ஆழப் பகுதியிலும் எழும்புகின்றன. அண்டார்டிக்கைச் சுற்றியிருக்கும் கடலில் 5 கிலோ மீற்றர் (3 மைல்) ஆழத்தில் உள்ள நீர், திணிவு குன்றி உப்பளவும் குறைந்து *(Less Dense & Less Salty)* அண்டார்டிக் அடித்தளம் உருகிப் போகிறது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

தூயப் புதுநீர் உப்புக் கடல்நீரைவிட திணிவு குறைந்து மேலே மிதக்க வேண்டுமல்லவா? அவ்விதம் நிகழ்வதில்லை. அதாவது அண்டார்க்கின் மேற்தளம் உருகாமல் பேரளவில் அடித்தளக்குன்றுகள் மட்டும் இளகித் தூய நீராகத் தங்கி விடுகின்றன.

கடந்த நாற்பது ஆண்டுகளாக நில நடுக்கத்தின் எண்ணிக்கை தீவிரம், வலுவாற்றல் யாவும் ஏறிக் கொண்டே போகின்றன. 1973 இல் அமெரிக்கப் புவி ஆய்வு நோக்கம் *(US GS-US Geologocal Survey)* 7.0 ரிக்டர் அளவுக்கு மீறிய பூகம்பங்களின் தகர்ப்பாற்றல் 6 மடங்கு அதிகரித்து உள்ளதாக வெளியிடப்பட்டிருக்கின்றது. மெல்ல மெல்ல காலநிலை உஷ்ணம் ஏறும் போது ஒரு டிகிரிக்கு குன்றிய தசமத்தில் கூடினாலும் நிலநடுக்கங்கள் 5 மடங்கு பெருகிய ஆற்றலில் தகர்கின்றன.

**நாசா விஞ்ஞானிகள் கூறுவது:**

பூமியானது தான் வெப்ப சக்தியை எதிரனுப்ப முடிவதைப் போல் பரிதியிலிருந்து பெறும் சக்தியைப் பேரளவில் *(0.85 Mega Watt per Sq km)* உறிஞ்சிக் கொள்கிறது. சூழ்வெளி மாசுக்கள் இப்போது பெருகி வரு



Earth Showing Georeactor Detail

கின்றன. பூமியைத் தாக்கும் சூரியக் கதிர்வீச்சு இயக்கங்கள் பரிதித் தேமல்களால் *(Sun Spots)* 2012 ஆம் ஆண்டு வரை மிகையாகி வரும். 2000-2003 இந்த மூன்று ஆண்டுகளில் ஏன் அண்டார்டிக் அடித்தளப் பனிக்குன்றுகளின் உருவல் 8 மடங்கு அதிகரித்திருந்தது. அந்தக் கால இடைவெளியில் பரிதியின் வெப்ப வீச்சு அண்டார்டிக் பகுதியில் எட்டு மடங்கு மிகையாகப் பொழியவில்லை.

பூகோளச் சூடேற்றமும் அந்த அளவுக்குத் திடீரென ஏறவும் இல்லை. ஆதலால் அண்டார்டிக் பனிப் பாறைகள் உருகக் காரணம் பூமியின் உட்கருவில் உள்ள அணுப்பிளவு இயக்கம் பெருகி வெப்ப சக்தி உள்ளிருந்து மேலெழுந்துள்ளதையே காட்டியுள்ளது. பூகோளச் சூடேற்றம் அண்டார்டிக் கடற்பகுதி ஆழத்தில் பனி உருகி உப்பு சிறுத்த தணிவும் குறைந்த நீர் சேமிப்புக்குக் காரணமாக இருக்க முடியாது.

புவி மையத்தில் இயங்கி வரும் அணுக்கரு உலை வெப்பம் மீறி எழுந்து அப்படிச் செய்திருக்க முடியும் என்று ஒப்புக் கொள்ளலாம். அதாவது புவி மையத்தில் உள்ள அணு உலையின் வெப்ப எழுச்சியைத் தணிக்க வெப்பத் தணிப்பியாக *(Heat Sink)* அண்டார்டிக் பனிக் கண்டம் ஒன்று மட்டும் தான் உதவ முடிகிறது. அதாவது பூமியின் உட்கரு அணு உலைக்கு நேர் மேலே இருப்பது அண்டார்டிக் பனிப் பாறைகள் என்று நாம் ஊகிக்கலாம்.

ஆதிகாலப் பிள்ளைப் பூமியானது *(Baby Earth)* பரிதியிலிருந்து பிரிந்து உட்கரு உலோகக் கோளமான ஓர் நீர் அண்டம் என்பதை அறிவோம். சூடான திரவக் குழம்பில் திரண்டு பரிதியை மூலத் தட்டு வடை போல் *(Primordial Disc )* சுற்றிக் குளிர்ந்த ஓர் உருண்டையே நமது பூர்வ பூமி. திணிவு மிக்க திரவ உலோகங்கள் *(Densest Metals)* ஈர்ப்பாற்றலால் கீழாகப் படிந்தும் நிறை மெலிந்த கனிமங்கள் மேலே மிதந்தும் பூமியின் மேற்தளம் மட்டம் குளிர்ந்தது.

யுரேனியம், தோரியம் போன்ற உலோகங்கள் மிகத் திணிவு பெற்றவை. உதாரணமாக யுரேனியத்தின் திணிவு *(Density)* 19 கிராம்/ கியூபிக் செ.மீ *(19 gram per cubic cm)* யுரேனியம் ஈயத்தை விட 1.6 மடங்கு திணிவு உள்ளது. தோரியத்தின் திணிவு:11.7 கிராம் / கியூபிக் செ.மீ புளூடோனியத்தின் திணிவு :19.7 கிராம்/ கியூபின் செ.மீ.

**விஞ்ஞானி மாவின் ஹர்ன்டான் அறிவித்த புவி அணு உலை**

பூமியில் அணுசக்தி ஆற்றல் பெறும் யுரேனியம், தோரியம் ஆகியவற்றின் இருப்பு பல இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வானியல் விஞ்ஞானி டாக்டர் மேர்வின் முதன் முதல் அணுப்பிளவு தொடரியக்கம் செய்து காட்டிய இத்தாலிய விஞ்ஞானி என்ரிக்கோ பெர்மியைப் பின்பற்றி பூமிக்குள்ளே மாபெரும் ஓர் இயற்கை அணுப்பிளவு உலை *(Natural Nuclear Fission Geo-Reactor)* இயங்கியும் அடுத்து நிறுத்தம் அடைந்தும் வருகிறது. எனினும் புதியதோர் கோட்பாட்டை வெளியிட்டார்.

அந்த அணுப்பிளவு உலை வேக நியூத்திரன்கள் யுரேனியத்தைத் தாக்கி சக்தியும் எரிசக்தி எருவும் ஈனுகின்ற ஒரு வேகப் பெருக்கி அணு உலை (Rast Breeder Raector) அதற்கு ஹைரஜன் போன்ற மிதவாக்கி *(Moderator)* தேவையில்லை. ஏனைய மின்சக்தி நிலையங்கள் போலின்றி புவி அணு உலை *(Georeactor)* தானாக இயங்கும். தானாக நிறுத்தம் அடையும் அதன் வெப்ப சக்தி ஆற்றலைக் கூட்டிக் குறைக்கும் சுகக் கட்டுப்பாடும் கொண்டது. இயக்கத்தில் விளைந்து சேமிப்பாகும்.

அணுப்பிளவுக் கழிவுகள் நிரம்பி நியூத்திரன்கள் விழுங்கி அணு உலை அடுத்து நிறுத்தம் அடையும். நிறை குன்றிய அணு



வியல் கழிவுகள் கனற் குழம்பில் மேலேறி மிதக்கும். பின்னர் தனிப்பட்டு கீழே யுரேனியம் -235 சேரும் போது அணு உலை தானாக இயங்கத் தொடங்கும்.

இந்தக் கோட்பாட்டை 1993 இல் முதன் முதல் வெளியிட்ட போது அக்கருத்தை பலர் கூர்ந்து நோக்கவில்லை. பூமியின் உட்கரு வெப்பம் மிகுந்த கோளம். அதைச் சுற்றி வெளிக்கருவில் உலோகத்தால் ஆன கனற் குழம்பு உட்கருவின் அணு உலை வெப்ப சக்தியே திரவக் குழம்பை மணிக்கு 1000 மைல் வேகத்தில் சுற்ற வைத்திருக்கும். அந்த அணுப்பிளவு சக்தியே பூகோளக் காந்தசக்திக்கும் *(Geomagnetism)* மூலமாக இருக்கக்கூடும் என்பதும் அறியப் படுகிறது. செவ்வாய் கோள் மின்காந்தமின்றி ஈர்ப்பியல் குன்றிச் செத்துக் கிடக்கிறது.

செவ்வாய் கோளின் உட்கரு அணு உலை இயக்கம் நிரந்தமாக நிறுத்தம் அடைந்து அதன் காந்த சக்தி இழந்து போனது செவ்வாய் கோளின் அணு உலை சக்தியற்றுச் செத்து விட்டதால் செவ்வாயின் காந்த சக்தி மறைந்து ஈர்ப்பாற்றல் குறைந்து போய் அதன் சூழ்வெளி வாயு மண்டலம் நிரந்தமாய் இழக்கப்பட்டு நீர்வளம் எல்லாம் முற்றிலும் வரண்டு விட்டது. ஆனால் செவ்வாயின் உட்கரு ஒரு காலத்தில் சூடாக இருந்து அதில் இயங்கிய எரிமலை பரிதி மண்டலத்தின் மிகப் பெரிய எரிமலையாக எழுந்திருக்கின்றது.

4.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய நமது பூமி தன் உட்கருவில் அணுவியல் எருக்களான யுரேனியம் -235, யுரேனியம் -238 அணுப்பிளவு இயக்கத்தால் உண்டான புளூடோனியம் -239 ஆகியவற்றைப் பயன்படுத்தி வரும் 5 மைல் (10 கி.மீ) விட்டமுள்ள வேகப் பெருக்கி அணு உலைக் கோளம் ஒன்றைக் கொண்டுள்ளது என்று கூறுகிறார் மேர்வின். அது வெளியாக்கும் வெப்பசக்தி 4 டெரா வாட்ஸ் (4000 பில்லியன் வாட்ஸ்)(4 மில்லியன் மெகாவாட்ஸ்) *(4terawatts (4X10^12 Watts)* என்று கணனி மாடல் மூலம் கணக்கிடப்படுகின்றது. இப்பேரளவு வெப்ப சக்தி தொடர்ந்து வெளியேறாது விட்டுவிட்டு எழுவதால் அங்குமிங்கும் எரிமலையும் பூகம்பமும் உலக நாடுகளில் தலைதூக்கி குடி மக்களுக்கு அடிக்கடி இன்னல் கொடுத்து வருகின்றன.

**ச.கேதீஸ்வரன்**
நூலகம்,
யாழ்.பல்லைக்கழகம்.

## வாரத்திற்கு ஒரு புதிர்! 50

**படத்தில் காட்டியவாறு படகும் இரு பிரயாணிகளும் நிலையாகவுள்ளனர். இருவரும் இடம்மாறினால் படகு என்ன செய்யும்?**



**விடைகளை 10.10.2011 இற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

Mr.S.Ketheeswaren
Editor, Section A
Jaffna Science Association
Library
University of Jaffna, Jaffna.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**

இப் பணப்பரிசினை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட தாவரவியல் துறையில் கலாநிதி பி.செவ்வேளிடம் (தலைவர் பிரிவு A) நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
மக்கள் வங்கி,
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 49 க்கான 250/-பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

அகல்யா மாசிலாமணி,
மாறாம்புலம், அல்வாய் வடக்கு,
அல்வாய்

**புதிர் 49 இற்கான கேள்வியும் விடையும்:**
சார்பியல் கொள்கையை முன்வைத்தவர் யார்?
*ஐன்ஸ்ரீன்*

**யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்**
**புதிர் இல. 50**

சரியான விடை :..............................
முழுப்பெயர் :..............................
முகவரி :..............................
:..............................
தொ.பே. இல :..............................
கையொப்பம் :..............................



யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவன் ஒருவனுக்கு வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளரும், வடமாகாண ஆளுநரின் செயலாளருமான இ.இளங்கோவன் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட கல்லூரி மாணவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டவர் ஐந்து வருடங்களின் பின் கைது

(கொழும்பு)

ஆயுள் தண்டனை பெற்ற நிலையில் ஐந்து வருடங்கள் தலைமறைவாக வாழ்ந்த ஒரு குற்றவாளியை போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஜவாஹிர் ஷா ஹனிஸ் அல்லது அனிஸ் எனும் இவர் 3.7 கிராம் ஹெரோயினை எடுத்துச் சென்றபோது கடந்த 1999 ஜனவரி 9 ஆம் திகதி தெஹிவளையில் கைது செய்யப்பட்டார்.

சட்டமா அதிபர் இவர் மீது கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தொடுத்த நிலையில் கடந்த 2002 ஜூலையில் 18 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதன்பின் அவர் தலைமறைவானார். அவர் மீதான வழக்கு அவரில்லாமலேயே விசாரிக்கப்பட்டு அவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

இதன் பின்னர் அவர் பற்றி தகவலேதும் தெரியவில்லை. இருப்பினும் கடந்த 15 ஆம் திகதி போதைப் பொருள் ஒழிப்பு பிரிவினரால் அவர் வத்தளையில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

அவர் மீதான வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது. குற்றம் சுமத்தப்பட்டவர் வேறு ஒரு வழக்கு தொடர்பில் மும்பையில் விளக்கமறியலில் இருந்தபடியால் முந்தைய வழக்கு விசாரணைக்கு வரமுடியவில்லை என அவர் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் கூறினார்.

அவரை மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தி இவ்வழக்கு தொடர்பில் புதிய தீர்ப்பு ஒன்றை வழங்குமாறு வழக்குரைஞர் கோரினார். ஆனால், குற்றம் சுமத்தப்பட்டவர் வேண்டுமென்றே விசாரணைக்கு வராமல் ஒளிந்திருந்தாக அரசு தரப்பு வழக்குரைஞர் வாதிட்டார்.

இந்நிலையில் மேல் நீதிமன்ற நீதிபதி முந்தைய தீர்ப்பை உறுதி செய்து ஆயுள் தண்டனை வழங்கினார். (2)

# எதிர்காலத்தில் அரசியல் கூட்டணிகளை ஜே.வி.பி. எக்காரணத்திற்கும் அமைக்காது

(கொழும்பு)

ஜே.வி.பி. எதிர்காலத்தில் எந்தக் கட்சியுடனும் எந்தக் காரணத்திற்காகவும் கூட்டணியமைக்கமாட்டாது எனவும் கம்யூனிஸ்ட் கொள்கைகளின் அடிப்படையில் தனது அரசியல் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லும் எனவும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

கூட்டணி அரசியலானது ஜே.வி.பி.யின் அரசியல் கலாசாரத்தை அழித்துவிட்டதாக அக்கட்சியின் மாற்றுக்கருத்துடைய குழுவினர் குற்றம் சுமத்தும் நிலையில் ஜே.வி.பி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

கடந்த 2004 ஆம் ஆண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பை அமைப்பதில் ஜே.வி.பி. முன்னின்றது. 2005 ஆம்ஆண்டுஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அக்கட்சி ஆதரித்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக தேசிய முன்னணியின் வெற்றிக் கிண்ணச் சின்னத்தில் போட்டியிட்ட சரத் பொன்சேகாவை ஜே.வி.பி. ஆதரித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் எதிர்வரும் காலங்களில் அரசியற் கூட்டணிகளை அமைப்பதில்லை என ஜே.வி.பி. ஒரு வருடத்திற்கு முன்னர் தீர்மானித்ததாக அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பிமல் ரட்னாயக்க கூறினார்.

அதேவேளை, கடந்த இரு முக்கிய தேர்தல்களில் ஜே.வி.பி. ஆதரித்த சரத் பொன்சேகாவின் அரசியல் எதிர்காலம் குறித்துக் கேட்டபோது, அதைப் சரத் பொன்சேகாவே தீர்மானிக்க வேண்டும் என பிமல் ரட்னாயக்க கூறினார்.

அரசியல்காரணங்களுக்காகதனிநபரின் சிவில் உரிமைகளை ஒடுக்கும் அரசாங்கத்தின் நடவடிக்கையின் ஒரு பகுதியாக சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரின் விடுதலைக்காகவும் அவரின் ஜனநாயக உரிமைகளை நிலைநிறுத்தவும் ஜே.வி.பி தொடர்ந்து போராடும். அதில் பிரச்சினை எதுவும் இல்லை என பிமல் ரட்னாயக்க கூறினார்.

ஜே.வி.பி.யின் மாநாட்டைக் கூட்ட வேண்டும் என மாற்றுக்குழுவினர் கோருவது குறித்துக் கேட்டபோது அதைக் கட்சியின் மத்திய குழு தீர்மானிக்கும் என அவர் பதிலளித்தார். 5 வருடங்களுக்கு ஒரு தடவை இம்மாநாடு கூட்டப்பட வேண்டும்.

ஆனால், விசேட அரசியல் சூழ்நிலைகளில் விசேட மாநாடுகளை கூட்டுவதற்கு இடமுள்ளது. இது குறித்து மத்திய குழு தீர்மானிக்கும் என பிமல் ரட்னாயக்க கூறினார். (2)

# 2011.09 30 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1399-நான்காம் ஹென்றி இங்கிலாந்தின் மன்னனாக முடி சூடினான்

★ 1744-பிரான்ஸ் மற்றும் ஸ்பெயின் இணைந்து சார்டீனியா பேரரசை தோற்கடித்தனர்.

★ 1791-மோட்ஸார்ட்டின் கடைசி ஒப்பேரா வியென்னாவில் அரங்கேறியது.

★ 1840-நெப்போலியன் பொனபார்ட்டின் எஞ்சிய உடல் பகுதி பிரான்சுக்கு எடுத்து வரப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது.

★ 1860-பிரித்தானியாவின் முதலாவது அமிழ் தண்டூர்தி (tram) சேவை ஆரம்பமானது.

★ 1867-ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவின் அதிகாரத்தைக் கைப்பற்றியது.

★ 1882-உலகின் முதலாவது நீர்மின் திறன் ஐக்கிய அமெரிக்காவின் விஸ்கொன்சின் மாநிலத்தில் அமைக்கப்பட்டது.

★ 1888-கிழிப்பர் ஜேக் தனது மூன்றாவது மற்றும் நான்காவது கொலைகளைச் செய்தான்.

★ 1895-மடகஸ்கார் பிரெஞ்சு பாதுகாக்கப்பட்ட அரசாக அறிவிக்கப்பட்டது.

★ 1901-ஹியூபேர்ட் செசில் பூத் தூசுறிஞ்சிக்கான காப்புரிமம் பெற்றார்.

★ 1935-அரிசோனா, நெவாடா மாநிலங்களுக்கிடையே ஊவர் அணை திறக்கப்பட்டது.

★ 1938-செக்கோசிலவாக்கியாவின் சுடெட்டென்லாந்துப் பகுதியை ஆளும் உரிமையை ஜேர்மனிக்கு வழங்குவதற்கான உடன்படிக்கையில் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் இத்தாலி ஆகியன அதிகாலை 2 மணிக்கு கையெழுத்திட்டன.

★ 1938-பொதுமக்களின் இருப்பிடங்கள் மீது வேண்டுமென்றே குண்டுத் தாக்குதல் நடத்தப்படுவது நாடுகளின் அணியினால் தடை செய்யப்பட்டது.

★ 1945-இங்கிலாந்தில் தொடரூந்து விபத்தில் 43 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1947-பாகிஸ்தான், ஜேர்மன் ஐ.நா.வில் இணைந்தன.

★ 1949-சோவியத்தினரின் தரைவழித் தடையை அடுத்து மேற்கு ஜேர்மனிக்கு 2.3 மில்லியன் தொன் உணவுப் பொருட்கள் வான்வெளி மூலமாக அனுப்பப்படுவது முடிவுக்கு வந்தது.

★ 1965-இந்தோனேசியாவில் இடம்பெற்ற கம்யூனிஸ்டுகளின் புரட்சியை ஜெனரல் சுகார்ட்டோ முறியடித்து சுமார் ஒரு மில்லியன் கம்யூனிஸ்டுகளைக் கொன்று குவித்தார்.

★ 1966-பெக்குவானாலாந்து பிரித்தானியாவிடம் இருந்து விடுதலையை அறிவித்து பொட்சுவானாக் குடியரசு ஆகியது.

★ 1967-இலங்கை வானொலி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எனப் பெயர் மாற்றப்பட்டது.

★ 1993-இந்தியாவின் மத்திய பிரதேசத்தின் லட்டூர் மற்றும் ஒஸ்மனாபாத் நகரங்களில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

★ 2001-இந்தியக் காங்கிரஸின் மூத்த தலைவர்களில் ஒருவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான மாதவராவ் சிந்தியா விமான விபத்தில் கொல்லப்பட்டார்.

★ 2003-தமிழ் விக்கிப்பீடியா ஆரம்பிக்கப்பட்டது.


★ 2007-இந்திய சதுரங்க வீரர் விஸ்வநாதன் ஆனந்த மெக்சிகோவில் இடம்பெற்ற உலக சதுரங்கப் போட்டிகளில் வெற்றி பெற்று புதிய உலகச் சம்பியன் ஆனார்.

**இறப்பு**

★ 2008-ஜே.பி.ஜெயரத்தினம், சிங்கப்பூர் அரசியல்வாதி (பி.1926)


**சிறப்பு நாள்**

★ பொட்சுவானா- சுதந்திர தினம் (1966)



★ 2004-காமினி பொன்சேகா, சிங்களத் திரைப்பட நடிகர் (பி.1936)

# நவீன எண் சோதிடம்



## பிரச்சினைகள் வரும்போது தயக்கமின்றி பேசி காரியத்தை வெற்றிகொள்வர் 59

### உடல் எண் 7 உயிர் எண் 3

7,16,25 போன்ற தேதியில் பிறந்து, பிறந்த தேதி,மாதம், வருடம் ஆகிய இம்மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 3 வருமேயானால் இவர்கள் கேது,குரு போன்ற ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்பதற்குக் கவர்ச்சியான முக அமைப்பும் குறுகுறுப்பான தன்மையும் கொண்டு விளங்குவர். ஓரளவு உயரமான தோற்றம் கொண்ட இவர்கள் பழமையும், புதுமையும் கலந்த வாழ்க்கை நடத்துவர். தான் பேசுகின்ற கருத்துக்களையும் தெளிவாகவும், சுருக்கமாகவும் பேசுவர். தனக்கு ஒரு பிரச்சினை வரும் போது தயங்காது பேசிக் காரியத்தை வெற்றிகொள்வர். தனக்குத் தேவையற்ற விடயங்களில் இறங்கி மாட்டிக் கொள்ளாது விழிப்புணர்ச்சியோடு இருப்பர்.

அதிகமான சிந்தனை கொண்ட இவர்கள் தான் செய்கின்ற ஒவ்வொரு செயலையும் சமுதாயத்தில் நிலையானதாக இருக்க வேண்டும் என்று எண்ணுவர். அதிகமான நண்பர்களை வைத்துக் கொள்ளாவிட்டாலும் குறிப்பிட்ட சிலரை நகமும் தசையும் போல் நண்பராக வைத்திருப்பர். இவர்களுக்கு பெயர் பொருத்தமாக அமைந்து விட்டால் நல்ல மாணவர்களை உருவாக்கும் சிறந்த ஆசிரியராகவும், கணித

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| A | B | C | D | E | U | O | F |
| I | K | G | M | H | V | Z | P |
| J | R | L | T | N | W | | |
| Q | | S | | X | | | |
| Y | | | | | | | |

வல்லுனராகவும், டாக்டராகவும், இஞ்சினியராகவும், பெரிய தொழில் அதிபராகவும் சிறப்புற்று வாழ்வர். அப்படிப் பெயர் பொருத்தமானதாக அமையாதவர்கள் குழப்பமான வாழ்க்கையில் சிக்குண்டு தவிப்பர்.

முன்கோபியான இவர்கள் யார் தவறு செய்தாலும் அதைச் சுட்டிக்காட்டிப் பேசுவர். தனக்கு ஏற்பட்டிருக்கும் சிக்கலை வெளியில் சொல்லாது மறைத்து விடுவர். கல்வி, கலை, ஆராய்ச்சி போன்றவற்றில் சிறந்து விளங்கும் இவர்களுக்கு பெயர் நன்றாக அமைந்து விட்டால் நாட்டில் நிர்வகிக்கும் முக்கிய பொறுப்புக்களை வகிப்பர்.

எப்பொழுதாவது எதையாவது சிந்தித்துக் கொண்டிருக்கும் இவர்களுக்கு கற்பனையில் வரக்கூடிய கவிதை கதைகளில் சிறந்து விளங்குவர். இன்னும் சிலர் எப்பொழுதும் எழுதிக்கொண்டே இருப்பர். பிறருக்கு உதவும் மனப்பான்மை கொண்ட இவர்களுக்கு பிரச்சினைகள் வந்துவிட்டால் அது முடியும் வரை தூக்கம் வருவதில்லை. ஏதாவது புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடிக்க முயல்வர். இவர்களை ஆராய்ச்சியாளர் என்றால் மிகையாகாது.

கணிதம்,ஜோதிடம், மருத்துவம், விஞ்ஞானம், சாஸ்த்திரம், அரசியல் போன்றவற்றில் இவர்களது மனம் ஆராயத் தொடங்கும். நாட்டுப்பற்றும், மதப்பற்றும் மிகுந்த இவர்கள் தன் நாட்டிற்கும் மதத்திற்கும் உண்மையாக உழைக்க வேண்டும் என்று முயல்வர். அப்படி உழைத்துக் கொண்டு இருக்கும் போதே திடீரென்று மனம் வெறுத்து அந்த இடத்தை விட்டு அகன்று விடுவர். தன்னை விடப் பலசாலி இருந்தாலும் நேர்மைக்காக எதிர்த்து போராடுவர். வாழ்க்கையில் சிறிது குழப்பம் கொண்ட இவர்களுக்கும் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் தொடர்ந்து வெற்றி கிட்டும். தொழில் செய்யும் பலர் அதிகம் பேசாத காரணத்தால் தொழிலை அபிவிருத்தியாக்க முடியாமல் இருப்பர். தனக்கு ஏற்படும் சிக்கல்கலைத் தவிர்க்க அடுத்தவரிடம் யோசனை கேட்க கூட அஞ்சுவர்.

பிறந்த தேதிக்குப் பொருத்தமான பெயர் அமைந்தவர்கள் படிப்படியாக வாழ்க்கையில் முன்னேற்றம் அடைகின்றனர். உள்ளொன்று வைத்துப்புறம் ஒன்று பேசத் தெரியாத நேர்மையையே

**எண் கணித நிபுணர்**
**கலாநிதி ஆர்.ஐ.துரைமுருகர் D.LIT**

இவர்கள் மனம் விரும்பும். பெயர் பொருத்தமில்லாது இருந்தாலும் வீண் சிக்கலாலும்,வீண் செலவாலும் இல்லற வாழ்க்கையில் ஏற்படும் குழப்பங்களாலும் மனம் வருந்துவர். நண்பர்களிடத்துக் கருத்து-வேறுபாடுகள் உருவாகும். தான் போட்ட திட்டங்கள் தோல்வியடையும். வாழ்க்கைத் துணைவரால் பிரச்சினைக்கு ஆளாக நேரும்.

சிலருக்குப் பெண்களிடம் பழகுவதால் சிக்கல் ஏற்படும். சகோதர்கள் எதிரியாக மாறுவார்கள். இதனால் பெயரைப் பொருத்தமான நல்ல எண்ணில் அமைத்துக் கொண்டால் கெட்ட பலன்கள் குறைந்து நல்ல முன்னேற்றம் காண்பர். தனக்கு வரப்போகும் துன்பத்தை முன் கூட்டியே உணரும் திறமை படைத்ததவர்கள். ஆடம்பரமாக காட்சியளிக்கும் இவர்கள் திடீரென்று எளிமையாக காட்சியளிப்பர். கீழே குறிப்பட்ட படி பெயரை மாற்றி அமைத்துக் கொண்டால் நல்ல முன்னேற்றம் அடையலாம்.

**தொழில்**

இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களில் பலர் வேலை செய்பவர்களாகவும் இன்னும் பாதித் தொழில் செய்பவராகவும் விளங்குகின்றனர். திரவப் பொருள், கல், மருந்து வியாபாரம் கலை சம்பந்தமான பொருள் ஒப்பந்த வேலைகள் ஏஜென்சீஸ் போன்றவற்றால் இலாபம் பெறுவர்.

**நோய்**

வாயு சம்பந்தமான அனைத்து நோய்களும் உஷ்ண சம்பந்தமான வியாதிகளும், நரம்பு சம்பந்தமான வியாதிகளும், நெஞ்சு வலியும் வரும். சில நேரங்களில் மனஅமைதியின்மையால் மன நோய் வரலாம்.

**பெயர் அமைக்கும் முறை**

இவர்களுக்கு புதன், ஆதிக்கமாகிய 14,23,32,41,50,59,77 போன்ற எண்களிலும் குரு, ஆதிக்கமாகிய 21,39 போன்ற எண்களிலும் பெயரை அமைத்துக் கொள்ளலாம்.

**பின்பற்ற வேண்டியவை**

யோகமான எண் -2,5,3

யோகமான தேதிகள்-2,11,20, 29,5,14,23,

யோகமான மோதிரக்கல்- வைடூரியம், முத்து, மூன் ஸ்ரோன், டைகர்ஸ் ஐ

யோகமான நிறம்- வெளிர் நீலம் வெளிர் மஞ்சல்

ஆகாத தேதிகள்-9,18,27, 6,15,24,


ஆகாத நிறம்- சிவப்பு மட்டும்

* * *

### பெயர் எண்களின் பலன்

**72 எண் பலன்**

கேதுவும் சந்திரனும் பொருத்தமானவர்களாதலால் இந்த எண்ணைப் பெயரில் உடையவர்கள் இளமையில் பல்வேறு அனுபவங்களால் 'பத்தரை மாற்றுத்தங்கம்' ஆவர். இவர்கள் மிகுந்த நிதானமும் நிர்வாகத்திறமையும் கொண்டு ஏராளமாகப் பணம் சம்பாதிப்பர். தனது கஷ்ட நஷ்டங்களைப்



பொருட்படுத்தாது உயர்ந்த நிலையை அடைவர். சொத்துக்களும் வீடு, வாகன அமைப்புக்களும் பெற்று வாழ்வர்.

**73 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராக உடையவர்கள் பொது வாழ்க்கையில் ஈடுபட மாட்டார்கள். தம்மைப் பொறுத்தவரை ஒரு சுகமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டு பல்வேறு துறைகளில் பணம் சம்பாதிப்பர். தன் வருமானத்தை வீடாகவோ, நிலமாகவோ ஆக்கிவிடுவர். யோகம் நிறைந்த வாழ்க்கையை கொண்ட இவர்கள் கெட்ட வழியில் இறங்க முற்படுவாரேயானால் இவ்வெண் திசைமாறி விடும். இதனால் இவர்கள் எப்பொழுதும் தெய்வ வழிபாட்டை மேற்கொள்வது நலமாகும்.

**74 எண் பலன்**

இந்த எண்ணைப் பெயராக உடையவர்கள் தன்னைச்சார்ந்த சமுதாயத்தை உயர்த்தப் பாடுபடுபவர். ஆனால் இவர்களுக்கு நல்ல பெயர் கிடைக்காது. கடைசியில் தமது தொண்டை மக்கள் உணரவில்லையென்று குறை கூறுவர். கண்ணில் தெரிகிற மனிதரை நம்புவதை விட மனதில் தெரிகிற கடவுளை நம்புவது மேல் என நினைப்பர். இவரது ஜீரண உறுப்பு வலிமை குறைவதன் காரணமாக ஜீரணக் கோளாறுகள் வர வாய்ப்புள்ளது.

**75 எண் பலன்**

இந்த எண் கேதுவும் புதனும் சேர்ந்து வருவதால் எழுத்தாலும் பேச்சாலும் கலையாலும் உயர்த்தும். இவர்களுக்குப் பல்வேறு நல்ல நண்பர்கள் உதவ முன் வருவர். புகழும் அந்தஸ்தும் உயர்ந்து கொண்டே போகும். ஆனால் 6,15,24 போன்ற தேதிகளில் பிறந்தவர்கள் இந்த எண்ணைப்பெயராக வருகின்ற மாதிரி அமைத்துக் கொண்டால் பல்வேறு துன்பங்களைச் சந்திக்க நேரும்.

(தொடரும்)

# 10 ஆயிரம் ரூபா சம்பள உயர்வு கோரி நாடு தழுவிய ரீதியில் போராட்டம் நடத்தப்படும்

(கொழும்பு)

பத்தாயிரம் ரூபா சம்பள உயர்வு கோரி நாடு தழுவிய ரீதியில் போராட்டங்கள் நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி.பி. ஆதரவு தொழிற்சங்கங்களினால் நேற்றைய தினம் இந்தத் தொழிற்சங்கப் போராட்டம் இடம்பெற்றது.

பொதுத்துறை ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

பொதுத்துறை ஊழியர்களுக்கு பத்தாயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டும் எனவும் ஏனைய தனியார் துறையினருக்கு 40 வீத சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சம்பள உயர்வு போராட்டம் குறித்த முதலாவது விழிப்புணர்வு கருத்தரங்கு இன்றைய தினம் கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கின் பிரதான விரிவுரையாளராக ஜே.வி.பி.யின் சிரேஷ்ட உறுப்பினர் கே.டி.லால்காந்த் கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினம் குருநாகலில் மற்றுமொரு கருத்தரங்கு நடைபெறவுள்ளது. கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் பாரியளவிலான தொழிற்சங்க போராட்டங்களை நடத்தத் தயங்கப் போவதில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இந்த சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஜே.வி.பி.கட்சிக்குள் பிளவு ஏற்பட்டதன் பின்னர் முதல் தடவையாக இன்று மக்கள் மத்தியில் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் உரையாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## சார்க் மாநாட்டிற்கு இல.படை பாதுகாப்பு

(கொழும்பு)

மாலைதீவில் நடைபெறவுள்ள சார்க் மாநாட்டுக்கு இலங்கையிலிருந்து விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக செல்லவுள்ளனர்.

இலங்கை ஜனாதிபதி உட்பட பல நாட்டு அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளமையினால் அவர்களின் பாதுகாப்பு கருதியே விசேட அதிரடிப் படையினரை அனுப்பத் தீர்மானித்துள்ளதாக தெரியவருகின்றது. இது சம்பந்தமாக மோப்ப நாய்களுக்கும் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. (4)

# போலி ஆவணங்களைத் தயாரித்து அரச காணிகளை விற்ற ஐவர் கைது

(கொழும்பு)

போலியான ஆவணங்களைத் தயாரித்து அரசாங்கக் காணிகளை விற்பனை செய்த சந்தேகத்தின் பேரில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கற்பிட்டி பிரதேசத்தில் அரசாங்கத்திற்கு சொந்தமான 92 ஏக்கர் காணி இவ்வாறு விற்பனை செய்யப்பட்டுள்ளது. சுற்றுலா விடுதி ஒன்றுக்கு இந்தக் காணி விற்பனை செய்யப்பட்டுள்ளது.


காணி உறுதிகளையும் நீதிமன்ற தீர்ப்புக்களையும் போலியான முறையில் தயாரித்து இந்த மோசடி இடம்பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் மூலம் இந்த மோசடி அம்பலமாகியுள்ளது.

சித்தி ருஸ்மியா, உம்மு குல்தும், அப்துல் கலாம் அஸாட், சித்தி சுராட் மற்றும் ஜமால்தீன் மரிக்கார் ஆகிய சந்தேச நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 5 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (2)

# சிவில் பாதுகாப்பு குழுக்களை மீளவும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்

## பாதுகாப்பு செயலாளர் அறிவிப்பு



சிவில் பாதுகாப்பு குழுக்களை மீளவும் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு சிவில் பாதுகாப்பு குழுக்கள் பாரியளவில் உதவியாக அமைந்தது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களை இல்லாதொழிப்பதற்கு சிவில் பாதுகாப்பு குழுக்கள் உதவியாக அமையும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

சிவில் பாதுகாப்பு குழுக்களை அமைப்பதன் மூலம் பொலிஸாருக்கும் கிராம மக்களுக்கும் இடையிலான பிணைப்பை அதிகரிக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். நாடு முழுவதிலும் சிவில் பாதுகாப்பு குழுக்களை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, பொலிஸாருடன் மக்கள் நெருக்கமான செயற்பட்டால் கிறிஸ் பேய் பிரச்சினைக்கு இலகுவில் தீர்வு காண முடியும் என பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோன் தெரிவித்துள்ளார். (2)

# யாழ்.பழைய பூங்காவை அழிக்கும் திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும்

## ஜனாதிபதியிடம் விஜயகலா எம்.பி. கோரிக்கை

யாழ்ப்பாணம் பழைய பூங்காவை இடித்து அழிக்கும் முயற்சியினை உடனடியாக கைவிட வேண்டும். தொல்பொருள் திணைக்களத்தினால் பாதுகாக்கப்பட வேண்டிய இந்தப் பூங்கா இடிக்கப்படுகின்றமை தமிழ் மக்களின் வரலாற்று சான்றுகளை அழிப்பதற்கு சமமான நடவடிக்கையாகும்.

இவ்விடயத்தில் உடனடியாக தலையிட வேண்டியது அவசியமாகும் என்று ஐ.தே.க.வின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாணம் பழைய பூங்கா என்பது தமிழ் மக்களின் வரலாற்றை கலாசார விழுமியங்களை பறைசாற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இந்த இடத்தினை இடித்து அழிப்பதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கக் கூடாது. இந்த இடத்தில் புதிய பூங்காவை மக்களின் பாவனைக்காக அமைக்கப் போவதாக கூறி உயர் மட்டத்தின் உத்தரவுக்கமைய யாழ். மாநகரசபையினரால் பூங்காவைச் சூழவுள்ள சுற்று மதில்கள் உடைக்கப்பட்டுள்ளன. பூங்காவில் காணப்படும் கேணிகள் மற்றும் சிறிய கட்டடங்களை உடைப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பழைய பூங்காவை இடித்து அழிப்பது குறித்து யாழ். அரசாங்க அதிபருக்கும் உரிய வகையில் அறிவிக்கப்படவில்லை என்று தெரிகின்றது. முறையற்ற விதத்தில் இதனை இடிப்பது தவறான நடவடிக்கையாகும். எனவே தமிழ் மக்களின் வரலாற்றை பறைசாற்றும் இந்தப் பூங்காவை பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும்.

இந்தப் பழைய பூங்காவை பாதுகாத்துக் கொண்டு புதிய பூங்காக்களை அரசாங்கம் அமைக்க வேண்டும். இதுவே சாலச்சிறந்ததாகும். தொல்பொருள் திணைக்களத்தினால் பழைமைவாய்ந்த இடமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் இந்தப் பூங்காவை அழிக்காது அதனை பாதுகாக்குமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஜனாதிபதியான தாங்கள் உத்தரவிட வேண்டும். (4-2)

# விசா முடிவுற்றும் தங்கியுள்ளோரை கண்டுபிடிப்பதற்கு விசேட பிரிவினர்

## இல.குடிவரவு, குடியகல்வு திணைக்களம் நடவடிக்கை

காலாவதியான விசாக்களுடன் இலங்கையில் தங்கியிருப்போரை கண்டுபிடிப்பதற்கு விசேட பிரிவொன்று நியமிக்கப்படவுள்ளது.

இலங்கையில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள விசா காலத்தைத் தாண்டித் தொடர்ந்தும் தங்கியிருக்கும் வெளிநாட்டு பிரஜைகளை கைது செய்யும் நோக்கில் இந்தப் பிரிவு நியமிக்கப்படவுள்ளது.

இலங்கைக் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் இந்த விசேட பிரிவு உருவாக்கப்படவுள்ளது.

சட்டவிரோதமான முறையில் தங்கியிருக்கும் வெளிநாட்டுப் பிரஜைகள் பற்றிய தகவல்களைத் திரட்டி அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் சூளானந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டவர்கள் தங்கியிருக்கக் கூடிய இடங்களில் விசேட சோதனையை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (4-2)

# நெதர்லாந்து நாட்டில் இருபது விடுதலைப்புலிகளின் பாடசாலை


நெதர்லாந்து ஈழக் கோரிக்கையை வியாபிக்கும் நோக்கில் 20 பாடசாலைகள் இயங்கி வருவதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## லக்பிம தகவல்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நிதி திரட்டிய குற்றச்சாட்டின் பேரில் வழக்குத் தொடரப்பட்டுள்ள ஐந்து இலங்கையர்களிடம் நடத்திய விசாரணைகளின் மூலம் இந்தத் தரவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

நெதர்லாந்தில் வாழும் தமிழ் சிறுவர், சிறுமியருக்காக இந்தப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அகதிகளாக தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழ குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர், சிறுமியர் இந்தப் புலிகளின் பாடசாலைகளில் கல்வி கற்று வருகின்றனர்.

மீண்டும் இலங்கைக்குச் சென்று வாழ்வதற்கான ஆலோசனைகளை வழங்கும் போர்வையில் இந்தப் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. சிங்கள விரோத ஈழக் கோட்பாடு, இனவாதக் கோட்பாடு உள்ளிட்ட இலங்கைக்கு எதிரான கருத்துக்கள் இந்த பாடசாலைகளில் போதிக்கப்படுவதாக குறித்த பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-2)



யாழ். கல்வி வலயத்தினால் தரமான சமூகத்திற்கான கல்வி வழங்கல் எனும் தலைப்பிலான செயலமர்வொன்று யாழ். கல்வி வலய கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் யாழ். கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.மகேந்திரன் செயலமர்வு நடத்துவதையும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர். இராஜலிங்கம், கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ். பாலசுப்பிரமணியம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் செயலமர்வில் கலந்து கொண்ட யாழ். கல்வி வலய அதிபர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:- என்.குமார்)*

# ஊழல் அமைச்சர்களை பிரதமர் மன்மோகன் காப்பாற்றுகிறார்

## பா.ஜ.க. குற்றச்சாட்டு

(புதுடில்லி)

ஊழல் அமைச்சர்களை பிரதமர் மன்மோகன்சிங் காப்பாற்றுகிறார் என பாரதிய ஜனதா குற்றம் சாட்டியுள்ளது.

நியூயோர்க்கில் இருந்து டில்லி திரும்பும் வழியில் கடந்த 25 ஆம் திகதி விமானத்தில் நிருபர்களிடம் பேசிய பிரதமர் மன்மோகன் சிங், இந்த நாட்டையும் அரசையும் சீர்குலைக்க சில சக்திகள் முற்பட்டுள்ளன. நாட்டில் முன்கூட்டியே லோக்சபா தேர்தலை நடத்த எதிர்க்கட்சியினர் அவசரப்படுகின்றனர் என குற்றம் சாட்டினார்.

இதற்குப் பதிலளித்துப் பேசும்போதே லோக் சபா எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் இதனைக்குறிப்பிட்டார்.அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் 2ஜி ஸ்பெக்ட்ரம் மோசடியில் ராஜாவை போல குற்றம் புரிந்தவர் உள்துறை அமைச்சர் சிதம்பரம். ஊழல் அமைச்சர்களை பிரதமர் மன்மோகன்சிங் பாதுகாக்கிறார். மத்திய அரசை கவிழ்க்க எதிர்க்கட்சிகள் எதுவும் செய்யவில்லை.

அரசிற்குள் உள்ள முரண்பாடுகளால் அதுவே தானாக கவிழ்ந்து விடும். அரசை கவிழ்க்கும் அளவுக்கு எங்களிடம் எம்.பிக்கள் பலமும் இல்லை.

2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு தொடர்பாக எல்லா விபரங்களும் பிரதமருக்கு தெரியும் என அரசின் பைல்கள் மூலம் தெரியவந்துள்ளது. அவருக்குத் தெரியாமல் எதுவும் நடக்கவில்லை. 2ஜி ஒதுக்கீடு மோசடி புகார்கள் தொடர்ந்து கொண்டிருப்பதால் அமைச்சர் சிதம்பரம் இராஜினாமா செய்ய வேண்டும்.

பிரதமர் அலுவலகத்திற்கு சமீபத்தில் மத்திய நிதியமைச்சகம் அனுப்பிய குறிப்பை பார்க்கும் போது 2ஜி ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீடு மோசடி அமைச்சர் சிதம்பரத்திற்கு தெரியாமல் நடக்கவில்லை. அவரின் ஒப்புதலோடுதான் நடந்திருக்கிறது. ராஜா என்ன தவறு செய்தாரோ அதே தவறை சிதம்பரமும் செய்துள்ளார். மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு ஒரு முரண்பாடான கூட்டணி தர்மத்தை பின்பற்றுகிறது.

கூட்டணி கட்சியின் அமைச்சர் தவறு செய்தால் அவரை சிறையில் தள்ளுகிறது. அதே நேரத்தில் காங்கிரஸ் தன் அமைச்சர் தவறு செய்தால் அவரை காப்பாற்றுகிறது. பிரதமர் மன்மோகன்சிங் எதிர்க்கட்சிகளை குறை சொல்வதற்கு பதில் முதலில் தன் வீட்டைக் காப்பாற்ற வேண்டும். எதிர்க்கட்சிகள் மீது



குற்றம் சுமத்திவிட்டு அமைச்சர்களுக்கு நற்சான்று வழங்கக்கூடாது.

பொறுப்பான எதிர்க்கட்சி என்ற முறையில் நாங்கள் கேள்விகள் கேட்கிறோம். அப்படி கேட்கும் எங்களை அரசில் உள்ளவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். 2ஜி விவகாரத்தில் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் உள்துறை அமைச்சர் சிதம்பரம் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது .எனசுஷ்மா சுவராஜ் கூறினார். (4-2)

## மத்திய அரசு கறுப்பு பணத்தை மீட்க வேண்டும்

(புதுடில்லி)

அந்நிய நாடுகளில் குவிக்கப்பட்டுள்ள கறுப்பு பணத்தை மீட்டுக் கொண்டுவர மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது என யோகா குரு ராம் தேவ் கூறியுள்ளார்.

ஊழல் மற்றும் கறுப்பு பணத்திற்கு எதிராக மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த 10 ஆயிரம் கி.மீ தூர சுவாபிமான் யாத்திரையை யோகா குரு ராம்தேவ் கடந்த 20 ஆம் திகதி உ.பி. மாநில ஜான்சியில் ஆரம் பித்துள்ளார். தற்போது உன்னாவோ சென்றடைந்துள்ளார்.

அவர் அங்கு நிருபர்களிடம் கூறியதாவது, மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு நாட்டை கொள்ளை அடிக்கிறது. பெரும் ஊழலில் ஈடுபடுகிறது. இந்த அரசு ஊழலை முடிவுக்கு கொண்டுவரும் அந்நிய நாடுகளில் குவிக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தை மீட்டுக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது. நாட்டை கொள்ளை அடிக்க காங்கிரசே காரணம். அதனால் தான் அந்த அரசுக்கு எதிராக மக்களின் கருத்தை திரட்ட முற்பட்டுள்ளேன் என்றார். (4-2)

## கூடங்குளம் அணுமின் நிலையம் நாட்டுக்கு அவசியமானது

## பிரதமர் மன்மோகன் தெரிவிப்பு

(புதுடில்லி)

கூடங்குளம். அணுமின் நிலையம் நாட்டுக்குத் தேவையானது என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமியிடம் பிரதமர் மன்மோகன் சிங் கருத்து தெரிவித்தார்.

திருநெல்வேலி மாவட்டம் கூடங்குளம் அணுமின் நிலைய விரிவாக்கப் பணிகளுக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்து உண்ணாவிரத போராட்டம் நடத்தினர்.

இந்த விவகாரத்தில் மத்திய அரசிடம் கலந்து ஆலோசித்துத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழக அரசு உறுதியளித்ததை அடுத்து உண்ணாவிரத போராட்டம் கைவிடப்பட்டது.

இந்நிலையில் பிரதமர் மன்மோகன்சிங் தனது அமெரிக்கப்பயணத்தை முடித்துக் கொண்டு கடந்த செவ்வாய்க்கிழமை டில்லி திரும்பினார்.அவரை மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி ரேஸ் கோர்ஸ் வீதியில் அவரது இல்லத்தில் நேற்று மாலை சந்தித்துப் பேசினார். பின்னதாக பேசிய பிரதமர் மன்மோகன் சிங், நிலக்கரி, தண்ணீர் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் தற்போதைய மின் தட்டுப்பாட்டை பூர்த்தி செய்யாது.



ஆகையால் நாட்டுக்கு மின்சாரம் தேவையானது. கூடங்குளம் அணுமின் நிலையத்துக்குத் தேவையான பாதுகாப்பு அம்சங்கள் சிறப்பாக செய்யப்பட்டுள்ளன என்று பிரதமர் தெரிவித்துள்ளார். (4-2)

## பாரதச் செய்திகள்

## படித்துவிட்டு வேலையில்லாது இருப்பதே புரட்சி வெடிக்க காரணமாகின்றது

## தேர்தல் உரையில் விஜயகாந்த் தெரிவிப்பு



உள்ளூராட்சி தேர்தலில் எங்களை வெற்றி பெற வைத்தால் தவறுகள் நடக்காது என வேலூரில் நடந்த கூட்டத்தில் விஜயகாந்த் உரையாற்றியுள்ளார்.

வேலூர் மேயர் வேட்பாளர் போட்டியிடும் மார்க்சிஸ் கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் லதாவை ஆதரித்து வேலூர் மண்டித் தெருவில் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் நேற்று முன்தினம் இரவு பிரசாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது, சுதந்திரம் அடைந்து 65 ஆண்டுகள் ஆகியும் இன்னும் வீதி பிரச்சினை, குடிநீர் பிரச்சினை, பேருந்து தரிப்பிடம் பிரச்சினை எல்லாம் உள்ளது. அதைப்பற்றிக் கவலைப்படாமல் ஒருத்தர் (துரைமுருகன்) காட்பாடி பலாற்றில் மணல் கொள்ளை அடித்து வருகிறார். வேலூர் பேருந்து நிலையத்தில் 5 ஏக்கர் நிலம் ஆக்கிரமிப்பு செய்கின்றனர். அவர்களுக்கும் பாடம் புகட்ட வேண்டாமா? நான் யாருக்கும் பயப்படமாட்டேன். விஜயகாந்த் தனியாக வந்து பேசுவதாக நினைக்காதீர்கள். தெய்வம் எப்போதும் நேரில் வராது. மக்கள் ரூபத்தில் தான் வரும். கம்சனை அழிக்க ஒன்று சேர்ந்தோம். வாக்களித்து ஜெயிக்க வைத்தீர்கள். இப்போது இப்படிப்பட்ட தொண்டர்களை விட்டு விட்டோம் என ஒவ்வொருவரும் நினைக்க வேண்டும். நேற்று தே.மு.தி.க வுக்கு ஒரு எம்.எல்.ஏ. இப்போது 29 எம்.எல்.ஏக்கள். முன்பு 71 ஆவது கட்சி என்று சொன்னார்கள். இப்போது முதலாவது கட்சியாகி விட்டது. நாளை நாம்தான் தலைவன். நான் பொடி வைத்துப் பேசவில்லை. உங்களுக்கு புரிய வேண்டும் என்றுதான் பேசுகின்றேன்.

தமிழகத்தில் 63 இலட்சம் இளைஞர்கள் வேலைக்காக காத்துக்கொண்டுள்ளனர். ஆனால் காசு வாங்கிக் கொண்டுதான் கல்லூரிகளில் சீட் கொடுக்கின்றனர். படித்துவிட்டு வேலை இல்லாததால்தான் புரட்சிகள் வெடிக்கின்றன. யாரையும் இலஞ்சம் வாங்க விட மாட்டோம். உள்ளாட்சியில் ஒரு சந்தர்பம் கொடுத்துப் பாருங்கள். எங்களை வெற்றி பெற வைத்தால் தவறுகள் நடக்காது. எத்தனை காலம்தான் நீங்கள் ஏமாந்து கொண்டிருப்பது. இந்த சந்தர்ப்பத்தை விட்டால் வேறு சந்தர்ப்பம் வராது.

கடந்த முறை ஜாதியை சொல்லி தன் மகனை மந்திரியாக்கி எத்தனை பேருக்கு வேலை கொடுத்தார்கள். ஜாதியைச் சேர்ந்தவர்களுக்காவது வேலை கொடுத்தார்களா? மருத்துவக் கல்லூரியில் சீட் வாங்கித் தந்தார்கள். அவர்கள் வளர்ச்சியைத்தான் பார்த்து வந்தனர்.அவர்களுக்காக வீதி மறியல் செய்தவர்கள் இன்னும் வழக்கு விசாரணை என்று அலைந்து கொண்டுள்ளனர். பல ஆயிரம் கோடிக்கு திட்டங்கள் போட்டனர். ஆனால் அந்த திட்டங்கள் பேப்பரில்தான் உள்ளது. மக்களை ஏமாற்றி வருகின்றனர். மக்கள்தான் அவர்களை திருத்த வேண்டும் என்றார். (4-2)



ராஜீவ் அறக்கட்டளை சார்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனங்கள் வழங்கும் நிகழ்ச்சி டில்லியில் இடம்பெற்றது. அறக்கட்டளை டிரஸ்ட்டில் ராகுலை கட்டித்தழுவி தன் மகிழ்ச்சியை பகிர்ந்து கொண்ட மாற்றுத் திறனாளி ஒருவரையும் அருகில் அவரது உடன் பிறப்பு பிரியங்காவையும் படத்தில் காணலாம்.

# புராதன சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்

## மாநகரசபை உறுப்பினர் சங்கையா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென் இலங்கையில் உள்ள வரலாற்றுச் சின்னங்கள் எவ்வாறு பாதுகாக்கப்படுகின்றதோ அதேபோன்று தமிழர் பகுதிகளில் உள்ள வரலாற்றுச் சின்னங்களும் அதன் அழகும், வடிவமும் கெடாதவாறு பாதுகாக்கப்படவேண்டும் என யாழ்.மாநகரசபையின் உறுப்பினர் இரா.சங்கையா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த யாழ். பழைய பூங்காவை அதன் சுவடுகளே தெரியாமல் இடிந்து அழிப்பதென்பது எவராலும் ஏற்றுக் கொள்ளமுடியாததொன்று.

தென் இலங்கையில் வரலாற்றுச் சின்னங்கள் பாதுகாக்கப்படுவதோடு அதன் வடிவமும், அழகும் கெடாதவாறு மெருகூட்டப்படுகின்றது.

ஆனால், இங்கு மட்டும் ஏன் இப்படி நடக்கின்றது? சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏன் இந்த அவசரம் என்பது எவருக்குமே புரியாமல் உள்ளது.

எத்தனையோ வேலைத்திட்டங்கள் உறுப்பினர்களால் சபையில் தீர்மானிக்கப்பட்டு இதுவரை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றபோது இவ்வாறான அழிப்பு நடவடிக்கைகளுக்கு மட்டும் மாநகரசபை ஏன் இந்த அவசரம் காட்டுகின்றது.?

நாளுக்கு நாள் வடிகால்கள் மூடப்பட்டு இரவோடு இரவாக கடைகள் கட்டப்படுகின்றன.

வடிகால்கள் திருத்துதல் போன்ற நடவடிக்கைகளுக்கு இவ்வளவு அவசரம் காட்டுவதில்லை. பழைய பூங்காவும், செயலக கட்டடமும், ஒரு புராதனச்சின்னம் இவைகள் அனைத்தும் அதன் அழகும் வடிவமும் முன்பிருந்தவாறே திருத்தி அமைக்கப்பட வேண்டுமேயொழிய முற்றாக அழிப்பதென்பது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும் என அந்த அறிக்கையில் அவர் குறிப்பிட்டிருந்தார். (4-6)

# சனல் 4 காணொளியை நோர்வேயில் வெளியிட இலங்கை ஆட்சேபித்துள்ளது

(கொழும்பு)

சனல் 4 தயாரித்த இலங்கையின் கொலைக்களங்கள் காணொளியை ஒளிபரப்ப நோர்வேயின் முன்னணி தொலைக்காட்சி நிறுவனம் எடுத்த முடிவை இலங்கை ஆட்சேபித்துள்ளது.

இலங்கையின் தூதுவர் ரொட்னி எம் பெரேரா இந்த ஆட்சேபனையை ளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக தொலைக்காட்சி என் ஆர்கே நிறுவனத்துக்கு தூதுவர் கடிதம் எழுதியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக புனையப்பட்ட அடிப்படையற்ற காணொளியாகவே சனல் 4 கின் இலங்கையின் கொலைக்களங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் நல்லிணக்கம் தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நிலையில் இவ்வாறான கணொளிகள் அந்த முனைப்புகளில் பாதிப்புக்களை கொண்டு வந்து விடும் என்றும் தூதுவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சனல் 4 காணொளியை ஒளிபரப்புவதன் மூலம் நோர்வேயில் உள்ள இலங்கை தூதரக அதிகாரிகள் மற்றும் நோர்வேயில் உள்ள இலங்கையர்கள் பாதுகாப்பு குறித்து பிரச்சினை எழுந்துள்ளதாக தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் சனல் 4காணொளிக்கு பதிலாக இலங்கை அரசாங்கம் தயாரித்துள்ள Lies Agreed Upon என்ற காணொளியையும் தொலைக்காட்சி என்ஆர்கே ஒளிபரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கை தூதுவர் கோரிக்கை விடுத்துள்ளார். (4-2)

# சிறுவர் தினமும் பாராட்டு விழாவும்

(இருபாலை)

யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலய சிறுவர் தினமும் புலமைப்பரிசில் பாராட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நியூயோர்க் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் டாக்டர் சண்முகசுந்தரம் தெய்வேந்திரன், டாக்டர் றாஜம் தெய்வேந்திரம், சிறப்பு விருந்திர்களாக யாழ்.கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி வ.சிவபாலன், கந்தையா மடகற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக்கழக தலைவர் இரா. செல்வவடிவேல், வெற்றிஇலக்கு தயா அச்சக இயக்குநர் வி.தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் மாணவர்கக்கான பரிசில்களை டாக்டர் றாஜம் தெய்வேந்திரன் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (4-12-136)

# ஊழலை நிரூபித்தால் பதவி விலக தயாார்

## யாழ்.மாநகரசபை முதல்வர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தன்மீதான ஊழல் மோசடிகள் நிரூபிக்கப்பட்டால் பதவி விலகத் தயாராகவுள்ளதாக யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாநகரசபையின் இவ்வருடத்திற்கான 9 ஆவது மாதாந்த பொதுக்கூட்டம் நேற்று முதல்வரின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த காலங்களில் யாழ்.மாநகரசபையின் மீதும் என்மீதும் பல்வேறு ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் அரசியல் காழ்புணர்ச்சி காரணமாக சுமத்தப்பட்டது. அதில் எந்தவித உண்மையும் இல்லை. அவை ஆதாரமற்றவை எனத் தெரிவித்ததோடு உழல் மோசடிகளில் ஈடுபட்டது நிரூபிக்கப்பட்டால் பதவி விலகத் தாம் தயாராகவுள்ளதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

மேலும் தாம் யாழ்.மாநகரசபையின் முதல்வராக பொறுப்பேற்ற பின்பு சபை நிர்வாகம் சரிவர நடைபெறுகின்றது என்பதை சபையில் ஆவணமாக காட்சிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

# துணுக்காய் வலய திருக்குறள் மனனப்போட்டி முடிபுகள்

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே கோட்ட மட்டத்தில் நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டி முடிவுகள் துணுக்காய் கல்வி வலய கல்விப் பணிப்பாளர் த.மேகநாதன் அறிவித்துள்ளார்.

இதில் துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள துணுக்காய் கோட்டம், மாந்தை கிழக்கு கோட்டம், ஒட்டுசுட்டான் கோட்டம் ஆகிய கோட்டங்களில் வெற்றியீட்டிய முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

### துணுக்காய் கோட்டம்

*தரம்-1*

ந.திகழினி (மு/யோகபுரம் ம.வி), வி.மகிழினி(மு/ஐயங்கன் குளம் அ.த.க. பாடசாலை), சி.மதுசுதன் (மு/மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம் மல்லாவி)

*தரம்-2*

அ.மனோறஞ்சனி(மு/யோகபுரம்.ம.வி), ம.கௌதமன்(மு/அணிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம்), வி.சானுகா (மு/கல்விளான் அ.த.க.பாடசாலை)

*தரம்-3*

பி.தனோஜன் (மு/யோகபுரம் ம.வி), க.லுக்சிகா(மு/அணிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம்),ர.டியூனெக்சலா(மு/துணுக்காய் அ.த.க.பாடசாலை)

*தரம்-4*

வி.சஞ்சிவன்(மு/கல்விளான் அ.த.க.பாடசாலை), ம.தினேகா(மு/யோகபுரம்.ம.வி), கா.டனுசா(மு/அணிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம்),

*தரம்-5*

செ.சங்கவி (மு/அணிஞ்சியன் குளம் தமிழ் வித்தியாலயம்), பி.எடின்சிகா (மு/யோகபுரம் ம.வி), யோ.மயூரிகன்(மு/வவுனிக்குளம் படிவம் 4 அ.த.க. பாடசாலை)

### மாந்தை கிழக்கு கோட்டம்

*தரம்-1*

ப.தனுசியா(மு/பனங்காமம் பூவரசங்குளம் அ.த.க பாடசாலை), ஜெ.பிரதாபன் (மு/பாண்டியன் குளம் ம.வி) ந.சாதனா(மு/பாலிநகர் ம.வி)

*தரம்-2*

சி.குபேனி(நுத்தாங்கண்டல் அ.த.க. பாடசாலை), த.டனுசன்(மு/பாலிநகர் ம.வி),இ.பிரியதர்சினி (மு/பனங்காமம் பூவரசங்குளம் அ.த. க.பாடசாலை),

*தரம்-3*

ச.சர்னுஜா(மு/பாண்டியன் குளம் ம.வி), ம.டிலக்ஷனா (மு/பணங்காமம் பூவரசங்குளம் அ.த.க பாடசாலை),நா.வினித்தா(மு/பாலிநகர் ம.வி),

*தரம்-4*

த.நிதுர்சன்(மு/பணங்காமம் பூவரசங்குளம் அ.த.க பாடசாலை), ச.ரஜிந்தன்(மு/பாண்டியன் குளம் ம.வி),இ.நர்மதா(மு/பாலிநகர் ம.வி),

*தரம்-5*

தி.சாம்பவி (மு/பாண்டியன் குளம் ம.வி), த.குயிந்தா (மு/பாலிநகர் ம.வி), அ.வேணுசா (மு/நட்டாங்கண்டல் அ.த.க.பாடசாலை)

### ஒட்டுசுட்டான் கோட்டம்

*தரம்-1*

கே.அபினேகா (மு/ கருவேலன் கண்டல் அ.த.க.பாடசாலை), பெ.டனுசிகா(மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை), வி.தமிழ்நிலவன் (மு/ஆறுமுகம் தமிழ் வித்தியாலயம் ஒட்டுசுட்டான்)

*தரம்-2*

ப.அபிசா (மு/தண்டுவான் அ.த.க. பாடசாலை),மு.நிரூபிகா(மு/மாங்குளம் ம.வி), பி.திருவரங்கன் (மு/ஒழுமடு தமிழ் வித்தியாலயம்)

*தரம்-3*

பு.சதீஸ்குமர் (மு/ஆறுமுகம் தமிழ் வித்தியாலயம் ஒட்டுசுட்டான்), ந.பிரபாகினி(மு/கருவேலன் கண்டல் அ.த.க.பாடசாலை), ர.டினோஜன்(மு/மாங்குளம் ம.வி)

*தரம்-4*

க.சோபிகா (மு/ஒழுமடு தமிழ் வித்தியாலயம்).சி.தரண்ஜாமு/மாங்குளம் ம.வி), க.வதனி (மு/தண்டுவான் அ.த.க.பாடசாலை)

*தரம்-5*

ஆ.தாரணி (மு/முத்தையன்கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலை), செ.விதுசா(மு/புலுமச்சிநாதகுளம் அ.த.க. பாடசாலை), சி.டனுசியா (மு/ஒழுமடு தமிழ் வித்தியாலயம்)

மேற்படி கோட்ட மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களை வாழ்த்துவதோடு இன்று காலை 9 மணிக்கு மு.மாங்குளம் ம.வி.யில் நடபெறவுள்ள வலய மட்டப் போட்டியில் வெற்றியினைப் பெற்றுக் கொள்ள தங்களை தயார்ப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கின்றார். (12-15)

# நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன் கோயில் நவராத்திரி பூஜைகள் நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இதில் தினமும் பிற்பகல் 2.30 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி இடம்பெறுகின்றன.

அத்தோடு விஜயதசமியான ஒக் டோபர் மாதம் 6 ஆம் திகதி வியாழக்கிழமை அம்மன் வீதியுலாவந்து வட்டுக்கோட்டை மத்திய கல்லூரிக்கு முன்பாக உள்ள ஞானவைரவர் கோயிலில் கன்னி வாழை வெட்டும் வைபவம் இடம்பெறும். (4-2)

# தப்பியோடியுள்ள அறுபதாயிரம் இராணுவத்தினரை கைதுசெய்ய முடிவு

(கொழும்பு)

சட்டவிரோதமாக சேவையிலிருந்து விலகியுள்ள 60 ஆயிரம் இராணுவத்தினரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மீண்டும் பொதுமன்னிப்புக்கான கால அவகாசம் வழங்குவது குறித்து இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் நிஹால் ஹப்பு ஆராச்சி தெரிவித்துள்ளார்.

இந்த இராணுவத்தினரைக் கைது செய்த பின்னர் சட்டப்படி இராணுவ சேவையிலிருந்து அவர்களை விலக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த நவம்பர் மாதம் முதல் இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வரை சட்டவிரோதமாக சேவையிலிருந்து விலகிச் சென்ற 11 ஆயிரம் இராணுவ வீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணு ஊடகப் பேச்சாளர் சுட்டிக்காட்டினார். (4-2)

## பிலிப்பைன்ஸ் சூறாவளியில் 31 பேர் மரணமாகியுள்ளனர்

பிலிப்பைன்ஸ் நாட்டில் நெசட் சூறாவளி தாக்கியதில் பலியானோர் எண்ணிக்கை 31 ஆக உயர்ந்துள்ளது.

கடந்த ஒரு மாதமாகவே பிலிப்பைன்ஸில் கனமழை பெய்து வருகிறது.

இந்நிலையில் நாட்டின் வடக்கு பகுதியில் நெசட் சூறாவளி செவ்வாயன்று தாக்கியது.

இந்த புயல் நேற்று முன்தினம் சீனாவை நோக்கி நகர்ந்தது. இதையடுத்து கடும் சூறாவளி காற்று வீசியதுடன் கனமழை கொட்டித் தீர்த்தது.

இதனால் தலைநகர் மணிலா வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றது. சூறாவளியால் ரூபா 110 கோடி இழப்பு ஏற்பட்டிருக்கலாம் என மதிப்பிடப்பட்டுள்ளது. (4-2)

# பழங்குடியினர் பகுதிகளில் தாக்குதல் நடத்தினால் அதற்குப் பழிவாங்குவோம்

## அமெரிக்காவுக்கு பாகிஸ்தான் எச்சரிக்கை

அமெரிக்கா, பாகிஸ்தான் இடையேயான சிக்கலை மேலும் அதிகப்படுத்தும் விதத்தில் ஐ.எஸ்.ஐ. தலைவர் அகமது சுஜா பாஷா, சி.ஐ.ஏ.தலைவர் டேவிட் பீட்ரசிடம் மிரட்டல் விடுத்த தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

இந்நிலையில் ஹக்கானி குழுவை வெளிநாட்டில் இயங்கும் பயங்கரவாதக்குழு என அறிவிக்கும் முயற்சியில் அமெரிக்கா தீவிரமாக இறங்கியுள்ளது. அமெரிக்கா, பாகிஸ்தான் இடையேயான சிக்கல் மேலும் தீவிரம் அடையாமல் இருக்க இரு தரப்பிலும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதர் கமரூன் முன்டர் நேற்று முன்தினம் மீண்டும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலர் சல்மான் பஷீரையும் ஜனாதிபதி ஆசிப் அல் சர்தாரியையும் சந்தித்தார்.

பதற்றத்தை தணிக்கும் முயற்சிகள் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க பதற்றத்தை அதிகரிக்கும் முயற்சிகளும் மறுபுறம் அரங்கேறி வருகின்றன. இரு தரப்பிலும் மீண்டும் பரஸ்பரம் குற்றச்சாட்டுக்கள் அள்ளி வீசப்பட்டு வருகின்றன.

இதன் மையமாக சமீபத்தில் வோஷிங்டனுக்குச் சென்ற ஐ.எஸ்.ஐ.தலைவர் அகமது சுஜா பாஷா பாகிஸ்தான் பழங்குடியினப் பகுதிகளில் இனி ஒருமுறை அமெரிக்கா தன்னிச்சையாக தாக்குதல் நடத்துமானால் அதற்குப் பழிவாங்கும் சூழலுக்கு பாகிஸ்தான் தள்ளப்படும் என சி.ஐ.ஏ.தலைவர் டேவிட் பிடரசிடம் நேரில் எச்சரித்துள்ளதாக ஐ.எஸ்.ஐ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி நடந்த பாகிஸ்தான் பாராளுமன்ற நிலைக்குழுக் கூட்டத்தில் பாகிஸ்தான் பழங்குடியினப் பகுதிகளில் பதுங்கியுள்ள ஹக்கானி குழு மீது அமெரிக்கா தன்னிச்சையாக தாக்குதல் நடத்தினால் பொறுத்துக் கொள்ள முடியாது என எம்.பி.க்கள் தெரிவித்துள்ளனர்.

அப்படி அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் அதற்குப் பதிலடி கொடுக்கவும் பாகிஸ்தான் தயாராக இருப்பதாக நிலைக்குழுத் தலைவர் ஜாவேத் அஷ்ரப் காஜி தெரிவித்தார்.

பெஷாவர் உயர் நீதிமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடந்த கூட்டம் ஒன்றில் பேசிய பாகிஸ்தான் பிரதமர் கிலானி,

ஒற்றுமை, பாதுகாப்பு, இறையாண்மை மிக்க பாகிஸ்தான் என்ற நோக்கத்தின் கீழ் நாம் ஒன்றிணைந்து நிற்க வேண்டும். அதன் மூலம் தான் நாடு தற்போதைய சிக்கல்களை சமாளிக்க முடியும் என்றார்.

பாகிஸ்தான் தனது நிலையில் பிடிவாதத்துடன் இருப்பதை போலவே அமெரிக்காவும் தனது நிலையை விட்டுக் கொடுப்பதாக தெரியவில்லை. அமெரிக்க இராணுவ தளபதி மைக்முல்லன் ஐ.எஸ்.ஐ.மற்றும் ஹக்கானி குழு இடையிலான தொடர்பு பற்றி குற்றம் சாட்டிய 22 ஆம் திகதி மாலை அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் டெக்சாஸ் மாகாண ஜனநாயக கட்சி உறுப்பினர் டெட் போ, பாகிஸ்தானுக்கான அமெரிக்க நிதி முழுவதையும் தடை செய்யும் வகையிலான மசோதாவை தாக்கல் செய்ததாக தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

சபையில் பேசிய டெட்போ,

நாம் வழங்கும் நிதியை பாகிஸ்தான் நமக்கு எதிராக போர் தொடுக்கும் பயங்கரவாதிகளுக்கு அள்ளி விடுகிறது. நாம் தொடர்ந்து நமது எதிரிக்கு நிதி வழங்குகின்றோம்.

நம்மை வெறுக்கவும் நமக்கு குண்டு வைக்கவும் நாம் அந்நாட்டிற்கு நிதி வழங்கி வருகின்றோம் என்று காட்டமாகத் தெரிவித்தார். (4-2)

## விமான கோரவிபத்தில் 18 பேர் உயிரிழந்தனர்

### இந்தோனேசியாவில் சம்பவம்

இந்தோனேசியா நாட்டின் மேற்கு பகுதியில் நேற்று அதிகாலை சிறிய விமானம் ஒன்று சென்று கொண்டிருந்தது. அந்த விமானத்தில் 3 ஊழியர்கள், 15 பயணிகள் என 18 பேர் இருந்தனர். சுமத்திரா தீவில் அந்த சிறிய விமானம் தரை இறங்க வேண்டும். நடுவானில் அந்த விமானத்தில் திடீரென எந்திரக்கோளாறு ஏற்பட்டது.

சிறிது நேரத்தில் அந்த விமானம் பகோராக் என்ற கிராமத்தில் தரையில் விழுந்தது. வேகமாக வந்து தரையில் மோதியதால் விமானம் பல துண்டுகளாக நொறுங்கி சிதறியது.

இந்த விமான விபத்தில் சிறிய விமானத்தில் இருந்த 18 பேரும் உயிரிழந்தனர். சிலரது உடல் அடையாளம் காண முடியாதபடி சிதைந்து விட்டது. விமான விபத்து குறித்து பகோரக் கிராம மக்கள் தகவல் கொடுத்த பின்னர் அதிகாரிகளுக்கு தெரியவந்தது. இதனால் மீட்பு பணிகள் மிகவும் தாமதமாகவும் தொடங்கின.

இந்தோனேசியாவில் நேற்று முன்தினம் ஏற்பட்ட ஒரு படகு விபத்தில் 20 ற்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். அந்த சோகம் நீங்குவதற்குள் சிறு விமான விபத்தில் 18 பேர் பலியான சோகம் நிகழ்ந்துள்ளது. (4-2)

## விண்ணைத்தாக்கும் ஏவுகணை பரிசோதனை

சீனா தரையில் இருந்து விண்ணில் உள்ள இலக்கைத் தாக்கும் புதிய ஏவுகணை ஒன்றை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி பரிசோதித்துள்ளது. சீனாவின் ஷென்யாங் இராணுவ மண்டலத்தில் உள்ள பாதுகாப்பு பிரிவில் இருந்து ஹேறங்கி 16 அல்லது ரொட்ப்ளாக் 16 என்ற ஏவுகணை விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.

இந்த ஏவுகணை தரையில் இருந்து விண்ணில் உள்ள இலக்கைத் தாக்கும். அத்தோடு விண்ணில் மிக அதிக உயரத்தில் உள்ள மற்றும் மிகக் குறைவான உயரத்தில் உள்ள இலக்குகளையும் தாக்கும் திறன் படைத்தது.

சமீபத்தில் தான் இதே ரக ஏவுகணைகள் இரண்டை சீனா வெற்றிகரமாக பரிசோதித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (4-2)




## தேர்தலின் மூலம் ஜனாதிபதி தெரிவு இடம்பெறவேண்டும்

### எகிப்து மக்கள் ஆதங்கம்

எகிப்தில் மக்கள் புரட்சியின் மூலம் கடந்த பெப்ரவரி மாதம் ஜனாதிபதி முபாரக்கின் ஆட்சி முடிவுக்கு வந்தது. தற்போது அங்கு இராணுவ ஆட்சி நடைபெற்று வருகின்றது.

போராட்டத்தின் போது புதிய ஜனாதிபதி தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என மக்கள் தெரிவித்தனர். அதை தற்போது ஆளும் இராணுவ ஆட்சி ஒப்புக் கொண்டது.

இன்று ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் திகதி அறிவிக்கப்படும் என தெரிவித்து இருந்தது.

அதன்படி ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் 28 ஆம் திகதி நடைபெறும் என ஆட்சி அதிகாரம் பெற்றுள்ள சுப்ரீம் கவுன்சில் நேற்று முன்தினம் அறிவித்தது. தேர்தல் முடிவு அடுத்தாண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வெளியிடப்படவுள்ளது. இதை உலக நாடுகள் வரவேற்றுள்ளன. (4-2)

## உலக பொருளாதாரம் 2012 இல் மீள்ச்சியடையும்

### கே.ஓ.எப். பொருளாதார ஸ்தாபன அறிக்கையில் தகவல்

முதன்மையான கருத்துக்கணிப்புகளுக்கு அமைய 2012 ஆம் ஆண்டு பாதியில் உலக பொருளாதாரத்தில் பெரிய நீடித்த மீட்பு அடையும் என கருதப்படுகின்றது. சுவிசின் பொருளாதார தொழில் துறையினர் மற்றும் நுகர்வோர் தாம் நிதி சந்தையின் நிலையினை பாதுகாப்பானதா என்பதனை குளிர் கால பொருளாதார சந்தையின் போது அறிந்து கொள்ள வேண்டும்.

கே.ஓ.எப்.பொருளாதார ஸ்தாபன அறிக்கையின் படி கோடை கால பொருளாதாரமானது கடந்த ஆண்டு ஆனி மாதத்துடன் ஒப்பிடுகையில் 2.3 சதவீதம் முதல் 2.8 சதவீதம் ஆக குறைந்துள்ளதாக குறிப்பிடுகின்றது.

ஆயினும் ஐரோப்பியா மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் தேசிய கடன்குறைப்பு திட்டங்கள் முன்னின்று காப்பாற்றுகின்ற போதிலும் பிராங்கின் பெறுமதியானது அமெரிக்க டொலர் மட்டும் யூரோவை விட அதிகரித்துள்ளமை குழப்ப நிலையினை தோற்றுவித்துள்ளது என்பதை குறிப்பிடுகின்றது.

சுவிஸ் தேசிய வங்கியானது இந்த மாத ஆரம்பத்தில் பிராங்கின் பெறுமதியினை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தது. ஆயினும் இதன் காரணமாக ஏற்றுமதியாளர்கள் மற்றும் சுற்றுலாத்துறையினால் பெரும் பாதிப்பு குறைக்கப்பட்டது.

சுவிஸ் பொருளாதாரமானது இன்னும் கொந்தளிப்பான ஒரு நிலையில் உள்ளது. இதிலிருந்து எழ வேண்டுமாயின் ஏற்றுமதி அதிகரிக்கப்பட்டு உள்நாட்டில் வேலையின்மை குறைக்கப்பட வேண்டும். மேலும் உள்நாட்டு நுகர்வு அதிகரிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்படுகின்றது. (4-2)

## பிரிட்டனில் சட்டவிரோதமாக தங்கியிருந்த 27 பேர் கைதாகினர்

(லண்டன்)

பிரிட்டனில் சட்டவிரோதமாக தங்கி பணியாற்றி வந்த 27 இந்தியர்களை அந்நாட்டு குடியேற்ற அதிகாரிகள் கைது செய்துள்ளனர். பிரிட்டன் தலைநகர் லண்டனின் மேற்குப் பகுதியில் உள்ள ஏஷியன் சூப்பர் மார்க்கெட் மான்செஸ்டரில் கட்டுமானம் நடந்து கொண்டிருந்த ஓர் இடம் ஆகியவற்றில் கடந்த இருவாரங்களில் பிரிட்டன் குடியேற்ற அதிகாரிகள் நடத்திய சோதனையில் சட்டவிரோதமாக பிரிட்டனில் தங்கி பணியாற்றி வந்த 27 இந்தியர்களைக் கைது செய்தனர்.

இது குறித்து குடியேற்றத்துறை செய்தித் தொடர்பாளர் கூறுகையில், பிரிட்டனில் வேலை வழங்குவோர் தங்கள் பணியாளர்கள் அனைவரும் சட்டபூர்வமாக பிரிட்டனில் தங்கியிருக்க உரிமை பெற்றுள்ளனரா என்பதை சோதிக்க வேண்டும். கைது செய்யப்பட்டவர்கள் அவர்களின் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவர் என்றார். சூப்பர் மார்க்கெட் மற்றும் கட்டுமான நிறுவனம் இரண்டும் தங்களிடம் இருந்து கைது செய்யப்பட்ட நபர்கள் சட்டப்பூர்வமாக குடியேறியவர்கள் என்பதை நிரூபிக்கத் தவறினால் ஒரு நபருக்குத் தலா 7 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அபராதமும் கட்ட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (4-2)

பாலங்களைக்கட்டுவதற்குப்பதில்சுவர்களை அமைத்து விடுவதால் பல மனிதர்கள் தனித்து விடப்படுகிறார்கள். ~ஓர் அறிஞர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்ப்பாணத்தில் நடந்த யம தர்மசபை

கண்ட கனவை எழுதாமல் இருக்க முடியவில்லை. என்ன செய்வது! கனவு, பொதுப் பிரச்சினையோடு மக்கள் பிரச்சினையோடு தொடர்புபட்டதாக இருப்பதால் கனவை மறைப்பது அவ்வளவு நல்லதல்ல என்பது நம் முடிபு.

நேற்றைய தினம் ஒரு கனவு. தர்மசபை போல இருக்க வேண்டும். சித்திரகுப்தன் உள்ளிட்ட பரிவாரங்கள் அந்த சபையில் இடம்பெற்றிருந்தன.

சித்திரகுப்தன் பிரம்மசூடிப் புத்தகத்தை வாசித்துக் கொண்டு இருக்கின்றார்.

இதோ! யமதர்மராஜன் வருகிறார். பராக்... பராக் என்று வாயில் காப்போன் கூவ, சபையில் இருந்தவர்கள் எழுந்து நிற்கின்றனர்.

யமதர்மராஜன் சிம்மாசனத்தில் அமர்ந்து கொள்ள சபையோரும் உட்கார்ந்து கொண்டனர். சபை அமர்வு ஆரம்பமாகின்றது.

யமதர்மராஜன்: சித்திரகுப்தா! இன்று எதற்காக யாழ்ப்பாணத்தில் எங்கள் தர்மசபையை கூட்டியிருக்கிறோம்?

சித்திரகுப்தன்: சுவாமி யாழ்ப்பாணத்தில் உள்ள பழைய பூங்காவின் சுற்றுமதில்உடைக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகவிசாரணை நடத்துவதற்காக.

யம: அப்படியா? விசாரணைக்கு யார் யார் வந்துள்ளனர்?

சேவகன்: ஆளுநர், அரச அதிபர், மாநகர முதல்வர், பொதுமக்கள் ஆகியோர் இந்த சபைக்கு வந்துள்ளனர்.

யம: சித்திரகுப்தா,யாரை இங்கு விசாரிக்க வேண்டும்?

சித்திர: ஆளுநர், மாநகர முதல்வர், அரசஅதிபர், பொதுமக்கள் ஆகியோரைவிசாரிக்க வேண்டும்.

யம: யார் அங்கே...

சேவகன்: ஆளுநர்...ஆளுநர்...ஆளுநர்.

யம: பழைய பூங்காவின் மதிலை உடைக்க உத்தரவிட்டது யார்?

ஆளுநர்: சுவாமி நான் உத்தரவிடவில்லை.

யம: அடுத்தது ...

சேவகன்:முதல்வர்...முதல்வர்...முதல்வர்.

யம: மதிலை உடைக்க உத்தரவிட்டது யார்?

முதல்வர்:சுவாமி நான்தான் உத்தரவிட்டேன்.

யம:எதற்காக?

முதல்வர்: மதிலைப் புதிதாக அழகுபடுத்திக் கட்டுவதற்கு.

யம: இடித்த மதிலில் பழமை என்ற அழகு தெரியவில்லையா? மதிலை இடிப்பதற்கு முன் மக்களைக் கூட்டி அபிப்பிராயம் கேட்கப்பட்டதா?

முதல்வர் (மௌனம்)

சேவகன்: அரசஅதிபர்...அரசஅதிபர்...

யம : மதில் உடைக்கப்படுவதை ஏன் தடுக்கவில்லை.

அரச அதிபர்:எனக்குத் தெரியாது...எனக்குத் தெரியாது.

யம: நீங்கள் இப்போது என்ன பணி செய்து கொண்டு இருக்கிறீர்கள்?

அரச அதிபர்: திருமணமாகாத இளம் பெண்கள் கர்ப்பம் அடைகிறார்கள். பெண்கள் மீதான வன்முறை அதிகரித்துள்ளது. இது பெரிய தொந்தரவு. இது பற்றித்தான் இப்போது என் முழுக்கவனமும். இந்த நேரத்தில், இருந்த மதிலை உடைத்து விட்டார்கள். எனக்கு எதுவும் தெரியாது.

யம: சித்திரகுப்தா! தமிழ் அரசியல்வாதிகள் எவரும் வரவில்லையா?

சித்திர: இல்லை சுவாமி

யம: ஏன்?அவர்களுக்கு கட்டளை அனுப்பவில்லை.

சித்திர: அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று எங்களுக்கு தெரியாது. விலாசத்தை அறிய முடியவில்லை.

யம : இதென்ன அதிசயம்!அவர்கள் எப்போது இங்கு வருவார்கள்?

சித்திர: தேர்தல் வந்தால் வருவார்களாம்.

யம : ஓ! அப்படியா சங்கதி. தேர்தல் வரும் வரை இந்த வழக்கை ஒத்திவைப்போம். தேர்தல் காலத்தில் பொதுமக்களை விசாரிக்கலாம் என்று கூற, யமனை ஏற்றுவதற்காக காத்திருந்த எருமைக் கடாவின் சத்தம் காதைப் பிளக்க திடுக்குற்று எழுந்தேன்.

கண்டது கனவு என்று அறிந்தேன்.

# ஐ.நாவின் மீளாய்வுச் செயற்பாடு இலங்கைக்கு பிரச்சினையை ஏற்படுத்தும்

## இந்திய ஊடகம் சுட்டிக்காட்டு

இலங்கையில் நடந்து முடிந்த போரின் போது ஐ.நாவின் மனிதாபிமான மற்றும் பாதுகாப்புத் தொடர்பான கடப்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்ட விதம் தொடர்பாக மீளாய்வு செய்ய ஐ.நா.பொதுச் செயலர் உத்தரவிட்டுள்ளார். இலங்கைக்கு மேலும் பல பிரச்சினைகள் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்படுவதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த மீளாய்வை மேற்கொள்ள சவுதி அரேபிய நாட்டவரான ஐ.நாவின் முன்னாள் சனத்தொகை நிதியப் பணிப்பாளர் தொராயா ஒபெய்ட்டை ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூன் நியமித்துள்ளார்.

இவர் அடுத்த மாதம் ஆரம்பித்து நான்கு மாதங்களுக்குள் தனது பணியை நிறைவு செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ.நா.அதிகாரிகள், அதன் களப் பணியாளர்கள் மற்றும் இலங்கையிலுள்ள நிபுணர்களின் கருத்துகளையும் இவர் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

போரின்போது பொதுமக்களைப் பாதுகாக்க ஐ.நாவும் அதன் அமைப்புகளும் தவறிவிட்டதாக ஐ.நா.நிபுணர் குழு தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தது.

அத்துடன் போரின்போதான ஐ.நாவின் செயற்பாடுகளை மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் ஐ.நா. நிபுணர் குழு பரிந்துரை செய்திருந்தது.

இந்நிலையிலேயே பான் கீ மூன் ஐ.நாவின் செயற்பாடுகளை மீளாய்வு செய்வதற்காக தொராயா ஒபெய்ட்டை நியமித்துள்ளதாகவும் இது இலங்கைக்கு மேலும் பல சிக்கல்களை ஏற்படுத்தலாம் என்றும் இந்திய ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது. (எ-5)

# சவேந்திர சில்வாவுக்கு எதிரான வழக்கு அமெரிக்கா கருத்து வெளியிட மறுப்பு

(வாஷிங்டன்)

நியூயோர்க்கின் தெற்கு மாவட்ட நீதிமன்றில் ஐ.நாவிற்கான இலங்கையின் பிரதி நிரந்தர வதிவிடப் பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள வழக்குத் தொடர்பாக கருத்து வெளியிட அமெரிக்கா மறுத்துள்ளது.

வாஷிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற நாளாந்த செய்தியாளர் சந்திப்பில் இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் விக்டோரியா நுலண்ட் அம்மையாரிடம் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்குத் தொடர்பாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பியிருந்தனர்.

அதற்கு அவர், இது நியூயோர்க் நீதிமன்றத்திலுள்ள சட்ட விவகாரம் என்றும் அதுபற்றி மேலதிகமாகத் தன்னால் கருத்து வெளியிட முடியாதென்றும் பதிலளித்துள்ளார்.

இதனிடையே ஐ.நாவுக்கான பிரதிநிதி என்ற வகையில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனுக்கு இருப்பதாக அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (ச-5)

# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## சரஸ்வதி பூஜையும் புதன் கிரகமும்

சரஸ்வதி பூஜை குறிப்பிட்ட சில ஆண்டுகள் தவிர ஏனைய ஆண்டுகளில் புரட்டாதி மாதத்தில் வரும். சரஸ்வதி பிறந்த திதி நவமி. திதியின் அடிப்படையில் சில சமயங்களில் ஐப்பசியில் வரும்.

பெரும்பாலும் புரட்டாதியில் இந்த பூஜை நடத்தப்பட்டுவதற்குக் காரணம் உண்டு. நவக் கிரகங்களுக்கு நடுநாயகமான சூரியன் சித்திரையில் மேட இராசியில் ஆரம்பித்து, புரட்டாதியில் கன்னியில் சஞ்சாரம் செய்கிறார். கன்னி இராசிக்குரிய கிரகம் புதன். இவரை வித்தியாகாரகன் என்பர். வித்தியாகாரன் என்றால் கல்வி, புத்தி, தொழில் ஆகிய அனைத்திற்கும் மூல காரணமாக இருப்பவர் எனப் பொருளாகும். புதனுக்குரிய இராசியான கன்னியில் கல்விக்கு அதிபதியான சரஸ்வதி தேவியை வழிபடுவது உத்தமமாகும்.

# வெள்ளி நற்சிந்தனை

39

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

துன்பங்களைக் கண்டு பொறுக்க முடியாமல் தமது வாழ்க்கையை முடித்துக் கொள்பவரும் உளர். அவர்கள் உயிரை மாய்ப்பதற்குப் பலவழிகளைக் கையாளுவர். தன்னுயிரைத் தானே போக்குதல் தற்கொலை எனப்படுகிறது.

நம்பியிருந்தது நமக்குக் கிடையாவிட்டால் உயிரை மாய்ந்து உடம்பை அழிக்க வேண்டும் என்ற வக்கிரமான எண்ணம் தோன்றுகிறது. மணிவாசகரும் தன்னுயிரைப் போக்க வேண்டும் என்ற ஒரு நிலையை அடைந்ததைப் பாடலிலே பதிவு செய்துள்ளார். இறைவனுடைய அன்பை மீட்டும் பார்க்கிறார்.

உயிர்களுக்கு உதவும் அருட் செயல்களைச் செய்வதில் இறைவன் ஓய்வில்லாதவன். ஒன்றோடும் ஒப்பிட்டுக் கூறமுடியாத சிறப்புடையவன், உண்மையான அறிவும் பேரொளியும் பெருநன்மையுமுடைய தாமரை மலர் போன்ற திருவடிகளால் எனக்குத் திருவடி தீட்சை தந்தவன். நாயைக் காட்டிலும் கடையேனாகிய என்னை வீடுபேறு பெறுவதற்குரிய நல்ல நெறியாகிய அன்பு நெறியிலே செலுத்தியவன். தாயைக் காட்டிலும் மேலான பரிவுடன் எனக்கு அருள் செய்தவன். அத்தகைய இறைவனை நெடும் பொழுதாகக் காணவில்லை. ஆனாலும் நான் இன்னமும் தீயில் வீழ்ந்து இறக்கமுடியாதவனாக இருக்கிறேன். பெரியமலை உச்சியிலிருந்து வீழ்ந்து இறக்கவும் விரும்பாதவனாகவுள்ளேன். பெரிய கடலிலே பாய்ந்து உயிரை விடவும் மாட்டாதவனாக இருக்கிறேன்.

மணிவாசகர் இறைவனைத் தாயாகக் கண்ட அருளாளன். அவர் பாடிய சிவபுராணத்திலும் இறைவனைத் தாயிற்சிறந்த தயாவான தத்துவனே என்று பாடியுள்ளார். பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து என இறைவன் அருளைத் தாயைவிட உயர்த்தியும் பாடியுள்ளார். தாய், நாய் என்ற இரு சொற்களும் அவருடைய பாடல்களில் பயின்று வரும். கீர்த்தித் திருவகலில்,

நாயினேன் நலமலி தில்லையுட்
கோல மார் தரு பொதுவினில் வருகென
ஏல வென்னை யீங் கொழிந்தருளி...

என இறைவன் நாயாகிய தன்னை ஆட் கொண்டதையும் பின்னர் அடியவர்களோடு உடன்மறைந்ததையும் பாடியுள்ளார். அதனால் தன்னை இறைவன் ஆட்கொண்டபின் மறைந்ததை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால் உயிரைப் போக்காமல் இருப்பதும் அவருக்குக் சங்கடமாகவுள்ளது. மணிவாசகருடைய பக்திநிலையை, இம் முயற்சிகளை அவர் வரிசைப்படுத்திக் கூறுவதிலிருந்து நன்கு அறிய முடிகிறது. முதலில் தீயில் வீழ்தலைக் குறிப்பிடுகிறார். அடுத்து மலையிலிருந்து உருள்வதைக் கூறுகிறார். அடுத்து கடலிற் பாய்வதைக் குறிப்பிடுகிறார். தீ,மண், நீர் என்ற பூதங்களோடு சேரமுயலும் நிலையை உணர்த்துகிறார். அருட்செயல்களால் இறைவனை உணர முடிந்

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

தால் அதுவே பக்தியின் வெளிப்பாடாகும். துன்பமிகுதியால் உயிர் விட நினைப்பது மனிதருடைய உணர்வு நிலை மட்டுமன்றி விலங்குகளின் உணர்வும் கூட எனலாம். சங்ககாலப்பாடல் ஒன்றில் மந்திக்குரங்கு ஒன்று கடுவனையிழந்த துன்பத்தைச் சகிக்கமாட்டாது மலையிலிருந்து பாய்ந்து இறந்த செய்தி ஒன்று இதற்குச் சான்றாகவுள்ளது.

ஓய்விலாதன வுவமனிறந்தன
ஒண் மலர்த்தாள் தந்து
நாயிலாகிய குலத்தி னுங்கடை
ப்படும் என்னை நன்னெறி காட்டித்
தாயிலாகிய இன்னருள் புரிந்த
என் தலைவனை நனிகாணேன்
தீயில் வீழ்கிலேன் திண்வரை யுருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே.

# இலங்கையின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் கனடாவில் திரையிடப்பட்டது ஆவணப்படம்

**இலங்கைத் தூதரகம் மற்றும் இலங்கையின் ஆதரவு அமைப்புக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் கனேடிய பாராளுமன்றத்தில் சனல் 4 இன் இலங்கையின் கொலைக்களம் விவரணத் திரைப்படம் நேற்று முன்தினம் இரவு காண்பிக்கப்பட்டது.**



விசாரணைக் குழுக்கள் பலவற்றை இதுவரை அமைத்துள்ளதென்றும் ஆனால், அந்தக் குழுக்களில் ஒன்றுகூட முழுமையாக விசாரணைகளைமேற்கொண்டதான வரலாறு இல்லையென்றும் எனவே, இந்த யுத்தக் குற்ற மீறல்கள் குறித்து நியாயமான சர்வதேச விசாரணை தேவையென்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கன்சவேட்டிவ் கட்சியின் சார்பில் இந்த நிகழ்வை பாராளுமன்றத்தில் நடத்துவதற்கு முன்னின்று செயற்பட்ட பற்றிக் பிரவுண் உரையாற்றுகையில், தான் இந்த நிகழ்வை நடத்தினால் தன்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற அளவிற்கு மிரட்டல் விடுவிக்கப்பட்ட போதும் தான் அதனைக் கருத்திலெடுக்காமல் இந்த நிகழ்வை நடத்தியதாகத் தெரிவித்தார்.

இதனையடுத்துப் பேசிய லிபரல் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன் மக்கே இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் பற்றிய உண்மைகளை தான் தற்போது உணர்ந்து கொண்டதாகவும் அதற்காகத்தான் தொடர்ந்து உழைக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் பேசிய ராதிகா சிற்சபேசன் பாராளுமன்ற உறுப்பினர்கள் பார்க்கப்போகும் இந்தக் கொலைக் களம் தனது உறவினர்களுக்கு, தனது உற்றாருக்கு, தனது நண்பர்களுக்கு நேரடியாக நடந்த ஒன்று என்றும் இது தன்னை மிகவும் பாதித்த ஒரு விடயம் என்றும் இதற்காக கனடாவின் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (4-2)

மாலை 6 மணிக்கு ஆரம்பமான இந்த நிகழ்ச்சி இரவு 9.05 வரை நீண்டு சென்றது. இந் நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் இலங்கை பற்றிய உண்மை முகத்தை தாங்கள் கண்ணுற்றதாகத் தெரிவித்துச் சென்றனர்.

முதலில் இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்துப் பேசிய மனிதவுரிமை கண்காணிப்பகத்தின் ஆசியாவிற்கான துணை இயக்குநர் திருவாட்டி எலைன் பியர்சன் இலங்கை தொடர்ச்சியாக காலத்திற்குக் காலம் மேற்கொண்டு வரும் படுகொலைகள், மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரிப்பதாக சர்வதேசத்திற்கு காட்டும் வகையில் உள்ளக

## விஞ்ஞான விழாவும் நூல் வெளியீடும்

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியின் விஞ்ஞான விழாவும் சாரதி நூல் வெளியீடும் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் பி.செந்தூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் துணைப் பொறியியலாளர் இராஜரத்தினம் இராஜேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக செல்வி ஞானலோஜினி சிவஞானம், திருமதி வசந்தாதேவி கிருஷ்ணமூர்த்தி, கே.மோகனதாஸ் மற்றும் பொறுப்பாசிரியர்களாக எஸ். சிவராம், என்.கிருபாகரன், ஏ.நித்தியானந்தன், பி.மகாதேவன், செல்வி கலாநமசிவாயம் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இதில் சாரதி நூல் வெளியீட்டினை கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் வெளியிட்டு வைக்கவுள்ளார். அத்தோடு பட்டிமன்றம், பரிசளிப்பு நிகழ்வு என்பனவும் நடைபெறவுள்ளன. (2-12)

# மொறகொடவுக்கு எதிரான குற்றம் தொடர்பில் விவாதிக்க வாருங்கள்

## ஐ.தே.க.எம்.பி.ரங்கே பண்டார அழைப்பு

பொது நிறுவனங்கள் தொடர்பான நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் (கோப்) அறிக்கையில் மிலிந்த மொறகொடவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை பகிரங்க விவாதத்தில் தவறென நிரூபிக்குமாறு ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார சவால் விடுத்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவிக்கு போட்டியிடும் ஐ.தே.க. வேட்பாளர் ஏ.ஜே.எம் முசம்மிலுடன் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு ஐ.ம.சு.கூ. மேயர் வேட்பாளர் மிலிந்த மொறகொடவுக்கு பாலித ரங்கே பண்டார அழைப்பு விடுத்துள்ளார்.

இவ்விவாதத்தில் மேற்படி குற்றச்சாட்டுக்களை தவறென நிரூபிக்குமாறு மிலிந்த மொறகொடவுக்கு பாலித ரங்கே பண்டார சவால் விடுத்துள்ளார்.

இதேவேளை, எந்த தொலைக்காட்சி அலைவரிசை மூலமான பகிரங்க விவாதத்திற்கும் மொறகொட தயார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன. (4-2)

## நிர்வாக சபைத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் முத்துமாரி அம்பாள் தேவஸ்தான நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்வதற்கான சபை பொதுக்கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் இக்கிராம மக்கள், நிர்வாக சபையில் அங்கத்தவர்களாக இணைய விரும்புவோர் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆலய நிர்வாக சபைத் தலைவர் கேட்டுள்ளார். (4-12)

## நீதிமன்றத்தால் அபராதம்

(யாழ்ப்பாணம்)

மதுபோதையிலும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் வாகனப்பதிவு இன்றியும் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்களின் பேரில் நபரொருவர் கோப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு மதுபோதையில் வாகனம் செலுத்தியதற்கு 3 ஆயிரத்து 500 ரூபாவும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியதற்கு 2 ஆயிரம் ரூபாவும் வாகனப்பதிவு இன்றி செலுத்தியதற்கு ஆயிரம் ரூபாவும் அபூராதமும் விதித்ததுடன் செலுத்தத்தவறின் மூன்று குற்றத்திற்கும் மூன்று மாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

⇦ ⇦ ⇦ ⇦ ⇦ ⇦

(யாழ்ப்பாணம்)

கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக்கொண்டு வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் இருவர் கோப்பாய் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளிகளாகக் கண்டு இருவருக்கும் தலா 4 ஆயிரம் ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

⇦ ⇦ ⇦ ⇦ ⇦ ⇦

(யாழ்ப்பாணம்)

விலைப்பட்டியலை வெளிக்காட்டி விற்பனை செய்யாத குற்றச்சாட்டில் 6 நபர்கள் யாழ்ப்பாண பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரித்த யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் 6 நபர்களுக்கும் தலா ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் தலா ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

⇦ ⇦ ⇦ ⇦ ⇦ ⇦

(கிளிநொச்சி)

மதுபோதையிலும் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் மோட்டார் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் நபரொருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக்கொண்டமையால் குற்றவாளியெனக்கண்டு 7 ஆயிரத்து 500 ரூபா அபராதமும் செலுத்தத்தவறின் ஒருமாத சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (4-3)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

## VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA

**INVITATION EXPRESSIONS OF INTERESTB FOR DESIGN AND CONSTRUCTION SUPERVISION CONSULTANCY SERVICES FOR THE PROPOSED WHOLESALE MARKET AT MARUTHANARMADAM FOR VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA**

1. Chairman, Valikamam south Pradeshiya sabha invites Expressions of Interest (EOI) from National Consulting Firms having prior experience of similar nature.

EoIs should be sent to the address indicated below **on or before 18th October 2011 at 15.00Hrs.**

2. The firm(s) must include in the EOI proposal, (i) summary details of the similar projects carried out by the firm; (ii) one page summary of each project executed in the past three years showing nature and magnitude of projects, extent of responsibility and name of employer, etc; (iii) details of technical personnel available with the firm, especially to be given separately for the design and construction supervision services; (iv) any other relevant information.

3. Chairman, Valikamam South pradeshiya sabha reserves the right to shortlist or not to shortlist any or all of the applicant(s) or to cancel the entire process without assigning any reason. No liability will be accepted in such a case.

The EOL should be addressed to : Chairman,
Valikamam south Pradeshiya sabha,
Chunnakam.

**Mr.T.Piragash**
**Chairman,**
**Valikamam south Pradeshiya sabha,**
**Chunnakam.**

(C-4591)

# கனவு இல்லத்தில் குடியமர்ந்தார் சச்சின்



மும்பையில் தனது சொந்த வீட்டில் குடியேறினார் சச்சின் டெண்டுல்கர்.5 மாடிகள் கொண்ட இந்த சொகுசு மாளிகையில் விநாயகர் கோயில், நீச்சல் குளம், மினி -தியேட்டர் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர். இவர் விளையாட்டு வீரர்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட வீட்டில் குடியிருந்து வந்தார்.

கடந்த 2007-ல் ரூபாய் 39 கோடிக்கு மும்பை புறநகர்ப்பகுதியான பந்த்ராவில் உள்ள பெர்ரி கிராஸ் வீதியில் பழைய மாளிகை ஒன்றை வாங்கினார். 6 ஆயிரம் சதுர அடி பரப்பளவைக் கொண்ட இந்த விசாலமான இடத்தில் ரூபாய் 50 கோடி செலவில் புதிய வீடு கட்டினார். பணிகள் அனைத்தும் முடிந்த நிலையில் நேற்று முன்தினம் முறைப்படி குடியேறினார். இதுகுறித்து சச்சின் கூறுகையில்,

சொந்த வீடு கட்ட வேண்டும் என்பது ஒவ்வொருவரின் கனவாக இருக்கும். இந்தக் கனவு எனக்கும் இருந்தது. இதனை நனவாக்க முடிந்ததில் மிகவும் மகிழ்ச்சி. முன்பு வசித்த வீடானது விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின் மூலம் கிடைத்தது. தற்போது அதிலிருந்து வெளியேறிவிட்டேன். இதன் மூலம் வேறொரு வீரர் இங்கு தங்க முடியும்.

இங்கிலாந்துத் தொடருக்கு முன் புதுவீட்டுக்கான 'கிரகசாந்தி', 'வாஸ்து பூசை' ஆகியவற்றைக் கடந்த ஜுன் 11-ம் திகதி செய்தோம். இதற்குப் பின் மும்பைக்கு வர இயலவில்லை. தற்போது இங்குதங்கியிருப்பதால் அம்மாவை அழைத்து வந்து வீட்டைக் காண்பித்தேன் என்றார்.

### ஒரே தளத்தில் 41 கார்கள்

✷ சச்சினின் வீடு ஐந்து மாடிகளைக் கொண்டது. முழுவதற்கும் குளிரூட்டி வசதி செய்யப்பட்டுள்ளது. வெளியிலிருந்து பார்த்தால் மூன்று மாடிகள் மட்டும் தெரியும் வகையில் கொம்பவுண்ட் சுவர் மிகவும் உயரமாக அமைக்கப்பட்டுள்ளது. நவீன சி.சி.டி.வி. கமரா பொருத்தப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

✷ அடித்தளத்தில் சச்சினுக்குப் பிடித்த விநாயகர் கோயில் அமைந்துள்ளது. தவிர இவர் பெற்ற ஏராளமான விருதுகளை வைப்பதற்கென்று தனியறையொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் விருந்துபசார அறையும் இத்தளத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

✷ முதற் தளத்தில் வேலையாட்களின் அறைகள் மற்றும் கண்காணிப்பு அறைகள் உள்ளன.

✷ இரண்டாம் தளம் முழுவதும் சச்சின் வாங்கிக் குவித்துள்ள கார்கள் நிறுத்தப்படுவதற்கேற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது. இங்கு இவரது 41 கார்கள் நிறுத்தப்படவுள்ளன.

✷ மீதமுள்ள மூன்று தளங்களில் சச்சின், அவரது மகன் அர்ஜுன் மற்றும் அவரது மகள் சாரா ஆகியோர் தங்கவுள்ளனர். ஐந்தாவது தளத்தில் சச்சின் மற்றும் அவரது மனைவி அஞ்சலிக்குப் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு யு.எப்.ஓ. கிளப் சார்பில் 25 பேர் அமர்ந்து சினிமா பார்க்கும் வகையில் மினிதியேட்டர் அமைக்கப்பட்டுள்ளது.

✷ மொட்டைமாடியில் நீச்சல்தடாகம் உள்ளது.

### சிறுவர்கள் காயம்

நேற்று புதுவீட்டுக்கு வந்த சச்சினைக் காண அந்தப் பகுதியிலிருந்த 5 முதல் 8 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் திரண்டனர். ஏராளமான ஊடகக் குழுவினரும் குவிந்தனர். சச்சின் வந்ததும் ஏற்பட்ட நெரிசலினால் சிறுவர்கள் சிலருக்கு இலேசான காயம் ஏற்பட்டது.

சச்சின் வீட்டின் எதிரே அவரை வரவேற்று பெரிய பதாகை வைக்க முற்பட்டனர். இதற்கு அவாமி நலச் சங்கத்தினர் எதிர்ப்புத் தெரிவிக்கவே சர்ச்சை ஏற்பட்டது. பின் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் விளைவாக பதாகை வைக்கப்பட்டுள்ளது.

# நயினாதீவு...

இதற்கென சுமார் 75 மாணவர்களும் 6 ஆசிரியர்கள் மற்றும் அதிபருமாக தனியார் பேருந்து ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அங்கு சென்றனர்.

பூசை நிகழ்வுகள் முடிந்த பின்பு பிற்பகல் 2 மணியளவில் நயினாதீவிலிருந்து குறிகாட்டுவானால் திரும்பினர்.

இந்நிலையில் அங்கிருந்து வாகனம் புறப்படத் தயரானபோது சில மாணவர்கள் ஏறியுள்ளனர். அதன்போது பிரஸ்தாப மாணவர் கால்தடக்கிக் கீழே விழுந்ததால் வாகனச் சில்லு அவரின் தலையில் ஏறி அவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

இச்சம்பவம் தொடர்பாக நேரில் சென்று விசாரணைகளை மேற்கொண்ட ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

பொலிஸார் சாரதியைக் கைது செய்ததுடன் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். இதேவேளை சம்பவம் தொடர்பில் கேள்வியுற்ற நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா சம்பவ இடத்திற்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்ததுடன் மாணவனின் சடலத்தைப் பொறுப்பேற்று பெற்றோரிடம் கையளித்தார். (ச-5,6)

# பழைய பூங்கா...

அமைவாக முதல்வரின் உத்தரவின்பேரில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

செப்ரெம்பர் 23ஆம் திகதி நடத்தப்பட்ட மீளாய்வுக் கூட்டத்தின் பிரகாரம் பழைய பூங்காவைப் புனரமைத்து மக்களுக்குத் திறந்துவிடும் பணிகளை 28-ம் திகதி காலை 9 மணிக்கு ஆரம்பிக்க வட மாகாண ஆளுநர் அனுமதி வழங்கியுள்ளார் என்று பொது நிர்வாகச் செயலர் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு, மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர், கட்டிடத் திணைக்களப் பிராந்திய ஆணையாளர் அலுவலகப் பணிப்பாளர் ஆகியோர் இந்தப் பணிகளுக்கு உதவிகளை வழங்குவார்கள் என்றும் செயலர் தெரிவித்துள்ளார்.

பழைய பூங்கா தேசிய மரபுரிமைச் சின்னமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அங்கு மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் இலங்கை தொல்பொருள் திணைக்களத்திடம் அனுமதி பெறப்படல் வேண்டும்.

எனினும் பழைய பூங்காவின் சுற்று மதிலை உடைத்தழிப்பதற்கோ, பூங்காவைப் புனரமைத்து அதனைப் பொதுமக்களுக்குத் திறந்துவிடுவதற்கோ எந்தவொரு அனுமதியும் பெறப்படவில்லை.

தற்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து தொல்பொருள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படவும் இல்லையென்று திணைக்கள யாழ்.மாவட்ட அதிகாரி ஏ.பி.ரட்ணநாயக்க தெரிவித்தார். (ச-5)

# யாழ்ப்பாணக் கல்லூரி நடத்தும் மாபெரும் கூடைப்பந்தாட்ட போட்டி

டாக்டர் டபிள்யூ.ஆர்.ஹோம்ஸ் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஐந்தாவது வருடமாக யாழ்ப்பாணக் கல்லூரியினால் நடத்தப்பட்டு வருகின்றது. இச்சுற்றுப் போட்டி யாழ்ப்பாணக் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நேற்றும் இன்றும் நடைபெறுகின்றது.

இச்சுற்றுப்போட்டியில் ஆண்கள் பிரிவில் பரியோவான் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி, பத்திரிசியார் கல்லூரி, கிளிநொச்சிமகாவித்தியாலயம் ஆகிய கல்லூரிகளும்

பெண்கள் பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்.கன்னியர்மட வித்தியாலயம், கொக்குவில் இந்துக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகிய பாடசாலைகளும் பங்குபற்றுகின்றன.

இச்சுற்றுப் போட்டி யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சங்கத்துடனும் இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சங்கத்துடனும் இணைந்து யாழ்ப்பாணக் கல்லூரியினால் நடத்தப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்திலேயே முதன்முதலாக யாழ்ப்பாணக் கல்லூரியில் மிஷனரியாகப் பணியாற்றிய ஹோம்ஸ் கூடைப்பந்தாட்டத்தினை அறிமுகப்படுத்தி, பயிற்றுவித்து, கூடைப்பந்தாட்ட அணியொன்றை ஏற்படுத்தினார். இன்று அவருடைய சேவையைப் பாராட்டி இச்சுற்றுப்போட்டி நடத்தப்படுகின்றது.

இச்சுற்றுப்போட்டியில் தெரிவாகும் 1ஆம், 2ஆம் இடத்தைப் பெறும் ஆண், பெண் அணிகள் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிக்குத் தெரிவாகும் அணிகளாக இச்சுற்றுப் போட்டி அமைகின்றது.

இவர் கூடைப்பந்தாட்டத்திற்கு ஆற்றிய சேவையைத் தொடர்ந்து இன்று யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கூடைப்பந்தாட்டச் சங்கத்தின் தலைவராக இருக்கும் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் இக்கூடைப்பந்தாட்டத்தை வளர்த்தெடுக்கும் நோக்கில் பல சேவைகளைச் செய்து வருகின்றார்.

இக்கோலாகலமான சுற்றுப்போட்டியின் இறுதிநாள் ஆட்டம் நாளை முழுநாள் நிகழ்வாக யாழ்ப்பாணக் கல்லூரி கூடைப்பந்தாட்ட மைதானத்தில் நடைபெறும். விளையாட்டு இரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஏ.சி.பிரான்சிஸ்**
**பிரதி அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி.**

# நாடுகடத்தப்பட்ட ...

அனைவரும் குற்றப் புலனாய்வுப் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிரிட்டனில் உள்ள தமிழர்கள் சிலரை மீண்டும் இலங்கைக்கு அனுப்பிவைக்கும் பட்சத்தில் அவர்கள் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதைக்கு ஆளாக்கப்படும் சாத்தியமுள்ளதால் பிரித்தானியா அரசாங்கம் இத்திட்டத்தை மீளாய்வு செய்ய வேண்டும் என பிரித்தானிய மருத்துவ அறக்கட்டளையகம் நேற்று தெரிவித்திருந்தது.

இந்நிலையில் புகலிடக் கோரிக்கை மறுக்கப்பட்ட 50 பேரை வாடகை விமானம் மூலம் பிரித்தானிய எல்லை முகவரகம் பலவந்தமாகத் திருப்பியனுப்பியுள்ளது.

இலங்கையில் 2009ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிபுக்கு வந்த பின்னரும் இலங்கைக்குத் திருப்பியனுப்பப்பட்ட சிலர் சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டமைக்கு மருத்துவச் சான்றிதழ்கள் உள்ளனவென அறக்கட்டளையகம் குறிப்பிட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என தடுத்து வைக்கப்பட்டவர்கள் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர் அல்லது காணாமற் போயுள்ளனர் என மனிதவுரிமை கண்காணிப்பகத்தின் ஆசிய பணிப்பாளர் பிராட்அடம்ஸ் கூறினார்.

அவுஸ்திரேலியாவிலிருந்து வலுக்கட்டாயமாகத் திருப்பியனுப்பப்பட்டவர்கள் இலங்கைக்கு மீண்டபோது சித்திரவதைகளுக்குட்பட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்தது. இலங்கைக்கு நாடுகடத்தப்பட்டவர்களில் 27 தமிழர்களும் 12 முஸ்லிம்களும் 11 சிங்களவர்களும் உள்ளனர்.

மனிதவுரிமை அமைப்புகளின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பிரித்தானியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட 50 பேரும் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்படுவர் என்று இலங்கை குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-5)

# சர்வதேசப் போருக்கு...

இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை நிறைவேற்ற இத்தகையோர் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்ளபோதிலும் அத்தீர்மானத்தைப் பெரும்பாலான நாடுகளின் ஆதரவுடன் முறியடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து மகாவலி கேந்திர நிலையத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, ஜெனீவாவில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிரான தீர்மானங்களைக் கொண்டுவர சர்வதேச மட்டத்தில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்த அவர் இது குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது,

கனடா மற்றும் மேற்குலக நாடுகள் உட்பட அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேசத்தில் வாழும் விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் எனப் பல்சார் கூட்டணி இலங்கைக்கு எதிரான தீர்மானங்களுக்கு ஆதாரங்களைத் திரட்டி வருகின்றது.

இவர்களின் இலங்கைக்கு எதிரான பிரதான ஆதாரமாக நிபுணர் குழுவின் அறிக்கை கையாளப்பட்டு வருகின்றது. இன்று வெள்ளிக்கிழமை 30-ம் திகதியே இலங்கைக்கு எதிரான எந்தவொரு தீர்மானத்திற்குமான இறுதி நாளாகும். மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் தோல்வியடைந்த எந்தவொரு தீர்மானத்தையும் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவைக்கோ அல்லது பொதுச்சபைக்கோ கொண்டுசெல்ல முடியாது.

இலங்கைக்கு ஆதரவாக ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அங்கம் வகிக்கும் ஏராளமான உறுப்பு நாடுகள் உள்ளன. எனவே குறிப்பிட்ட சிலரின் இத்தகைய செயற்பாடுகள் இலங்கைக்குச் சவாலாக அமையாது. எவ்வாறாயினும் நாட்டிற்கு எதிராக முன்வைக்கப்படும் அனைத்துத் தீர்மானங்களையும் நாம் முறியடிப்போம் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (ச-5)

உல்லாசம் உங்கள் கண்முன்னே...
TILKO JAFFNA CITY HOTEL
TILKO hotels
No.70/6, K.K.S Road, Jaffna.
Tel: 021 2225969
web:www.cityhoteljaffna.com
e-mail: info@cityhoteljaffna.com

மஹாராஜா Food நிறுவனத்தின் மற்றும் ஒரு சேவை
G.T.V.யும் Aramex இணைந்து நடத்தும் உள் நாட்டு கடிதங்கள் பொதி
விநியோகம் செய்தல் கொழும்பு /யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கு ஒப்படைத்த
அடுத்த தினமே முகவரியில் ஒப்படைக்கப்படும்.
MAHARAJA FOOD PRODUCT
கொழும்புக்கான கட்டணம் ரூபா 200/= மட்டுமே
மேலதிக விபரங்களுக்கு:-
கொழும்பு
# 18/3 Dr.E.A coory Mawatha, Wellawathte.
T.P:-0112360926,0112259849
யாழ்ப்பாணம்
aramex
No.225, Kasturiyar Road, Jaffna
T.P.: 021 222 4338
No.272, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 4825

புதியதோர் உலகம் செய்வோம்
DCM 1ம் குறுக்குத் தெரு,யாழ்நகர் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
A/L DAY CLASS
திங்கள் முதல் வெள்ளி வரை 7.30 - 12.00
ஆரம்பம் : 3 - 10 - 11
எந்தவொரு மனிதனும் தவறு செய்யக்கூடும் ஆனால் முட்டாளைத் தவிர வேறு எவரும் அதனைத் தொடர்ந்து செய்யமாட்டார்கள்.
நிர்வாக இயக்குநர் S. வரதராஜன்

பிரத்தியேக கணக்கீடு
திரு.R.வின்சன் [B.B.A Spl]
A/L - 2012 கம்பனிக் க/கு
ஆரம்பம் - 01.10.2011 சனி 7.30 a.m
T.P.:- 077 6947162
(6456)
ஐடியல் - மானிப்பாய்
கிறீன் ஆஸ்பத்திரி பின் வீதி

இடமாற்றம்
இல. 75, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த
நியூ லலிதாஸ் ஜுவல்லறி ஸ்தாபனம்
10.09.2011 தொடக்கம் இல. 111, மின்சார நிலைய வீதியில்
இயங்கி வருகின்றது என்பதை அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.
தொடர்புகளுக்கு : 021 222 4134

# சட்டத்தரணிகள் மேற்கொண்ட...

உத்தியோகத்தர்கள் கைது செய்து பலவந்தமாக அவரை வெளியே இழுத்துச் சென்ற சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்தும் சம்பந்தப் பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கூறியும் கடந்த 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் அனைவரும் கூட்டாக நீதிமன்ற- பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவந்தோம்.

எமது பகிஷ்கரிப்பின் விளைவாக குறித்த சம்பவத்தில் சம்பந்தப்பட்டிருந்த 7 பொலிஸ் உத்தியோகத்தர்களும் பொலிஸ்மா அதிபரின் பணிப்புரையின் பேரில் கடந்த 26ஆம் திகதி தமது பதவி பொறுப்புக்களிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்கள் அனைவரும் கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகள் எமது பகிஷ்கரிப்பு போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என்று நாம் கருதுகின்றோம்.

இந்த நிலையில் எமது பகிஷ் கரிப்பு போராட்டத்தை முடிபுக்கு கொண்டு வர நாம் ஏகமனதாக தீர்மானித்துள்ளோம்.

எனவே இன்று வெள்ளிக்கிழமை சகல சட்டத்தரணிகளும் தமது நீதிமன்றகடமைகளுக்கு திரும்புவார்கள்.

யாழ்ப்பாண நீதவான் நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்களுக்கு எதிராக தொடரப்பட்டுள்ள வழக்கில் சட்டத்தரணிகள் குழு வொன்று இனி வரும் வழக்குத் திகதிகளில் சட்டத்தரணிகள் சமூகத்தின் சார்பில் மன்றில் தோன்றுவதுடன் வழக்கு நடவடிக்கைகள் சரியான திசையில் முன்னெடுக்கப்படுவதற்கு உறுதுணையாக செயற்படும்.

தவிர்க்க முடியாத சூழ்நிலையில் எம்மால் மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற பகிஷ்கரிப்பினால் மன்றங்களுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களு... எமது மனவருத்தத்தை தெரிவித்... கொள்கின்றோம் என்றுள்ளது.(எ...

# மின்சாரம் தாக்கி...

ஏற்பட்டுள்ளதாக பலியானவருடன் பணி புரிந்தசக ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்றுக்காலை 8.55 மணியளவில் சுன்னாகம் மின்சார சபையிலிருந்து சாவகச்சேரி மின்சார சபைக்கு மின்சாரம் துண்டுக்கப்பட்டுவிட்டது. மின் திருத்த வேலைகளை மேற்கொள்ளும் படி பணிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து சாவகச் சேரி மின்சார சபையால் 8 ஊழியர்கள் திருத்த வேலைக்கு அனுப்பப்பட்டனர்.

குறித்த நபர் மின் கம்பியுடன் தொடுகையுற்ற வேளை மின்சாரம் தாக்கி தூக்கி எறியப்பட்டதும் சக ஊழியர் அவரை ஏந்தியுள்ளனர்.

இருப்பினும் அவரது உயிர் பிரி... நிலையிலேயே உடல் காணப்ப... தாக சக ஊழியர் தெரிவித்தார்.

இவரது உடல் பளை ஆதாரவை... தியசாலைக்கு எடுத்துச் செல்லப்ப... பின் சாவகச்சேரி வைத்தியசாலை... ஒப்படைக்கப்பட்டது. (ச-9,2...

புதியதோர் உலகம் செய்வோம்
DCM 1ம் குறுக்குத் தெரு,யாழ்நகர் (வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்)
A/L 2012, 2013 கலைப் பிரிவு
புதிய பிரிவுகள் மற்றும் மீட்டல் வினாவிடை வகுப்புகள்
பொருளியல் வரதராஜன்
புவியியல் குமரன்
அரசியல் சுகாஸ்
அளவையியல் துரை
நாட. அரங்கியலும் ரமேஸ்
தமிழ் சந்திரலிங்கம்
இந்துநாகரீகம் ஸ்ரீஸ்
வரலாறு ஆனந்தன்
ஆரம்பம் 1 - 10 - 2011 சனி
நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
மாணவர்களின் தொகையல்ல எமது இலக்கு.
அவர்களின் தரமே எமது தாரக மந்திரம்.

காணி விற்பனைக்கு
யாழ். இந்துக் கல்லூரியின் சூழலிலும் மற்றும் கொக்குவில் சேர்ச் வீதியிலும் காணி உடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 078 3675241
(6447)

பெரியோர்களே! பெற்றோர்களே!
ஆசிரியர்களைக் கௌரவிப்பதற்குரிய
நினைவுச் சின்னங்களை
வடிவமைத்துப்
பெயர் பொறித்துப் பெற்றுக்கொள்ள
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
தொ.பே.:- 0212223490 077 8060267
இல. 06, ஜும்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி-4594)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக
மற்றும் நுழைவு மாணவர்களுக்கான
இலவச ஆங்கில இரண்டுநாள் வகுப்பு
அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்
பிரிவு 1 : 01.10.2011--12.30-2 மற்றும் 02.10.2011--12.30-2
பிரிவு 2 : 05.10.2011 காலை 11-1 மற்றும் 06.10.2011 காலை 11-1
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

நிரு ரியூசன் சென்ரர்
வாணிவிழாவும் பரிசளிப்பும்
காலம் : 01.10.2011 (சனி 1 மணி)
இடம் : கல்வி நிறுவனம்
பிரதம விருந்தினர்
திரு. மு. 'சண்'முககுமார் [அதிபர் யா/கோண்டாவில் இ.மா.வித்தியாலயம்]
சிறப்பு விருந்தினர்
திரு. அருணகிரிவாசன் [பிரதி அதிபர் யா/கோண்டாவில் இ.மா.வித்தியாலயம்]
பரிசில் வழங்குதல்
க.பொ.த. சாதாரணம் - 2010 9A எடுத்த மாணவர்கள்
செல்வன் யோ. லோஜீபன் [கொ.இ.க.]
செல்வி V. விந்தியா [கொ.இ.க.]
புலமைப்பரிசில் பரீட்சை 2011
செல்வி இ. தர்மினி [கொ.இ.ஆரம்ப பாடசாலை]
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
நிரு கல்வி நிலைய கல்விச் சமூகத்தினர்

# மரண அறிவித்தல்

## வீரகத்தி நாகமுத்து

(ஓய்வு பெற்ற பிரதம முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம் சண்டிப்பாய்)



நாரந்தனையை பிறப்பிடமாகவும், சண்ட லிப்பாய் மத்தி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்தி நாகமுத்து நேற்று 29.09.2011 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி முத்துப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ் சென்ற தம்பிராசா மற்றும் கனகம்மாவின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், யாழினி (சமுர்த்தி உத்தியோகத்தர், சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), கமலினி (இத்தாலி), வாசுகி, ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயகாந்தன் (மக்கள் வங்கி, கன்னாதிட்டி), இளங்கோவன் (இத்தாலி), உதயராஜ் (கிராம சேவையாளர், வேலணை பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாகித்தியா, சரணுஜா, இலக்கியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, சண்முகலிங்கம் மற்றும் அருளானந்தசிவம், காலஞ்சென்ற ராஜேஸ்வரி மற்றும் குமரகுருபரன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (02.10.2011) அன்று காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.
T.P.:- 0213211693

தகவல்:
குடும்பத்தினர்
(சி-4596)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது